www.tamilarangam.net

(113) (103) (116)

# சரிநிகர்

இதழ் 100 ஜுன். 27 - ஜுலை - 10, 1996 விலை 7.00

### சொல்லப்படாத ஒருசெய்தி

எந்த நிலத்தில்
இது விளைந்தது
நல்ல நீர் தந்தோம்
மண்ணில் வளமேற
உரமிட்டோம்
வெய்யில் தழுவும்
நூறுநூறாய் தாமரை பூக்கும்
என்று காவல் வைத்தோம்
பூச்சி விழுங்கும் கிண்ணிப் பூவாய்
ஆட்கொல்லிப் பிசாசாய்
வேலிதாண்டிக் கிளை விட்டு
மண்முழுதும் இரத்தம் சிந்தியது.

வீரம் நிறைந்த கைகளாய்
ஆயிரம்
வெளியில் தெரியுதென்று
புளகிக் கிடந்தோம்
வீசிய காற்றில்
சாம்பல் வெளிச்சிதறக்
குருதி உறைந்தது
அடியில் கிடந்தது
பச்சை இரத்தம் குடிக்கும் நெருப்போ?

எந்தக் கங்கையில்
இந்தக் கைகளைக் கழுவுவது?
ஊரிலோ ஆறுமில்லை
குளமும் வரண்டபடி
எந்தக் கைகளினைக்
குலுக்க விளைந்தோமோ
அந்தக் கைகளிலே
தீப்பந்தம் கொடுத்தோம்
எமது கூரைக்கு வீசுமென

எல்லோரும் தலைகளைக் குனிவோம்
தொலைவில்
நூறு வீடுகளின் அழுகைகளில்
வானை எட்டுகிற ஓலத்தில்
விம்மி வெடிக்கிற கண்ணீர்த் துளிகளில்
எமது துயரத்தைப்
பாதி கலக்க வைப்போம்

புல் படர்ந்த நிலத்தில்
வெள்ளையாய் நிமிர்ந்த விகாரைகளில்
ஆயிரம் வருடம் கழிந்தும்
மண்ணையே நம்பியோரின்
கண்களில் இப்போது இரத்தம்
எல்லாளன் தேர் தரித்த
சுவடுகளைக் காலம் மூடியது
மூடிய மண்ணின் வெளிமேற்பரப்பில்
இரத்தம் குடிக்கும் பேய்களின்
சுவடுகள்-

எப்படி உங்கள் முகத்தை
நோக்கி நிமிர்வோம்?
அழாதீர்
எம் மேலே அனலை வீசாதீர்
காத்திருக்கிறோம்
மனித நேயமற்றுப்போன
ஒவ்வொரு நாயையும்
வாலிலே கட்டித் தூக்கிலிடுவோம்
வெறியில் திரியும்
ஒவ்வொரு முகத்திலும்
காறி உமிழ்வோம்
மண்ணை, மனிதனை விட
மேலாகிவிட்ட துவக்குகளை
வீசி எறிவோம் கடலுக்குள்


நாங்கள் -
பகலுக்காய் காத்திருக்கிறோம்

**இளவாலை விஜயேந்திரன்**

(நன்றி:புதுசு)






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# யாழ் செய்திகள்



### சாராயம் இல்லை; ஆனால் கசிப்பு உண்டு

யாழ் நகரில் தற்போது மதுபானச்சாலைகள் இல்லை. சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கைக்கு முன்னர் வீதிகளில் அங்கும் இங்குமாக இவை செயற்பட்டன. மிஞ்சும் கள்ளில் இருந்து உற்பத்தியாகும் 'சாராயம்' பல வகைகளில் இங்கு விற்கப்பட்டது. அப்போது கொழும்புக் குடிவகைகளுக்கு தடை.

தற்போது கசிப்பு விற்பனை அதிகரித்துள்ளது. பகிரங்கமாக கசிப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. ஒரு வருமானம் தேடும் தொழிலாக இது நடைபெறுகிறது.

வடிசாராயம் குடித்தவர்கள் பலர் சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு வருகின்றனர் என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்கிறது அரசு. பொலிஸ் தலைமையகம் உண்டு. ஆனால், 'கசிப்பு' விற்பனையை தடை செய்ய முடியவில்லை.

### இது என்ன சுதந்திரம்?

யாழ். தபால் திணைக்களத்தில் பல எழுதுவினைஞர் வெற்றிடங்கள் இருப்பதால் தபால் ஊழியர்களின் பிள்ளைகளை விண்ணப்பிக்குமாறு வடமாகாண பிரதித் தபால் மா அதிபர் சுற்று நிருபம் மூலம் தபால் ஊழியர்களுக்கு அறிவித்திருந்தார்.

யாழ் பிரதம தபாலகத்தில் இச்சுற்று நிருபம் 20.05.96 கிடைத்த முத்திரையிடப்பட்டு அறிவித்தல் பலகையில் ஒட்டப்பட்டது! இதன் முடிவுத்திகதி 22.05.96 ஆனால் அன்று விடுமுறை நாள்.

விண்ணப்பதாரிகளின் சான்றிதழ்களின் பிரதிகளை சமர்ப்பிக்கும்படியும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் 'போட்டோ பிரதி' செய்யும் கடைகள் இன்னமும் வரவில்லை.

அத்துடன் மூன்று நாட்களில் எப்படி விண்ணப்பிப்பது? ஒரு தபால் ஊழியர் தனது பிள்ளையின் விண்ணப்பத்துடன் 23.05.96 பிரதி அஞ்சல் மா அதிபர் அலுவலகம் சென்றபோது 22.05.96 விண்ணப்ப முடிவுத்திகதி என அறிவித்தனர். 22.05.96 அன்று அந்த அலுவலகம் மூடப்பட்டிருந்தது அந்த ஊழியர் மன வேதனையுடன் திரும்பினார். முடிவுத் திகதியும் விடுமுறை தினம் எப்படி விண்ணப்பப்படிவத்தை கொடுப்பது என்று கூறினார்.

தபால் திணைக்கள உயர் மட்டத்தில் உள்ளவர்களின் பிள்ளைகள் இப்பதவிக்கு ஏற்கெனவே சேர்த்துக்கொள்ளப்பட்டு விட்டனர். அதனால்தான் இப்படி விண்ணப்பிக்க அறிவித்துள்ளனர் என்று தபால் ஊழியர்கள் கூறுகின்றனர்.

### அவங்கடை காலமும் இவங்கடை காலமும்

'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் (சதொச) யாழ் பிரதான வீதியில் திறக்கப்பட்டது. ஆனால், இடம் பெயர்ந்து வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் தங்கியவர்கள் மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பியதும் சதொசவுக்கு முன்பாக நீண்ட கியூ வரிசை தினமும் காணப்படுகிறது.

அரிசிக்குத்தட்டுப்பாடு. அதனால், அதிகாலையிலேயே மக்கள் சதொசவுக்கு முன்பாகக் கூடிவிடுவர். கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாது கியூவில் மக்கள் நிற்பர் காரணம் பொருட்கள் மலிவான விலை. அதாவது கொழும்பு விலை. முன்னர் கொழும்பு விலையை விட மும்மடங்கு விலையில் யாழ்ப்பாணத்தில் பொருட்கள் விற்கப்பட்டது தெரிந்தே.

ஆனால், சதொசவுக்கு முன்பாக உள்ள அங்காடி வியாபாரிகளும் அருகில் உள்ள அதாவது கோவில் வீதி சந்தியில் உள்ள கடைகளிலும் உள்ளவர்களுக்கு சதொசவில் செல்வாக்கு அதிகம்.

இவர்கள் சதொச ஊழியர்களுக்கு கள்ளு, கசிப்பு வழங்குகிறார்கள். அத்துடன் சதொசவில் விற்கப்படும் சில பொருட்கள் இவர்களால் கூடிய விலையில் விற்கப்படுகின்றன.

சதொசவுக்கு முன்பாக மக்கள் கியூவில் நிற்பதை ரூபவாஹினி, ஐ.ரி.என் தொலைக்காட்சி நிருபர்கள் அடிக்கடி படம் பிடிப்பர். ஏன் அமைச்சர்களும் அடிக்கடி வரும்போது அங்குள்ள மக்களிடம் பேசும்போது எல்லாப் பொருட்களும் வரும் என்று சொல்லிப்போகிறார்கள்.

சம்பா அரிசி, வெள்ளை நாடு, பச்சை அரிசி, ஒருவருக்கு இரண்டு கிலோ வீதம் விற்கப்படுகிறது. குத்தரிசி சாப்பிட்ட யாழ் மக்களும் வேறு வழியின்றி கியூவில் நின்று இவற்றை வாங்கிச் செல்கின்றனர். சதொச அதிகாரிகள், ஊழியர்கள் மக்கள் வெயிலில் கியூவில் நிற்பதைப் பார்த்துச் சிரிப்பார்கள். காலை 5 மணிக்கு கியூவில் நின்றவர் அவரது வாங்கும் நேரம் வரும்போது அரிசி முடிந்துவிட்டது என்று பதில் கிடைக்கும்

அரிசியின் இருப்பை பார்த்து நேரத்துக்கே முடியப்போகிறது அல்லது குறிப்பிட்ட சிலருக்கு அரிசி என்று கூறலாம். காலை 5 மணிக்கு வந்தவருக்கு பகல் 12 மணிக்கு அரிசி முடிந்து விட்டது நாளை வாருங்கள் என்றால் வந்தர்கள் எவ்வளவு வேதனைப்படுவர்; மனவேதனையுடன் வீடு திரும்புவர்.

'அவர்கள் எங்களை ஆட்டிப்படைத்து விட்டார்கள். இனி இவங்கள் ஆட்டிப் படைக்கிறாங்கள்' என்றும் கியூவில் நிற்பவர்கள் கூறுவார்கள்.

சதொசவில் பணிபுரியும் ஊழியர்களில் சிலர் அங்கு வரும் பெண்களை யுவதிகளை அழைத்து தனியாகப் பேசுவர். அழகுத் தமிழில் எங்கே வீடு, குடும்ப விபரம் போன்று கேள்விகள் கேட்டு நட்பு உறவு கொள்வர் மறுநாள் அப்பெண்களுக்கு நம்பர் கொடுப்பர் அல்லது கியூவரிசையின்றி பொருட்கள் வாங்க உதவி செய்வார்கள். இது பகிரங்கமாகவே நடக்கிறது.

17.05.96 சனிக்கிழமை 'சைக்கிள் ரயர் ரியூப் வழங்க ஏற்பாடாகியிருந்தது. அதிகாலையில் மக்கள் சதொசவுக்கு முன்பதாக கியூவில் கூடிவிட்டனர். சிலர் அருகில் உள்ள உறவினர் வீடுகளில் தங்கி 2,3, மணிக்கே வந்துவிட்டனராம். காலை 8.30 மணிக்கு சதொச திறக்கப்படும் போது கியூவில் நின்றவர்களிடம் நான் முந்தி நீ முந்தி என்று வாக்குவாதம் ஏற்பட்டு கைகலப்பாக மாறியது.

பிரதான வீதியில் இருந்து கோயில்வீதி ஆஸ்பத்திரிவீதி சந்தி வரை கியூ வரிசை காணப்பட்டது. இந்தக் கைகலப்பை நிறுத்தி அமைதியை ஏற்படுத்த சதொச ஊழியர்கள் இருவர் முயன்றபோது ஒரு ஊழியர் தாக்கப்பட்டுவிட்டார். தாக்கிய நபர் தப்பி ஓடிவிட்டார்.

எமது ஊழியருக்கு அடித்து விட்டீர்கள். சமான் தர முடியாது. இன்று ரயர் ரியூப் விற்கப்படாது என்று உடனும் 'போர்ட்' எழுதிப்போடப்பட்டது. ஜனாதிபதிக்கு போய் சொல்லுங்கள் ஜீ. ஏக்கு போய் சொல்லுங்கள் நாங்கள் போகிறோம் இன்று திறக்கமாட்டோம். அடித்தவனை பிடித்து தாருங்கள் அவன் மன்னிப்பு கேட்டாலே பொருட்கள் தருவோம். எல்லோரும் போகலாம் என முகாமையாளர் கூறினார்.

கியூவில் நின்றவர்களில் சில பெரியவர்கள் இச்சம்பவத்துக்கு வருந்துவதாகவும் தயவு செய்து பொருட்களை வழங்குமாறும் கெஞ்சினர். நேரம் 10 மணியாகியது. சில இராணுவ வீரர் வரவழைக்கப்பட்டு மக்கள் ஒழுங்காக நிறுத்தப்பட்டு ரயர், ரீயூப் மற்றும் பொருட்கள் விநியோகிக்கப்பட்டன.

சதொசவுக்கு வரும் பொதுமக்களின் பொதிகள் சோதனயிடப்பட்டே பொருட்கள் வாங்க அனுமதிக்கப்படுகின்றனர்.

இப்படியான அனுபவங்களை யாழ் மக்கள் பெறுகின்றனர். அரிசிக்காக பிற இடங்களில் இருந்தும் சதொசவுக்கு மக்கள் வருகின்றனர். அரிசி இன்றி எப்படி யாழ் மக்கள் வாழப்போகிறார்கள் அரிசி கிடைக்குமா? வருமா?

*யாழூரான்*

# நூறு இதழ்கள் ஆறு வருடங்கள்! ஆறாத துயரங்கள்!

முதலாவது சரிநிகர் வெளியாகிச் சரியாக ஆறு வருடங்கள். இந்த ஆறு வருடங்களில் எங்களுடைய அரசியல், கலை, வாழ்க்கை, இவையனைத்தையும் பல்வேறு தீவிர மாறுதல்களுக்குள்ளாக்கிய நிறைய விஷயங்கள் நடந்தேறியுள்ளன. வீடற்றவர்களாய் அந்நியராய் எப்போதுமே இங்கும் எங்கும் எதிர்க் காற்றில் நடைபோடவேண்டியவர்களாகவே இருக்கிறோம். எங்களைப் போலவே சமூகமும், சமூகத்தைப்போலவே நாங்களும் 'ஓடுகாலி''களாகி விட்ட நிர்ப்பந்தம். இந்தச் சூழலில் சென்றொழிந்த ஆறு வருடங்களைத் திரும்பிப் பார்ப்பது ஒரு விமர்சனக் கணக்கெடுப்புக்கு உதவலாம் என்ற நம்பிக்கையில் இதனை எழுதுகிறேன்.

•••

சரிநிகர் ஆரம்பித்த அந்த வருடமே எங்களோடு நெருக்கமாகப் பணிபுரிந்தவரும் சரிநிகரின் பிறப்புக்கு முக்கியமான பங்காற்றியவருமான நண்பன் குகமூர்த்தி கொழும்பில் ''காணாமல்'' போய்விட்டார். அவருக்கு என்ன நடந்தது என்றோ அல்லது அவரைக் ''கடத்திக்கொண்டு'' போனவர்கள் யார் என்பது பற்றியோ இன்றுவரை ஒன்றுமே தெரியாது. எல்லா விசாரணைக் கொமிஷன்களிலும் குகமூர்த்தி பற்றிய ஃபைல் இறப்பில் தூங்குகிறது. குகமூர்த்தி ஆறாத துயர் என்றால், இத்தகைய துயரங்களின் பெருக்கம்தான் எங்களுடைய யதார்த்தம். செல்வி, தில்லைநாதன் என்று ''காணாமல்'' போன எம் நண்பர்களின் பட்டியல் யாழ்ப்பாணத்திலும் நீள்கிறது.

•••

1990 ஜுன் மாதம் சரிநிகர் வெளிவர ஆரம்பித்தபோது சுதந்திரமாக கருத்துக்களையும் செய்திகளையும், வெளியிடவும், மாற்றுக் கருத்தின் மதிப்பைப் பேணவும் இலங்கையில் ஒரு தமிழ்ப் பத்திரிகையாவது இருக்கவில்லை. ''தமிழர் இயக்க'' அரசியலின் சாதக, பாதக விளைவுகள் பற்றித் திறந்த மனதுடன் விவாதிக்க எந்தத் தளமுமே, இருக்கவில்லை. தேசிய விடுதலை என்பது எவ்வாறு வெறுந் தேசியவாதமாகச் சீரழிந்து போயிற்று என்பது குறித்து மீள்பார்வை மற்றும் ஜனநாயக அக்கறைகளுடன் அரசியல் கலாசாரத் தளங்களில் எங்களது பத்திரிகையூடாக இறங்கியபோது விரல்விட்டு எண்ணக் கூடியவர்களைத் தவிர வேறு எவருமே எமக்குப் புனைபெயரில் கூட எழுத மறுத்தனர். கடைக்காரர்கள் பத்திரிகையை விற்கப் பயந்தனர். விநியோகிக்க எவருமே முன்வரவில்லை. அச்சமும், விரக்தியும், ஆற்றாமையும் மேலோங்கியிருந்த ஒரு சூழல் அது. வடக்கில் புலிப் பயங்கரமும். தெற்கில் பிரேமதாசவின் கறுப்புப்பூனைப் பயங்கரமும் பேச்சுச்சுதந்திரம், எழுத்துச்சுதந்திரம் என்பவற்றை (வேறு பலவுடன்/ வேறு பலருடன் சேர்த்துத்) தின்று தீர்த்த காலம் அது. புலம்பெயர்ந்தவர்களிடமிருந்து மட்டுமே எதிர்ப்புக் குரல்கள் சிறு சஞ்சிகைகளாக ஆங்காங்கே ஒலித்துக் கொண்டிருந்தன. இந்நிலையில் மாற்றுக் கருத்துக்களை வெளியிடுதல், மறைக்கப்பட்டவற்றை வெளியே கொண்டு வருதல், பத்திரிகைச் சுதந்திரத்தையும் எழுத்துச் சுதந்திரத்தையும் பேணுவதற்கு உயிர்ப்புடன் பணிபுரிதல் என்பன எமது கோட்பாடாக மட்டுமன்றிச் சரிநிகரின் அடிப்படை இருத்தலியல் தேவைகளாகவும் இருந்தன. இவற்றுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டிய தேவையிருந்ததால், அரசியல் போராட்டத்தில் கலாசாரத் தளத்தில் செழுமையையும் இன்றியமையாமையையும் வலியுறுத்துவது என்கிற முக்கியமான பணியை ஆரம்பத்தில் எம்மால் போதுமான அளவுக்குச் செய்ய முடியவில்லை. மாற்றுக் கருத்துக்களையும் விமர்சனங்களையும் வெளியிடுவது, மறைக்கப்பட்ட செய்திகளை, ஊழல்களை அம்பலமாக்குவது ஆகிய அம்சங்களில் எவ்வாறு வெற்றிகரமாகத் தொழிற்பட்டிருக்கிறோம் என்பதற்கு எம்மீது இடம்பெற்று வரும் தாக்குதல்களே சாட்சி. வாசகர் கடிதங்களைப் பிரசுரிப்பது, முக்கியத்துவம் கொடுப்பது என்பது ஈழத்துப் பத்திரிகைத் துறையின் பாரம்பரியத்திலேயே இல்லாத ஒன்று என்பதை நினைப்பில் கொண்டால், இதன் முக்கியத்துவத்தை இலகுவில் விளங்கிக் கொள்ளலாம்.

•••

1990 ஜுனுக்குப் பிற்பாடு அதாவது ஈழப்போர் 11 ஆரம்பமான பிறகு தென்னிலங்கையின் இடதுசாரி மற்றும் ஜனநாயக சக்திகளுக்கும் வடபுலத்து அரசியல் அராஜகத்திலிருந்து உயிர்பிழைத்து வெளியேறிய விடுதலைச்சக்திகளுக்கும் இடையே புரிந்துணர்வும் வேலை இணக்கமும் ஏற்பட்டன. இலங்கையின் வரலாற்றிலேயே மிக அதிகளவுக்குத் தமிழ் - சிங்கள, சிங்கள - தமிழ் மொழிபெயர்ப்புக்கள் பத்திரிகைத்தளத்திலான பரிமாற்றங்கள், கலை, கலாசார முயற்சிகளில் ஒத்துழைப்புக்கள் நிகழ்ந்தது இந்தக் காலகட்டத்தில்தான். நிறுவனமயப்பட்டிருந்த எந்த இடதுசாரிக் கட்சியும் எந்த 'முற்போக்கு'' நிறுவனமும் செய்ய முடியாத அல்லது செய்யத் தவறிய காரியங்களை மேற்படி சக்திகள் எவ்வித இயக்க/ கட்சி/அரசு சார்பற்றுச் செய்தன என்பது கவனத்திலெடுக்கப்பட வேண்டும். இந்தச் சக்திகளின் அரசியல் இணக்கம் என்பது சமத்துவம், சிறுபான்மைத் தேசிய இனங்களின் சுயநிர்ணயம் என்ற அடிப்படையில்தான் கட்டியமைக்கப்பட்டிருந்தாலும் இத்தகைய அரசியலிணக்கத்துடன் கூடிய நாளாந்த வேலைத் திட்டம் எப்போதுமே சீரான உணர்திறனுடனும் சுமுகமாகவும் இருந்து வந்தது என்பதல்ல. கடந்த ஐம்பது வருடகால இலங்கை அரசியல் வரலாற்றில் சிறுபான்மைத் தேசிய இனங்களுடனான உறவிலும், அரசியல் போக்கிலும் விரவியிருந்த பேரினவாதமும் இந்நிலைக்குக் காரணம் என்றாலும் இன்னொரு முக்கியமான அம்சமும் இருக்கிறது. கொள்கை அடிப்படையில் சுயநிர்ணயம், உரிமைகள் என்பவற்றை இவர்கள் ஏற்றுக்கொண்டிருந்தாலும் நாடளாவிய ரீதியில் சிறுபான்மைத் தேசிய இனங்கள் அனுபவிக்கும் அன்றாட இனவாதம் (Daily Racism) பொது நிறுவனங்கள், பொதுசனத் தொடர்பு ஊடகங்கள், மொழிசார் விஷயங்கள், கலாசாரம் போன்றவற்றில் சிறுபான்மைத் தேசிய இனங்களுக்குக் கிஞ்சிற்றும் பிரதிநிதித்துவம் (Representation) இல்லை. - இவ் விஷயங்களில் இவர்கள் முற்றாகவே உணர்திறன் அற்றிருந்தனர். அந்த வகையில் அதிகாரத்தின் ஒரு முகமாகவே மறைமுகமாக இவர்கள் தொழிற்பட்டு வந்திருக்கிறார்கள். மறுபுறத்தில் எங்கள் தரப்பிலும் கருத்துக்களும், அபிலாஷைகளும், அரசியல் கண்ணோட்டமும், ஆரம்பத்தில் நொந்துபோன ஆத்துமத்தின் குரலாகவே (Victim's Voice) மேலெழுந்தது. எனினும் சாதகமான ஆக்கபூர்வமான வழிமுறையொன்று ஆரம்பமாயிற்று என்பது உண்மை. கடந்த ஆறு வருடங்களில் இந்த வழிமுறைக்குச் சரிநிகர் செழிப்பான அத்திவாரமிட்டிருக்கிறது என்பதைச் சரிநிகரைத் தொடர்ந்து படிப்போர் உணர்வர். கடந்த இரண்டரை வருடங்களாகத்தான் சரிநிகரின் வாசகர் தொகை பல்கிப் பெருகி இருக்கிறது என்பதால், எமது புதிய வாசகர்களுக்கு இந்தப் பின்னணி தெரிந்திருப்பது அவசியம்.

•••

சுதந்திரமாகவும், கட்சி அரசு சார்பற்றும் இயங்கி வந்த நமது தென்னிலங்கை நேச சக்திகள் பல பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு பதவிக்கு வந்த பிற்பாடு அரசாங்க சார்பு நிலைப்பாடு எடுத்தமையும் - இவர்களில் பலர் அரசின் அங்கமாக மாறிவிட்டமையும் பாரிய பிரச்சினைகளாக உருவெடுத்தன. இவற்றின் விளைவுகளை அடுத்த இதழில் பார்ப்போம்.

- சேரன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வாளேந்திய குரங்கும் ஆணையிட்ட மன்னனும்!

'ரணில்கே கட்டே பிட்டு'

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவுடனான ஜனாதிபதியின் சந்திப்புக் குப் பிறகு, அச்சந்திப்புக் குறித்து கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி அவர்கள் கூறிய கூற்று இது.

ரணிலின் வாயிலே பிட்டு என்பது இதன் அர்த்தம்.

அதாவது, பேச்சுவார்த்தையின் போது ரணில் வாயைத் திறக்கவில்லை என்பது இதன் பொழிப்பு.

மிகவும் அமைதியாகவும், ஆரோக்கிய மாகவும் நடைபெற்ற ஒரு பேச்சுவார்த்தை தொடர்பாக, பொறுப்புமிக்க ஜனாதிபதி அவர்கள் இவ்வாறு தெரிவித்திருப்பது அவர் ஐ.தே.கவுடன் ஒரு மோதல் நிலைமையைத் தொடரவே விரும்புகிறார் என்பதையே காட்டுகிறது என்கிறார் எதிர்கட்சித் தலைவர்.

ரணிலுடனான சந்திப்புக்குப் பிறகு சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க அறிவித்துள்ள இந்த சொட்டைத்தனமான அறிவிப்பு அவரது இராஜதந்திர நடவடிக்கைகள் குறித்து பலத்த சந்தேகங்களை எழுப்பி விட்டுள்ளது.

தாம் வகிக்கும் பதவி, தமக்கு மக்கள் வழங்கியுள்ள அதிகாரம் காரணமான (அவர் அடிக்கடி பெருமையுடன் தனக்குக் கிடைத்த 62% வாக்குகள் பற்றி சொல்லிக் கொள்வார்) பொறுப்பு என்பன பற்றிய பிரக்ஞை ஏதுமற்ற ஒருவர் பேசுவது போல, செயற்படுவது போலவே ஜனாதிபதியின் போக்குகள் அமைந்துள்ளன.

இத்தகைய போக்கு ஒரு ஜனாதிபதியிடம் இருப்பது மிகவும் ஆபத்தானது என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

இந்த இடத்தில்ஒரு பழைய கதை ஞாபகத்துக்கு வருகிறது:

தான் வளர்த்த ஒருகுரங்கின் கையில் வாளொன்றைக் கொடுத்து விட்டு, என்மீது யார் தொட்டாலும் இரண்டாக வெட்டிப் 'போட்டுவிடு என்று கூறிவிட்டு தூங்கினானாம் ஒரு அரசன். அவனது உடலில் ஒரு ஈ வந்து உட்காரவே, குரங்கு தனது கடமையை சிரமேற் கொண்டு அந்த ஈயை இரண்டாக வெட்டிப் போட்டது. பரிதாபம் என்னவென்றால் அந்த ஈ மட்டுமல்ல, மன்னனும் கூட இரண்டு துண்டாகிப் போனான் என்பதுதான்.

இந்தப் பழங்கதையில் வருகின்ற குரங்கின் நடவடிக்கைகளை நினைவுக்குக் கொண்டு வருகிறது ஜனாதிபதியின் நடவடிக்கைகள்.

ஜனாதிபதியின் அரசியல் சாணக்கியம், அவரது ஜனநாயகம், மனிதாபிமானம் என்பவை குறித்து கேள்வி கேட்பதே அபச்சாரம் என்று கருதும் பொ.ஐ.மு பூசாரிகளையும், தொண்டரடிப் பொடி களையும் விட்டுவிடுவோம். இவர்கள் மகாத்மாகாந்தியின் ஜப்பானியக் குரங்குப் பொம்மைகள் குறிப்பிடும் தீயனவற்றைப் பார்க்காதே, தீயனவற்றைக் கேட்காதே, தீயனவற்றைப் பேசாதே என்பதிலுள்ள 'தீயனவற்றை' என்பதற்குப் பதிலாக 'உண்மைகளை' என்று போட்டு வைத்திருக்கிறார்கள். இந்த ஆபத்தான ராஜதந்திரத்தினையிட்டு ஜனாதிபதியின் ஆளும் பொ.ஐ.முவிலுள்ளவர்களே கேள்வி எழுப்பும் போதும், இவர்கள் அசைந்து கொடுக்கப் போவதில்லை. ஒருவேளை ஜனாதிபதியே கூட தான் செய்வது தவறுதான் என்று ஒப்புக் கொண்டாலும் கொள்வாரே ஒழிய இவர்கள் ஒப்புக் கொள்ளப் போவதில்லை.

நாம் விடயத்துக்கு வருவோம்.

சந்திரிகா அரசாங்கத்தினதும் அரசினதும் தலைவராக முடிசூடிக் கொண்ட பின் நடந்த மூன்று விடயங்களை மட்டும் இங்கே சுட்டிக் காட்டுவது அவரின் இராஜதந்திரத்தின் ஆபத்துப்பற்றி புரிந்து கொள்ளப் போதுமானது.

ஆட்சிக்கு வந்தவுடன் அவர் புலிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடத் தொடங்கினார். 1994ல் அரசாங்கத்தின் விஞ்ஞாபனமாக வெளியிடப்பட்ட, தமது புகைப்படத்தை அட்டைப்படமாகக் கொண்டு வெளிவந்த பிரசுரத்தில், நாட்டின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக எந்த இயக்கத்துடன் பேச வேண்டுமென அவர் கூறிவந்தாரோ அதே புலி இயக்கத்தை கொலைக் கும்பல் (Murderous Gang) என்று அறிவித்தார். அதன் பின்னான பேச்சுவார்த்தைக் காலம் முழுவதும் அவர் தொடர்ச்சியாக செய்துவந்த அறவிப்புக்கள் எல்லாம், புலிகளை படுகொலையாளர்கள், தமிழ் மக்கள் மத்தியிலிருந்து ஒதுக்கப்பட வேண்டியவர்கள், எமது அரசியல் தீர்வு அவர்கள் மீது அமுக்கத்தைக் கொடுக்கும், பிரபாகரன் ஒரு மனோவியாதி பிடித்தவர் போன்ற அர்ச்சனைகளாகவே இருந்தன. இவ்வாறான ஒரு பகிரங்கமான அறிவிப்பை ஒரு அரசுத் தலைவர் அறிவிக்கும்போது, அதன் பிரதிபலிப்புக கள் கீழ் மட்டத்தில் அதுவும் இனவாதப் போக்கு பலமாக இருக்கும் அரச இயந்திரத்தின் கீழ் மட்டத்தில் எப்படிப் பிரதிபலிக்கும் என்பதைச் சொல்லித் தெரிய வேண்டுமென்பதில்லை.

பேச்சுவார்த்தையின் போது பரஸ்பர நம்பிக்கையையும், புரிந்துணர்வையும் வளர்த்தெடுக்க வேண்டிய விதத்தில் நடந்து கொள்ள வேண்டிய ஒரு ஜனாதி

**நாசமறுப்பான்**

பதி, தமக்கு வாக்களித்தவர்களது அபிப் பிராயங்களை விட வேறு யார் யாரையோ வெல்லாம் தாஜா பண்ண விரும்பி இவ்வாறு நடந்து கொண்டார். ஏற் கெனவே தயக்கத்துடனும், சந்தேகத்து டனும் பேச்சுவார்த்தைக்கு வந்த புலிகளை மேலும் சந்தேகத்துக்குள்ளாக்கிய மாபெரும் வரலாற்றுப் பணியை அவர் தொடர்ந்து செய்து வந்தார்.

முடிவு, பேச்சுவார்த்தை முறிந்து யுத்தம் வெடித்தது.

இரண்டாவதாக, அண்மையில் நடந்து முடிந்த மின்சாரசபை ஊழியர்களது வேலை நிறுத்தம். இந்த வேலை நிறுத்தக் காரர்களுடன் சமரசம் செய்யும் முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டே, அவர்கள் நாசகார வேலைகளில் ஈடுபடுகி றார்கள் என்று அறிவிக்கப்பட்டது, வேலை நிறுத்தத் தடைச்சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. ஆயுத முனையில் தொழிலாளர்கள் வேலைக்குத் திருப்பி அழைத்துவரப்பட்டார்கள். பிரச்சினை யைத் தீர்க்க முனைந்த ஆளும் கட்சியின் மல்பரி குறுப் உறுப்பினர்களைக்கூட கண்டனம் செய்தார் ஜனாதிபதி.

பேச்சுவார்த்தை, சமரசம் என்ற விடயத்தில், மின்சார சபை போன்ற ஒரு அமைப்பின் தொழிற்சங்கப் பிரச்சினை யைக் கையாளுவதற்குக் கூட அவருக்கு நிதானமோ பொறுப்புணர்வோ இருக்க வில்லை. ஒருபுறம் சமரச முயற்சி நடை பெறுகையில் மறுபுறம் அதை உடைக்கும் செயலை ஜனாதிபதி செய்து கொண்டி ருந்தார்.

மூன்றாவது விடயம் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கவுடனானது. பாராளுமன்றத்தில் மிகச் சிறிய பெரும்பான்மையுடன் ஆட்சியிலிருக் கிறது தனது அரசாங்கம் என்பதையோ, தாம் மக்களுக்கு கொடுத்துள்ள வாக்குறுதி கள் மிகப் பெரிய வாக்குறுதிகள் என்பதையோ பற்றிய நிதானம் இன்றி, அக்கட்சியின் ஒத்துழைப்பு இப்பிரச்சினை களை தீர்க்க அவசியம் என்பதையிட்டு எந்த அக்கறையும் இல்லாமல் அக்கட்சியை அம்பலப்படுத்துவதில், அதுவும் குறிப்பாக அதன் தலைவர் ரணில் வி க் கி ர ம சி ங் க வை அவமானப்படுத்துவதில் பிரதான கவனம் செலுத்தி வருகிறார் ஜனாதிபதி.

ஒருபுறம் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்று கூறி தாம் முன்வைத்த அரசியல் தீர்வை ஐ.தே.க ஆதரிக்க வேண்டும் என்று கோரும் அதேவேளை, அக்கட்சியின் தலைவரை முதுகெலும்பில்லாதவர், அவர் வாயிலே பிட்டு என்பன போன்ற சொட்டைச் சொற்களால் அவமதித்தும் வருகிறார்.

ஐ.தே.கவின் 17 வருட கால ஆட்சியும் அதன் மனித விரோதப் போக்கும் இனங்காணப்பட்டதாலே தான் மக்கள் அக்கட்சியை நிரகாரித்தார்கள் என்பதை ஜனாதிபதி மறந்து விட்டாரோ என்னவோ, இன்னமும் அதை மக்கள் மத்தியில் அம்பலமாக்குவது அவசியம் என்பதே அவரது குறிக்கோளாக உள்ளது. நீதி விசாரணைகள், கமிசன்கள் என்று நீளும் இந்த நடவடிக்கைகள் மூலமாக சாதிக்கப்படப் போவது என்ன? நிராகரிக் கப்பட்ட ஐ.தே.க மீது தொடர்ச்சியாக மேலும் மேலும் அவர்களது கடந்தகால குற்றங்களைச்சொல்லி சுமத்துவதன் மூலம் தாக்குதல் தொடுப்பது எதை சாதிக்கப் போகிறது?

நாம் இப்படி எழுதும் போது இத்தகைய விசாரணைகள் தேவையற்றவை என்ற அர்த்தத்தில் சொல்லவில்லை. ஆனால் ஒரு அரசாங்கம் தனது இருப்பை இவற்றின் மூலம் மட்டுமே தக்கவைத்துக் கொள்ள முயல்வது பயனற்றது என்ப தையே சொல்ல வருகிறோம்.

வெறும் பயனற்றது மட்டுமல்ல, சமகாலத் தில் செய்யப்பட வேண்டிய விடயங்களை செய்யாமல், செய்ய முடியாமல் செய்வதற்கே இது உதவும் என்ற ஆபத்தையும் இது கொண்டிருக்கிறது.

ஐ.தே.க புலிகளுடன் கூட்டுச் சேர்ந்துள்ள கட்சி என்பது போன்ற பிரச்சாரங்கள் இந்த அரசாங்கம் நடைமுறையில் மக்களுக்கு பயனுள்ளதாக எதையுமே செய்யாமல் இருப்பதற்கு மட்டுமே உதவும். மக்களுக்கு இந்த அரசாங்கத்தின் இத்தகைய போக்கில் கிடைக்கப் போவதெல்லாம், சில வெற்றுப் பழங்கதைகள் மட்டுமே!.

ஆக, இம் மூன்று விடயங்களும் ஜனாதிபதியின் அரசியல் நடைமுறைத் தந்திரம் என்ன என்பதை இனங்காட்டப் போதுமானவையாக உள்ளன.

பகிரங்கமான அம்பலப்படுத்தல் மூலமாக தமக்குச் சார்பாக மக்களைத் திரட்டுவது, அந்த ஆதரவினைப் பயன்படுத்தி எதிர்ப்புச் சக்திகளை அது புலி ஆகட்டும் ஐ.தே.க. ஆகட்டும் அல்லது மின்சார சபை ஊழியர்கள் ஆகட்டும், அவர்களை

→14

# "விசாரிக்கப்பட முடியாத குற்றவாளி ஜனாதிபதி!"



-வாசு

பொ.ஐ.மு அரசாங்கத்தின் தனியார் மயமாக்கல் கொள்கைகளை பகிரங்கமாகவும் வன்மையாகவும் கண்டித்து வருகிறது அந்த அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் லங்கா சமசமாஜக் கட்சி. பொறுப்பான மந்திரிப்பதவியான கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் பதவி வகிப்பவராக லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவரான பேர்னாட் சொய்சாவே இருந்த போதிலும் கூட அவசரகாலச் சட்டத்தை தொடர்வது அண்மையில் நடைபெற்ற மின்சார சபை ஊழியர்களின் வேலை நிறுத்தத்தை மோசமான முறையில் ஒடுக்கியது தனியார் மயமாக்கல் கொள்கையைத் தொடர்வது போன்ற நடவடிக்கைகளை இக்கட்சி தொடர்ந்து எதிர்த்து வருகிறது. சண்டே ரைம்ஸ் இதழில் வெளியான வாசுதேவ நாணயக்கார அவர்களின் பேட்டியிலிருந்து சில பகுதிகளை இங்கே தருகிறோம். அரசின் ஜனநாயக வேசத்தை வாசுதேவ நாணயக்காரவின் இப்பேட்டி தெளிவாக இனங்காட்டுகிறது. பொ.ஐ.முன்னணி அரசாங்கத்தின் ஆரம்ப காலங்களில் வாசுவிடம் நிலவிய மயக்கங்களிலிருந்து இப்போது விடுபட்டு வருகிறார் என்பதை இப்பேட்டி காட்டுகிறது.

**ஒவ்வொரு தடவையும் அவசரகாலச் சட்டம் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படும் போதும் அதில் கலந்து கொள்ளாமல் விடுவது, லங்கா சமசமாஜக் கட்சியை நெஞ்சுரம் குறைந்த ஒரு கட்சியாக காட்டவில்லையா? ஏன் இந்த விவாதத்தில் கலந்து கொண்டு இதற்கு எதிராக வாக்களிப்பதன் மூலமாக கட்சி தனது உறுதியான நிலைப்பாட்டைக் காட்டக் கூடாது?**

கலந்து கொள்ளாமல் விடுவது ஒரு வகையில் இந்த நீடிப்பை நிறுத்துவதற்கு தூண்டுகின்ற ஒரு நடவடிக்கையாகும்.

**மின்சாரசபை ஊழியர்களது வேலை நிறுத்தத்தை ஒடுக்குவதற்குப் பயன்பட்ட இந்த அவசரகால சட்டத்தைப் பயன்படுத்தி, தொழிலாளர்களை ஆயுத முனையில் வேலைக்குத் திரும்பச் செய்திருக்கையில் சென்ற முறை அவசரகால சட்ட நீடிப்பிற்கான விவாதத்தின் போது அதற்கெதிரான நீங்கள் வாக்களித்திருக்க வேண்டாமா?**

அவசரகால சட்டம் தொழிலாளர்களது வேலை நிறுத்தத்திற்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டது என்பதையும் எமது கடந்த மே தின ஊர்வலத்தை நிறுத்த உபயோகிக்கப்பட்டது என்பதையும் நான் ஒப்புக்கொள்கிறேன். மேதின ஊர்வலம் தடுக்கப்பட்டதை நாம் எந்தவிதமான தயக்கமும் இன்றிக் கண்டித்திருக்கிறோம். ஆனால்; அவசரகாலச் சட்டத்தை நாம் எதிர்க்கும் அதே வேளை; இந்த பொ.ஐ.மு அரசாங்கம் தோல்விக்குள்ளாவதை நாம் விரும்பவில்லை.

**ல.ச.ச.கட்சியை மதிப்பவர்கள் பலர் கட்சித் தலைவர் பேர்னாட் சொய்ஸா மந்திரிப் பதவியிலிருந்து விலகியிருக்க வேண்டும் என்று எதிர்ப்பார்க்கிறார்கள். உங்களது அபிப்பிராயம் என்ன?**

என்னுடைய நிலைப்பாடு என்னவென்றால்; எமது தலைவர்கள் இந்த அரசாங்கத்தில் பதவி வகிக்கக் கூடாது என்பதுதான். ஏனென்றால் இந்த அரசாங்கத்தின் போக்கு எமது கட்சியின் (லசசக) அடிப்படைகளுடன் முரண்பட்டு வருகிறது. என்னுடையதும் பிறருடையதும் நிலைப்பாடு அவர் இப்போது விலகவேண்டும் என்பதுடன் அவர் இந்தப் பதவியை ஏற்றிருக்கவே கூடாது என்பது தான்.

**ல.ச.ச.கட்சி மின்சார சபை ஊழியர்களது வேலை நிறுத்தத்தை ஆதரிக்கவில்லை அல்லது இந்த விடயத்தில் அக்கறை அற்ற போக்கையே கடைப்பிடித்தது என்பது போன்ற அபிப்பிராயங்கள் நிலவுகின்றனவே அது பற்றி...**

அது தவறானது. நாம் முழுமனதுடன் இந்த வேலை நிறுத்தத்தை ஆதரித்தோம் இந்த வேலைநிறுத்தத்தில் முன்னணியில் நின்ற டபிள்யு.ஆர்.லென்றி மின்சார சபையிலுள்ள எமது தொழிற்சங்கத்தின் தலைவராவார். வேலை நிறுத்தத்திற்கு முன்னரே எமது கட்சிச் செயலாளர் பற்றி வீரக்கோனுடன் அவர் நெருக்கமான தொடர்பு வைத்திருந்தார். இந்த வேலை நிறுத்தத்திற்கு லங்கா சமசமாஜக் கட்சியின் முற்றுமுழுதான ஆதரவு இருந்தது.

இந்த அரசாங்கம் வேலை நிறுத்தத்தை கையாண்ட விதத்தையும்; அது நடாத்திய வேட்டையாடலையும் (Witch hunt) நாம் கண்டித்தோம். உண்மை என்னவென்றால் மின்சார சபையில் எமது தொழிற்சங்கம் பலமான ஒன்றல்ல என்பதால் இந்த வேலை நிறுத்தத்தை நாமே நடாத்தியதாக சொல்லமுடியாது. இதை நடாத்தியது நாங்களல்லவே என்பது குறித்து எனக்கு மிகவும் மனத்தாங்கல் தான்.

**தொழிலாளர்களைத் துப்பாக்கி முனையில் வேலைக்கு திரும்பச் செய்தது குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

ஜனாதிபதி இவ்வாறு ஒரு பேட்டியில் சொன்னார்; இப்படி செய்தார் என்பது நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று. நான் ஒன்றை சொல்லலாம் என்று நினைக்கிறேன்: இதற்காக இந்த நாட்டின் சாதாரண குற்றவியல் சட்டத்தின் கீழேயே அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க முடியும். ஆனால் அவர் ஜனாதிபதியாக இருக்கும் காரணத்தால் (அவருக்குள்ள சட்டரீதியான பாதுகாப்பு வசதி காரணமாக) அவருக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் எதையும் எடுக்கவியலாததால் ஒன்றும் செய்ய முடியாதுள்ளது. இங்குள்ள எந்தச் சட்டமும் ஜனாதிபதி இப்படி நடக்க வாய்ப்பளிக்கவில்லை.

→14

www.tamilarangam.net



# அரசின் நலனுக்கான அஷ்ரப்பின் நாடகம்!

**"அபூநிதால்" பற்றி பலத்த வாதப் பிரதிவாதங்கள் எழுந்துள்ள நிலையில் மீண்டுமொரு முக்கிய விடயத்தை எழுதுவது அபூநிதாலின் கடமையாகிறது.**

**குழம்பிய குட்டையில் மீன்பிடிக்கும் அரசியல்வாதிகளின் செயல்வரிசையில் இப்போது புதிய மீன்பிடிக்கும் வேலை ஆரம்பமாகியிருக்கிறது. குட்டையைக் குழப்புவது முஸ்லிம் காங்கிரஸ் என்ற வகையில் அதற்கான வழி அல்லது பொறுப்பு ஒவ்வொரு முஸ்லிமையும் சார்ந்தே ஆக வேண்டும்! இப்பொறுப்பின் அடிப்படையில் நாம் இன்றைய பேரினவாதத்தின் திட்டமிட்ட சதிக்குப்பலியாகி இருப்பது குறித்து ஒவ்வொரு முஸ்லிமும் சிந்திக்க வேண்டாமா? இதற்காக வருத்தப்பட வேண்டாமா? நாம் நமது அரசியல் உரிமைகளுக்காகப் போராடுவோம்! மற்றைய இனங்களின் அபிலாஷைகளுக்கு, கோரிக்கைகளுக்கு தடைக்கல்லாக இல்லாமல்....**

கிழக்குத் தமிழர்களுக்கு தனிக்கட்சி வேண்டுமா? வேண்டாமா? இது கிழக்கில் வாழும்தமிழர்கள் தீர்மானிக்க வேண்டிய விடயம்! இந்த விடயத்தில் முஸ்லிம்கள் மூக்கை நுழைப்பது முஸ்லிம்களின் எதிர்காலத்திற்கு ஆரோக்கியமற்ற நிகழ்வுகளையே கொண்டு வந்து சேர்க்கும். ஆனால், நடப்பது வேறு. முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரஃபின் முழு ஆதரவுடன் கிழக்கு தமிழர்களுக்கான தனிக்கட்சி அமைக்கும் முயற்சிகள் இப்போது ஆரம்பித்து விட்டன. இந்நிலையில் முஸ்லிம் காங்கிரசின் இப்பணி குறித்து முஸ்லிம்கள் அதிக கேள்வி எழுப்பவேண்டிய தருணமிது!

முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களுக்குச் சொன்ன அரசியல் கோரிக்கைளுக்காகப் போராடுவதை இரண்டாம் பட்சமாக்கிக் கொண்டு, பேரினவாத அரசியல்வாதிகளின் நலன்களை இந்த நாட்டில் ஸ்திரப்படுத்துவதற்கான அதனுடைய நீண்ட கால விருப்பமான வடகிழக்கு பிரிப்பென்ற கோசத்திற்கு பலியாகி இன்று செயற்படுவதைக் காண்கிறோம். இச்செய்கையானது முஸ்லிம்களை தமிழர்களின் நீண்டகாலப் போராட்டத்திற்கு துரோகமிழைத்த ஒரு சக்தியாக நிரூபிக்க வாய்ப்புகள் இருக்கிறது. முஸ்லிம்களின் உரிமைகளுக்காக விட்டுக்கொடுக்காமல் முஸ்லிம் காங்கிரஸ் போராடட்டும். அதைவிடுத்து வடக்கு தமிழர் தலைமைக்கு எதிராக கிழக்கு தமிழர்களை தூண்டுவதன் ஊடாக சிங்கள அரசியல்வாதிகளின்சதிக்கு முஸ்லிம் காங்கிரஸ் பலியாகி விடக்கூடாது! தமிழர்களைப் பலவீனப்படுத்துவதன் ஊடாக முஸ்லிம் சமூகம் என்ன நன்மைகளை அனுபவிக்கப்போகிறது? "ரோட்டில் போனதை சீலைக்குள் பிடித்து விடும்" நிகழ்வுதான் இது! வடகிழக்கில் வாழும் முஸ்லிம்களுக்கான அரசியல் கோரிக்கையை வென்றெடுப்பதற்கு முஸ்லிம் காங்கிரசுக்கு தேவையிருக்கிறது; கடமையிருக்கிறது. அது எவ்வகையான ஏற்பாடு என முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களின்நலன்களிலிருந்து தீர்வுக்கு வரவேண்டும். மாறாக சிங்கள அரசின் நலன்களைப் பாதுகாப்பதற்காக, அற்ப சலுகைகளுக்காக சிங்களப் பேரினவாதிகளின் விருப்பின் அடிப்படையில் முடிவுக்கு வருவதில் முஸ்லிம் சமூகத்தை ஆபத்தில் தள்ளிவிடும்.

வடகிழக்கில் வாழும் முஸ்லிம்களுக்கான தீர்வு என்ன என்பதில் முஸ்லிம் காங்கிரசுக்கு அன்றிலிருந்து இன்றுவரை தெளிவான கருத்தொன்று இருந்ததில்லை. பகிரங்கமான விளக்கமான அடிப்படையில் எப்போதும் முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களுக்கான தீர்வு இதுதான் என எங்கேயும் முன்வைத்ததுமில்லை. இந்தப் போதாமைகளுக்கு மத்தியில் முஸ்லிம் காங்கிரஸ் இன்று கிழக்குத் தமிழர்களுக்காக அரசியல் ரீதியாகப் போராட முன்வருவது கேலிக்கூத்தான விடயமின்றி வேறில்லை. இது தமிழர்கள் மீதான அக்கறைதான், என்று எந்தத் தமிழர்களும் நம்பிவிடப்போவதுமில்லை. இது சிங்கள அரசியல்வாதிகளினால் சாதிக்கப்பட வேண்டுமென்ற நீண்ட கால பிரித்தாளும் தந்திரத்தை அஷ்ரஃபின் ஊடாக அரங்கேற்றும் ஒரு வழியன்றி வேறில்லை என்பது தெளிவு. இதன் ஊடாக முஸ்லிம்களும் தமிழர்களும் நீண்ட கால எதிரிகளாக காலந்தள்ள வேண்டியிருக்கும். இது முஸ்லிம் சமூகத்தை இருண்ட யுகத்தை நோக்கித் தள்ளிவிடும் கைங்கரியமாகும். இதையே சிங்கள பேரினவாதத் தலைவர்கள் விரும்புகிறார்கள்.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஏற்பட்ட காலத்திலிருந்து ஜே.ஆர். தொடக்கம் பிரேமதாச, சந்திரிகா வரை தமிழர்களின் உரிமைக்கான போராட்டத்திற்கு முஸ்லிம்கள் துரோகமிழைக்கிறார்கள் எனக் காட்டுவதற்கு, முஸ்லிம்களை பலிக்காவாக்க பகீரதப் பிரயத்தனம் எடுக்கிறார்கள். அவ் ஏற்பாட்டின்படிதான் வடகிழக்கு இணைப்புக்காக கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு. இதற்கான ஒத்திகையே கிழக்குத் தமிழர்களுக்கான தனிக்கட்சி.

அண்மைக்காலமாக பாராளுமன்றத்திற்கு உள்ளேயும்வெளியேயும்கிழக்குத்தமிழர்களின் மீது அஷ்ரஃபுக்கு அதிக அக்கறை

> *சொல்வதைத் தவிர வேறு வழியில்லை*



வருவதற்கான காரணம் என்ன? கிழக்கு வாழ் முஸ்லிம்கள் முஸ்லிம் காங்கிரஸ் தலைமையின் கீழ் அனைத்து உரிமைகளும் பெற்றுவிட்டார்கள். அண்டைவீட்டுக்கான கிழக்குத் தமிழர்கள் ஐயோ! பாவம் என்ற மனநிலையின் காரணமாக எழுந்ததா? முஸ்லிம் காங்கிரசால் முஸ்லிம்களின் முன்வைக்கப்பட்ட வாக்குறுதிகளை முஸ்லிம் காங்கிரஸ் நிறைவேற்றி விட்டு கிழக்குத் தமிழர்களுக்கு அரசியல் தலைமைத்துவம் கொடுப்பது பற்றி சிந்திக்கட்டும்.

முஸ்லிம் காங்கிரசால் கோரப்படும் தெளிவற்ற முஸ்லிம் தனிமாகாணக் கோரிக்கையில் அம்பாறைத் தேர்தல் தொகுதியை சிங்களவர்களுக்குவிட்டுக்கொடுப்பது பற்றி, தாரைவார்ப்பது பற்றி முஸ்லிம் காங்கிரசின் முடிவு என்ன? இது முஸ்லிம்களுக்கு முக்கிய பிரச்சினையில்லையா? அம்பாறை மாவட்டத்தின் அரைவாசி நிலபுலன்களையும் நீர்பாசனத் திட்டங்களையும் கொண்ட அம்பாறைத் தேர்தல் தொகுதியை விட்டுக்கொடுப்பதற்கு சிங்களவர்களுடன் சமரசம் செய்து கொண்டு அஷ்ரஃபினால் எப்படி முஸ்லிம்களுக்கான தனித்துவமான மாகாணத்தைக் கோர முடியுமென முஸ்லிம்கள் சிந்திக்கவில்லையா? முஸ்லிம்களின் எதிர்காலத்தின் மீது அம்பாறைத் தேர்தல் தொகுதியை விட்டுக்கொடுப்பது ஒரு துரோகமிக்க அரசியல் சரணாகதியன்றி வேறில்லை.

முஸ்லிம் காங்கிரசின் அம்பாறையை மையப்படுத்திய மாகாணக் கோரிக்கையால் காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி, வாழைச்சேனை, திருகோணமலை, மூதூர், கிண்ணியாவில் வாழும் முஸ்லிம்களின் நிலை என்ன? மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாண முஸ்லிம்களின் கதிஎன்ன? இம்மக்கள் பற்றி முஸ்லிம்களுக்கான அரசியல் உரிமைகளுக்காக போராடும் என நம்பப்பட்ட முஸ்லிம் காங்கிஸ் இது தொடர்பாக எவ்வகையான அக்கறைகொண்டுள்ளது. இவ்வகையில் எமது மக்களை நாம் மறந்துவிட்டு கிழக்குத் தமிழர்குறித்து சிங்கள அரசுக்காக அக்கறை கொள்ள முனைவது நமக்கு நன்மை தருமா என்பதையிட்டு முஸ்லிம்கள் சிந்திக்க வேண்டும்.

அம்பாறை மாவட்ட முஸ்லிம்களின் தற்காலிக நலன்களை மட்டும் மையப்படுத்தி காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி, வாழைச்சேனை, திருகோணமலை, மூதூர், கிண்ணியா, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாண முஸ்லிம்களின் எதிர்கால வாழ்வைப் பலிகொடுப்பதற்கு முஸ்லிம் காங்கிரஸ் தயாராகிவிட்டதென்றால், அந்தமுடிவையிட்டு வடகிழக்கில் வாழும் முஸ்லிம்கள் மௌனமாகவிருப்பதாகவிருந்தால், அது முஸ்லிம் சமூகத்திற்கு பாரிய நஷ்டத்தை ஏற்படுத்திவிடும்.

**குறுகிய வாதங்களுக்கு அப்பாற்பட்டு நீண்ட காலமாய் இந்த நாட்டில் அநீதியிழைக்கப்பட்டு வரும் சிறுபான்மையினருக்கான உரிமைப் போராட்டத்தில் அது தமிழர்களாக இருந்தாலும் சரி, முஸ்லிம்களாக இருந்தாலும் சரி ஒரு இனத்தை மற்றைய இனம் பிளவுபடுத்தி அல்லது காட்டிக் கொடுத்து அல்லது நசுக்கி தமது நலன்களை ஸ்திரப்படுத்துவதற்கு முனையக் கூடாது! இதனை விடுதலைப் புலிகளாக இருந்தாலும் சரி, ஏனைய தமிழ்க் கட்சிகளாக இருந்தாலும் சரி, முஸ்லிம் காங்கிரசாக இருந்தாலும் சரி புரிந்து கொள்ளுதல் வேண்டும்.**

இவ்வுண்மையைப் புரிந்து கொள்ள மறுத்த போக்குத்தான் இந்த நாட்டில் சிங்கள பேரினவாதிகளுக்கெதிரான சிறுபான்மையினங்களின் போராட்டங்களை பலவீனப்படுத்தி வந்திருக்கிறது. சிங்கள பேரினவாதிகளின் நலன்களுக்காக வேண்டி முஸ்லிம்கள் முடிவு எடுக்க முடியாது! முஸ்லிம்களின் நலன்களுக்ளுக்காகவே முஸ்லிம்கள் முடிவு எடுக்க முடியும்! முஸ்லிம்கள் வடகிழக்கில் எதிர்காலத்தில் தலைநிமிர்ந்து சமத்துவமாக வாழ வேண்டுமெனில் முஸ்லிம்களின் கரங்களும் சுத்தமாக இருத்தல் வேண்டும்.

அபூநிதால்




முஸ்லிம் மக்கள் எங்கு வாழ்ந்தாலும் அங்கு நிலவுகின்ற சமூக, கலாசார, அரசியல் பின்னணிகளின் நின்றும் மாறுபடாத அநேகமாக ஒத்துப்போகக் கூடிய மக்கட் பிரிவினராகவே வாழ்ந்து வந்திருக்கின்றனர். இது சில வேளைகளில் தங்களது வாழ்க்கை நெறியாகிய இஸ்லாமிய மார்க்கத்தை இரண்டாம் இடத்திற்கு கொடுக்கின்ற நிலையில் கூட இருந்திருக்கின்றதென்பதும் அவதானிக்கப்பட வேண்டிய ஓரம்சமாகும்.

இந்திய முஸ்லிம்களை எடுத்து நோக்கும் போது முஸ்லிம் மக்களின் கோஷமாக "முதலில் நாம் இந்தியர், பின்பே இஸ்லாமியர்" என்பதே இருந்து வந்துள்ளது; இருக்கின்றது; இருக்கும். இதே நிலைமையே யூகோஸ்லாவியா சிதறுவதற்கு முன்னரான பொஸ்னிய முஸ்லிம்களின் நிலைமையும். அங்கு கிறிஸ்தவ, சேர்பிய, கலப்புத்திருமணங்கள் கூட சர்வ சாதாரணமாக இருந்திருக்கின்றன. இதே நிலைமைதான் இலங்கையிலும் கூட. நாடளாவிய ரீதியில் பரந்து வாழ்கின்ற முஸ்லிம் மக்கள் தாம் வாழ்கின்ற பிரதேச பெரும்பான்மைச் சிங்களவர்களுடனும் அவ்வாறே சிறுபான்மைக்குள் பெரும்பான்மையாக விளங்குகின்ற தமிழர்களுடனும் அந்நியோன்யமாக சகோதரத்துவ வாஞ்சையுடன் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். இது இலங்கையின் வரலாற்றுக் காலம் தொட்டு காணக்கூடிய யதார்த்த நிலையென்பதை மறுக்க முடியாது.

என்றாலும் கூட முஸ்லிம்களுக்கெதிரான இனத்துவேஷ சிந்தனைகள் எழாமல் இல்லை. சிங்கள மக்களாலும் சரி, தமிழ் மக்களாலும் சரி, முஸ்லிம்கள் காயப்பட்டே இருக்கிறார்கள். ஆறாத காயத்துடன் இன்னும் இருக்கிறார்கள். இங்கு பொதுவாக மக்கள் என்றாலும் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறவர்களாகக் காட்டிக்கொள்கின்ற கர்ண கொடூரர்களையே அது குறிக்கின்றது.

இந்நிலையிலேயே அமைதியாய், அலை எழும்ப முடியாதளவு ஆழமான பிரச்சினைகளுடன் வடபகுதி முஸ்லிம்களின் புலிகள் விரட்டியடிப்பின் 5 வருடம் கடந்து போய்க்கொண்டிருக்கிறது. பச்சோந்தித் தனமாய் மாறிமாறி அறிக்கை விட்ட புலிகள் முஸ்லிம்களை விரட்டியதை நியாயப்படுத்த முயற்சித்தும் தோற்றுப்போனமையையே காண்கிறோம்.

இலங்கையின் இனப்பிரச்சினை புதிய பரிணாமம் பெற்ற 1956இலும்சரி, 1983 இலும்சரி பாதிக்கப்பட்ட தமிழர்கள், கடல் கடந்து போனார்கள். தங்களது இருப்பின் நியாயத்தை அர்த்தப்படுத்தும் வகையில் அமைத்துக் கொண்டார்கள். அதனால், இப்பிரச்சினைக்குக் கூடுதலான அழுத்தம் கொடுக்கும் பலமும் அவர்களுக்குக் கிட்டியது. மாறாக வடக்கிலிருந்து விரட்டப்பட்ட முஸ்லிம்களின் நிலை பரிதாபகரமானது. யாருக்கெதிராய் தாம் குரல்கொடுக்கலாம் என்பதைக் கூட அறியாதிருக்கின்ற அப்பாவித் தனத்தை நோக்குகையில் பரிதாப உணர்ச்சி மேலிடுகிறது. இல்லாவிட்டால் 24 மணிநேரத்திற்குள் உடுத்த உடையுடன் விரட்டியடிக்கப்பட்ட மாகொடுமை நிகழ்த்திய புலிகளால் கூறப்பட்ட "விரட்டியடித்ததற்கான காரணத்தை அஷ்ரஃபிடம் சென்று கேளுங்கள்" என்று கூறப்பட்டதை ஏற்று இங்கு வந்து அதனை பரப்பியிருப்பார்களா என்ன? இன்னும் 'எமது தாயகமும் வடக்கே" என்றே அமைதிக் கோஷத்துடன் முகாம்களுக்குள் சுருங்கிய வாழ்க்கைக்குள் கனவுகளுடன் காத்துக் கொண்டிருக்கிறார்கள் வடக்கிலிருந்து அழைப்பு வருமென்று. இச்சாத்தியப்பாடு தொடர்பில் எதிர்காலமே பதில் சொல்ல வேண்டும்.

என்றாலும் கூட அகதிகளாய் விரட்டப்பட்ட மக்களால் நன்மையும் (?) இல்லாமலில்லை. முஸ்லிம்களின் அரசியல் விழிப்புணர்வு பற்றியும், தலைமைத்துவம் பற்றியும் பேசிவந்த அரசியல்வாதிகளுக்கு அது பெரும் நன்மையாயிற்று. அரசியல் பிரசார மேடைகளில் பேச்சுக்களின் கருவாயிற்று. வாக்குச்சேர்க்கின்ற களமாயிற்று. ஈற்றில் நாட்டை ஆளுவதில் பங்கும் பெற்றாகிவிட்டது. ஆனால், தாம் ஒரு சிறுபான்மையினரின் சிக்கலான பிரச்சினைகள் மலிந்த சமூகத்தின் பிரதிநிதிகள் என்பதை மறந்து அரசாங்கத்தின் பேரினவாதத்தை நிலைப்படுத்துகின்ற கொள்கைக்கு தாளம் போட்டுக்கொண்டிருக்கிறார்கள் தாம் கருவேப்பிலை அல்ல என்று முழங்கியவர்கள். குறித்த ஒரு பிரதேசத்தின் பிரச்சினைகளே இவர்களுக்கு பிரச்சினைகளாகவும் சற்று விளக்கமாகக் கூறினால், தொண்டர்களுக்கு தொழிலும் அதிகாரிகளுக்குப் பட்டமும் கொடுத்து விடுவதில் முனைப்பாகவும் உள்ள இவர்கள் தாம் கடந்து வந்த பாதையை திரும்பிப் பார்த்தல் வேண்டும். ஆரம்பகால துண்டுபிரசுரங்களையும் உரைகளையும் மீண்டும் கேட்டுப் பார்த்தால் அல்லது படித்துப்பார்த்தால் விலகிச்சென்ற பாதையிலிருந்து திருந்துவது சிரமமில்லை.

வடக்கு முஸ்லிம்களின் உரிமைகளுக்கான அமைப்பினரின் நடவடிக்கை, செயற்பாடுகள் திருப்தி தருகின்றன. என்றாலும் புத்தளம் சார்ந்த பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களோடு மட்டுமன்றி குருநாகல், அனுராதபுரம், போன்ற பகுதிகளில் வாழ்கின்ற வடபகுதி மக்களிடமும் விழிப்புணர்வை ஏற்படுத்துவது முஸ்லிம் சமூகத்தில் மூன்றாவது கருத்தை உருவாக்குவதில் உழைத்தவர்களாக அவர்களை மாற்றும். வ.ஐ.ச.ஜெயபாலன் மற்றும் அவரைப் போன்ற ஏராளம் மனிதர்களின் ஆதரவும் இந்த பணியில் ஊக்குவிக்கும் காரணியாக அமையலாம். முஸ்லிம்கள் இவர்களை இலகுவில் மறந்துவிட மாட்டார்கள்.

**எம்.எஸ்.எம்.பாரிஸ்**
**சட்டபீடம்**
**கொழும்பு பல்கலைக்கழகம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





*மனித முகத்துட...*
*திறந்த பொருள...*

# பால்மா வி... ...ா எட்டாத உயரத்தில் லக்ஸ்பிறே தொழிலாளரோ நட்ட நடுத்தெருவில்!

"மக்கள்மயத்தினால் லக்ஸ்பிறே தொழிற்சாலை தொழிலாளர்களின் 231 குடும்பங்கள் நடுத்தெருவில்!"
"திமிர்பிடித்த முதலாளியிடம் தொழில் அமைச்சர் மண்டியிட்டு விடுவாரா?"
"ஹரி ஜயவர்தன! தொழிலாளர்களின் வயிற்றில் அடிக்காதே!"

ராகம, நீர்கொழும்பு வீதியில் அமைந்துள்ள 'லக்ஸ்பிறே தொழிற்சாலை'யின் வாசலில் கடந்த ஒன்றரை மாதங்களாகவே வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்களின் சுலோகங்களே அவை. தினமும் வழமையான வேலை நேரத்திற்கு தொழிற்சாலையின் வாசலில் ஒன்று திரளும் இவ் 231 தொழிலாளர்களும் மத்தியானம் வரை சுடு வெயிலையும் பாராது தங்கள் கோரிக்கைகளுக்காகப் போராடி வருகிறார்கள்.

இந்தப் பிரச்சினை வெறுமனே தொழிற்சாலை நிர்வாகத்துக்கும் தொழிலாளர்களுக்குமிடையிலான பிரச்சினை என்பதை விட ஸ்ரீலங்கா அரசின் பொருளாதாரக் கொள்கை - திறந்த பொருளாதார வேலைத்திட்டம் தனியார் மயம் என்பவற்றினால், ஏற்பட்ட பின்விளைவே என்பது தான் உண்மை.

***பின்னணி***

இத்தொழிற்சாலை 1983 மார்ச் 1ம்திகதியில் மில்க் பூட்ஸ் (CWE) லிமிட்டட் எனும் பெயரில் பதிவு செய்யபட்டு ஆரம்பிக்கப்பட்டது.

பெரும் லாபமீட்டிய தொழிற்சாலையாக மட்டுமல்லாது நாட்டின் தேசிய வருவாயையும் பெருக்கிய ஒரு தொழிற்சாலையாகவே இது இயங்கியது.

"ஊழல் மோசடி நிலை கராணமாகவும் தேசிய சொத்துக்களை விற்பதில் அன்றைய ஐ.தே.க. ஆட்சி காட்டிய ஆர்வத்தின் விளைவாகவும் பிரேமதாச அரசாங்கத்தில்போது 1991 ஒக்டோபரில் 'மக்கள் மயம்' எனும் பேரில் 'லக்ஸ்பிறே கம்பனிக்கு'க்கு விற்கப்பட்டது. ஆரம்பத்தில் வெறும் 51% வீதம் மட்டுமே பங்குரிமையைக் கொண்டிருந்த இக்கம்பனி இன்று 78% வீதபங்குரிமையைக் கொண்டுள்ளது. 'மக்கள் மயப்'படுத்தப்பட்டதிலிருந்து இன்றுவரை இக்கம்பனியின் முகாமைத்துவ இயக்குநராக இருப்பர் டி.எச்.எஸ். ஜயவர்த்தன எனும் செல்வந்தரே. இவரின் நிர்வாகத்தின் கீழேயே இத்தொழிலாளர்கள் மோசகரமாக நசுக்கப்பட்டும், சுரண்டப்பட்டும் வருகிறார்கள்.


1977இல் ஆட்சியிலமர்ந்த ஐ.தே.க குறுகிய காலத்தில் 'திறந்த பொருளாதாரக் கொள்கை'யை அறிமுகப்படுத்தியது. அதன்பின்னர் உள்நாட்டில் வெளிநாட்டு முதலீடுகள் ஊக்குவிக்கப்பட்டன. வருமானம்முழுவதும் வெளிநாடுகளைச்சென்றடைந்தது. தேசிய சொத்துக்கள் அந்நிய நாட்டவர்களுக்கும் உள்நாட்டு பெருமுதலாளிகளுக்கும் விற்கப்பட்டன. தொழிலாளர்கள் சுரண்டப்பட்டார்கள்.

இந்த முறைகளுக்கூடாகவே தொழிலாளர்களின் எண்ணிக்கையை குறைத்து உற்பத்தியின் அளவை அதிகரித்தல், தொழிலாளர்களுக்கான சலுகைகள், சம்பளம் என்பவற்றைக் குறைத்தல் போன்றன துரிதமாக நடைமுறைக்கு வந்தது. (இன்னொரு பக்கம் தேசிய சொத்துக்கள் தாரைவார்க்கப்பட்டு ஆண்டியாகிக்கொண்டிருக்கிறது நாடு.) இந்த லக்ஸ்பிறே கம்பனிப் பிரச்சினையையும் மேற்சொன்ன அரச நடவடிக்கைகளின் விளைவாகவே கொள்ளலாம்.

1991 இல் 'மக்கள் மய'த்துக்குப்பின் புதிய தனியார் நிர்வாகம் (லக்ஸ்பிறே கம்பனி) தொழிலாளர்களை வேகமாக நீக்கியது. எந்தவித நியாயமான காரணங்களுமில்லாமல் தொழிலாளர்களின் மீது வீண் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி நீக்கியது.

இவ்வாறு விலக்கப்பட்ட 25 தொழிலாளர்கள், விலக்கப்பட்டமை நியாயமற்றது என 'தொழிலாளர் ஆணைக்குழு' அண்மையில் தீர்ப்பு வழங்கியிருந்தது குறிப்பிடக்கத்தது. (இவர்கள் ஏறத்தாழ 10 வருடங்களைக் கிட்டிய சேவையை உடையவர்கள்) உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் தொழிலாளர்க்ள் கடுமையாக வேலை வாங்கப்பட்டார்கள்.

மேலதிக வேலைநேரம் (Over Time) இல்லாமல் செய்யப்பட்டு சாதாரண வேலை நாட்களுக்குள்ளேயே அவ்வேலைகளைச் செய்விக்கச்செய்தனர். தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த 'வைத்திய வசதி' இல்லாமல் செய்யப்பட்டது. ஆரம்பத்தில் வழங்கப்பட்டுவந்த உற்பத்தி ஊக்குவிப்பு கொடுப்பனவு (Production Insentive) இல்லாமல் செய்யப்பட்டது.



இத்தனை கொடுமைகள் மட்டுமல்லாது 'மக்கள் மயமாக்க'ப்பட்டதிலிருந்து இதுவரை எந்தவித சம்பள உயர்வும் இத்தொழிலாளர்களுக்கு வழங்கப்படவில்லை, என்பது மிகத்துயரமானது.

தொழிலாளர்களின்இவ் அவலங்கள்பற்றி அமைத்துக்கொண்டார்கள் என இத்தொழிலாளரின் துண்டுபிரசுரமொன்று கூறுகிறது.

ஆனாலும் தனியார் பொறுப்பேற்றதன் பின் இத்தொழிற்சங்கம் இயங்க முடியாதபடி நிர்வாகத்தால் தடை செய்யப்பட்டது. குறிப்பாக தொழிற்சங்கக் கூட்டத்துக்காக 11/2 மணித்தியாலம் மட்டுமே முன்னர் வழங்கப்பட்டு வந்த நேரம் கூட இல்லாமல் செய்யப்பட்டது. எனவே 1991க்குப்பின் இத்தொழிலாளர்களின் பிரச்சினையைப் பற்றி ஒன்று திரண்டு பேசும் வாய்ப்பும் அடக்கப்பட்டது. ஆனாலும் அவர்கள் மீதான அடக்கு முறைகள் அதிகரித்ததன். விளைவாக இவர்கள்



கிளமன் ஜோசப்



ஜே.ஏ.டி. அந்தனி



ரோய் ஐசக்

- சுரா

இயக்குநருடன் பேசச்சென்ற ரோய் ஐசக் எனும் தொழிலாளி கம்பனி இயக்குநரால் கடுமையாகத் திட்டி விரட்டப்பட்டார். ரோய் ஐசக் இதுபற்றி சரிநிகருக்கு தெரிவிக்கையில்;

"எங்களது பிரச்சினைகள் பற்றிப் பேச எங்களுக்கு உரிமயையில்லையா... இவற்றை நாங்கள் பொறுத்துக்கொண்டிருக்க வேண்டுமா..? நான் ஹரி ஜயவர்தன (MD) வுடன் கதைக்கச் சென்றிருந்த போது சொல்ல முடியாத தூஷணவார்த்தைகளால் என்னைத் திட்டி விரட்டினார். அவரோடு கதைக்கச் செல்லும் எல்லாத் தொழிலாளர்களையும் அவர் இப்பிடியான தூஷண வார்த்தைகளால்தான் பேசுவார்.." என்றார்.

இத்தொழிலாளர்கள் லக்ஸ்பிறே கம்பனி 'மக்கள் மயப்'ப்படுத்தப்படுவதற்கு முன்னர் 1988ம் ஆண்டு நவம்பர் 08ம்திகதி தங்களுக்கான தொழிற்சங்கமொன்றை 'ஊழியர் தொழிற்சங்கம்' எனும் பேரில் தொழிற்சங்கத்தை இயக்க முயன்றபோது தொழிலாளர்களை தனது அறைக்கு நிர்வாகம் அழைத்து மிரட்டிடவே தொழிலாளர்கள் உத்வேகமடைந்தனர். ஆகவேசத்துடன் போர்க்குரல் எழுப்பினர்.

1996 மே மாதம் 8ம்திகதி தங்களது பகல் போசன இடைவேளையைத் தங்களது பிரச்சினைகளைக் கதைப்பதற்கான நேரமாக ஒதுக்குவதற்கு சகல தொழிலாளர்களும் உடன்பட்டனர். அன்றைய தினம் 12.20க்கு இத்தொழிலாளர்கள் தங்களது பிரச்சினைகளைப் பற்றித் தீவிரமாகக் கதைத்தனர். தங்களது பிரச்சினைகள் தொடர்பாக அச்சந்தர்ப்பத்திலேயே இயக்குநருடன் சகலரும் சென்று கதைப்பதாக தீர்மானத்தை எடுத்து விட்டு அணிதிரண்டு ஷரி ஜெயவர்தனவின் அறைக்குள் நுழைந்தனர். உறுதியாக தங்களது கோரிக்கைகளை முன் வைத்தனர்.

- ✱ வாழ்க்கைச் செலவுப்புள்ளிக்கேற்ப சம்பள உயர்வை வழங்கவேண்டும்.
- ✱ 1991க்குப் பின் வழங்காமலிருந்த போக்குவரத்துக் கொடுப்பனவு, உற்பத்தி ஊக்குவிப்புக்கொடுப்பனவு உட்பட முன்னர் வழங்கப்பட்டு வந்த கொடுப்பனவுகள் வழங்கப்படவேண்டும்.
- ✱ ஒப்பந்தத் தொழிலாளர்கள் தற்காலிக ஊழியர்களாக கடந்த பல வருடங்களாக சேவை செய்து வருவோரை நிரந்தரமாக்க வேண்டும்.
- ✱ போனஸ் கொடுப்பனவில், காட்டப்பட்டு வரும் பாரபட்சங்கள், பழிவாங்கல்கள் நிறுத்தப்படவேண்டும்.
- ✱ மாதாந்தம் தொழிற்சங்க கூட்டத்துக்காக 1 1/2 மணித்தியால நேரத்தை அனுமதிக்க வேண்டும்.
  மேலதிக வேலை நேரம் (OT) மற்றும் வைத்திய வசதி என்பவை வழங்கப்பட வேண்டும்.
- ✱ லக்ஸ்பிறே விலை குறைக்கப்பட வேண்டும்.
- ✱ சேவையிலிருந்து நீக்கப்பட்டத் தொழிலாளர்கள் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்படவேண்டும்.

இக்கோரிக்கைகளைக் கேட்ட ஹரி ஜயவர்த்தன ஆவேசத்துடன் தொழிற்சங்க உபதலைவர் அன்டனியுடன் வாதிடவே இறுதியில் தொழிலாளர்கள் அனைவரும் இயக்குநர் முன்னிலையில் ஒரே நேரத்தில் கையுயர்த்தி 'வேலை நிறுத்த முடிவை' எடுத்தனர். அன்றிலிருந்து தாங்கள் வேலை நிறுத்தத்தை தொடருவதாக உத்தியோகபூர்வமாக அறிவித்து ஆரம்பித்தனர்.

ஏறத்தாழ 415 தொழிலாளர்கள் வேலை செய்யும் லக்ஸ்பிறே கொம்பனியில் நிறைவேற்று அதிகாரிகள், பாதுகாப்பு அதிகாரிகள், விற்பனை முகவர்கள் (Sales Rep.)கள் ஆகியோர் தவிர்ந்த 231 தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்தனர். தனக்கும் தனது நிறுவனத்தின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் எனக்கூறி பொலிசாரை அழைத்த ஜயவர்த்தன அப்பொலிசாரை தினசரி இருக்கச் செய்தார். ஒன்றரை மாதங்களாக ஒரு பொலிஸ் பஸ்ஸுடன் தயாராகவே பொலிஸார் நின்று கொண்டிருக்கின்றார்கள். இப்பொலிசாரின் ஒரு பாதுகாப்பு ஒரு முதலாளிக்கே ஒழிய 231 தொழிலாளர்களுக்கு அல்ல என்பது இங்கு நினைவு கூரத்தக்கது.

தொழிற்சங்கத்தின் அமைப்பாளர் கிளமன் ஜோசப் இதுபற்றி சரிநிகருக்கு தெரிவிக்கையில் உண்மையில் சம்பள உயர்வை இன்றுள்ள வாழ்க்கைச்செலவுப் புள்ளிக்கேற்பத்தான் கேட்கிறோம். 1991இலிருந்து வழங்கப்படாததையோ அல்லது அவை எல்லாவற்றிற்குமான நிலுவையையோ நாங்கள் கேட்கவில்லை" என்றார்.

தொழிற்சங்கத்தின் உபதலைவர் ஜே.ஏ.டி, அந்தனி இதுபற்றிக் குறிப்பிடுகையில் இயக்குநர் ஹரிஜயவர்தன கடந்த மே மாதம் 10ம்திகதி லங்காதீப பத்திரிகைக்கு பேட்டியளித்திருந்தபோது 'இந்நிறுவனத்தில் தொழில் பார்க்கும் ஊழியர்கள் 10,000 - 15,000 வரையிலான சம்பளம் பெற்று வருகிறார்கள்' என்று மாபெரும் பொய்யைக் கூறியிருந்தார். ஆனால், முதலாம்தர ஊழியர்களுக்கு 3400/=ரூபா அடிப்படைச்சம்பளமும் நான்காவது தர ஊழியர்களுக்கு 2550/= அடிப்படைச் சம்பளமுமே வழங்கப்பட்டு வருகிறது.

அது மட்டுமல்லாமல் மக்கள் மயப்படுத்தப்பட்ட 1991இல் 400 கிராமுடைய லக்ஸ்பிறே பக்கற் ஒன்றின் விலை 42.50சதம் மட்டுமே. இன்று அதே பக்கற் 80/=ரூபாவாக ஆகியிருக்கிறது. பெற்ற லாபம் எங்கே போனது? எங்களுக்கென்றால், நியாயமானவற்றைக் கூட வழங்கியதில்லை நிர்வாகம்.

முன்னைய ஐ.தே.க. அரசாங்கமும் 'மக்கள்மய'ப்படுத்துவதற்கான காரணம் சகல நிறுவனங்களையும் இலாபத்தில் இயக்குவதற்கே என்றது. இன்றைய அரசாங்கமும் அதனையே கூறுகிறது. தனியார் மயத்தால் சகல நிறுவனங்களும் இலாபமடைகிறது என்றால், ஏன் எங்கள் உரிமைகளை நசுக்கவேண்டும். அப்படியென்றால், தொழிலாளர்களை, உரிமைகளை நசுக்கினால் தான் லாபமடையமுடியும் என்பதை அரசாங்கமும் ஏற்றுக்கொள்கிறதா? ஏற்றுக்கொள்ளாவிட்டால், ஏன் இதனை ஆராய அரசாங்கம் முன்வருவதில்லை?" என மிகுந்த கவலை தோய்ந்த ஆத்திரத்துடன் வினவினார்.

பிரதான அமைப்பாளர் கிளமன் ஜோசப் இதுபற்றி குறிப்பிடுகையில் "ஆரம்பத்தில் கம்பனி சிற்றுண்டிச்சாலையில் பகல் உணவு 4.00ரூபாவுக்கு வழங்கப்பட்டது. இன்று அது 10.00ரூபாவுக்கும் அதிகமாக விற்கப்படுகிறது. ஆனால், அன்றிருந்த சம்பளமே இன்றும் இருக்கிறது.

எங்கள் வேலைநிறுத்தம் தொடருகிறது. எந்தவிதப் பேச்சுவார்த்தைக்கும் இதுவரை இயக்குநர் முன்வரவில்லை. ஆனால் எங்கள் வயிற்றில் அடிக்கும்படியாக வெளியார் 60 பேரைக்கொண்டு வந்து உள்ளே வேலை செய்து வருகிறார்கள்.

எங்கள் பிரச்சினையைப் பற்றி எந்தப் பத்திரிகையும் எழுத முன்வருவதில்லை. காரணம் லக்ஸ்பிறே கம்பனியை பகைத்துக்கொண்டால் அவர்களுக்கு விளம்பரம் இல்லாமல் போய்விடுமே..." என்றார்.

சென்ற மேமாதம் 10ம் திகதி நாரேன்பிட்டியவிலுள்ள தொழிலாளர் உதவி ஆணையாளர் தலைமையில் நடந்த பேச்சுவார்த்தையிலும் ஹரி ஜயவர்த்தன கலந்துகொள்ளவில்லை. அவருக்கு பதிலாக அவரது வழக்கறிஞர் கலந்து கொண்டார். அவர் "தொழிற்சாலை நஷ்டத்தில் இயங்குகிறது. இப்படியே போனால் கம்பனியை மூட வேண்டி வரும்" எனக்கூறியிருந்தார்.

இன்றுள்ள கேள்வி என்னவென்றால், நாடுமுழுவதும் தொழிலாளர்களின் பிரச்சினை மேலெழுந்து வருவது அதிகரித்துள்ளது. திறந்த பொருளாதாரக் கொள்கைக்கு முடிவு கட்டிவிடுவார் சந்திரிகா என்ற எதிர்ப்பார்ப்பும் 'மனிதாபிமானத்துடனான திறந்த பொருளாதாரக் கொள்கை'ப் பிரகடனத்துடன் சுக்கு நூறாகியது.

முன்னரைவிட அதிகமான தேசிய சொத்துக்கள் தனியாருக்கு விற்கப்பட்டு வருகின்றன. அதற்கெதிராக அரசாங்கத்துக்குள் இருக்கும் இடதுசாரிக் கட்சிகளின் எதிர்ப்பும் ஒரு கட்டம் வரை மட்டுமே சூடுபிடிக்கிறது. தமது இருப்புக்காக வேண்டி அவற்றின் எதிர்ப்பு எல்லை என்பதை மட்டுப்படுத்த வேண்டிய நிலை அவற்றுக்கு.

பிரேமதாச காலத்தில் 99 வருடங்களுக்கு குத்தகைக்கு கொடுத்த 22 எஸ்டேட்டுக்கள் பிற்காலத்தில் நட்டத்தையே காட்டிவந்தன. நட்டமடைவதற்காகவே தனியார் மயப்படுத்தும் வேலைத்திட்டமென்பது பெரும் கேலிக்கூத்தான விடயம்.

சந்திரிகா அரசாங்கமும் அதனையே பின்பற்றி வருகிறது. பிரேமதாச விற்றது போக எஞ்சிய தோட்டங்களை சந்திரிகா விற்றுவிடத் தீர்மானித்துவிட்டார். (எல்லா விடயத்திலும் 'பிரேமதாச பணி' ஆரம்பித்தாகிவிட்டதோ என்று கேட்கத் தோன்றுகிறது?)

ஏற்கெனவே தனியார் மயப்படுத்தப்பட்ட நிறுவனங்களின் சாத்தியப்பாடு வெற்றி குறித்த தேடல் இல்லாமலேயே தொடர்ந்தும் தனியார் மயப்படுத்துவதில் ஆர்வம் காட்டப்பட்டு வருவதை இன்று அப்பட்டமாகக் காணக்கூடியதாகவுள்ளது. இந்நிலையில் ஒரு 'லக்ஸ்பிறே தொழிற்சாலை' ஊழியர்கள் மாத்திரமல்ல நாடு முழுவதும் தொழிலாளர்களின் போராட்டம், எழுச்சி என்பன தவிர்க்க முடியாதவை.


*படங்கள்:எம்.கே.எம்.ஷகீப்*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 'குருவிக்கும் ஒரு கூடு வேண்டும்'




### வரலாற்றுப் பின்னணி
### கோப்பிக் காலம்:

கோப்பிப் பயிர்ச் செய்கை அறிமுகப்படுத்தப்பட்ட 1823ம் ஆண்டின் பின்னரே ''தோட்டப்புற வீடுகள்'' அமைக்கப்பட்டன. 1850ன் பின்னர் ''கோப்பிப் பயிர்ச்செய்கை பரிசோதனைக் காலம்'' முடிவுற்று ''நிலைபெறும் காலம்'' தொடங்கிய போது விரிவடைந்த கோப்பித்தோட்டங்களில் வேலை செய்வதற்கு பெருமளவு தொழிலாளர்கள் தென்னிந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டனர். அவர்களைத் தங்க வைப்பதற்கு குறைந்த செலவில் தொடர் குடிசைகள் நிர்வாகத்தினால் அமைக்கப்பட்டன. இதுவே ''லைன்கள்'' உருவான பின்னணியாகும்.

அதுவரை தொழிலாளர்களுக்கு சிறு துண்டு நிலம் உரிமையாளர்களால் வழங்கப்பட்டது. அவற்றில்கல், தடி, மண், மற்றும்கிடைக்கின்ற அனைத்தையும் கொண்டு கூட்டாகத் தொழிலாளர்கள்தற்காலிக குடிசைகளை அமைத்துக் கொண்டனர். ஆனால், 1850களின் பின்னர் ''கோப்பி நிலைபெற்று'' லாபகரமான பெருந்தோட்டக்கைத்தொழிலாக மாறியதும்தோட்ட உரிமையாளர்கள்தமது லாபத்தில்ஒருசிறுபகுதியை உற்பத்திக்குத்தேவையான பெருமளவு தற்காலிக தொழிலாளர்களை தங்கவைப்பதற்கு அவசியமான இத்தகைய தங்குமடங்களுக்கு செலவிட்டனர். 1848ல் வெடித்த மாத்தளைக்கிளர்ச்சியும் சமூக பாதுகாப்புக்கு இத்தகைய ''தொடர் குடில்கள்'' முறையை ஏற்புடையதாக்கியது.

1820களில் சிறு அளவில் ஆரம்பிக்கப்பட்ட கோப்பிப்பயிர்ச்செய்கை 1847ல் சுமார் 50,000 ஏக்கருக்கு விரிவடைந்திருந்தது. விஞ்ஞான ரீதியில் நிபுணத்துவமுடைய நிர்வாகிகளால் (Planters) முறைப்படியான கோப்பிப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் கட்டம் 1850களின் தொடக்கத்தில் பரிணமித்தது. ஏஜென்சி இல்லங்களும் உருவாகின. இவ்வாறு 1871ம் ஆண்டாகும் போது 196,000 ஏக்கர்களுக்கு கோப்பிப் பயிர்ச்செய்கை பரவியது. இதற்கேற்ப தென்இந்திய தொழிலாளர்களின் வருகையும் அதிகரித்தது. 1827ல் சுமார் 10,000ஆக இருந்த தோட்டத் தொழிலாளர்களின் தொகை - இலங்கையில் முதற்தடவையாக மேற்கொள்ளப்பட்ட 1871ம் ஆண்டு குடிசனமதிப்பீட்டின்படி சுமார் 120,000 ஆக அதிகரித்திருந்தது. (1871 ஒகஸ்ட் 2ந் திகதி மேற்கொள்ளப்பட்ட முதலாவது குடிசன மதிப்பீட்டின்படி கோப்பித் தோட்டச் சனத்தொகை 123,803 ஆகும். இதில் தோட்ட நிர்வாகிகளும் அடங்குவர்.)

கோப்பித்தோட்டத் தொழிலாளர்களின்வீடுகளின் வரலாறை ஆராய்ந்த வில்லியம் சபோனேடியர் (Willam Sabonadiere the Coffe Planter of Ceylon - 1986) ''ஆரம்பகால கோப்பித் தோட்ட உரிமையாளர்கள் தற்காலிக வீடுகளுக்குப் பதிலாக நிரந்தரமான வீடுகளை அமைத்திருந்தால் அடிக்கடி புதிப்பிப்பதற்கு செலவிடப்படும் பெருமளவு பணத்தை சேமித்திருக்கலாம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

கோப்பிக்காலத்தில் நிரந்தரமாகத் தங்கிய தென்னிந்தியத் தொழிலாளர்களின் தொகை குறைவானதாக இருந்தது. ஏனெனில், கோப்பித் தோட்டங்களில்வருடம்முழுவதும்நிரந்தரமாக வேலை போதுமான அளவு இருக்கவில்லை. எனவே தற்காலிகமாகத்தங்கி வேலை செய்வதற்கு எத்தகைய தங்குமடமும் அவர்களுக்குப் போதுமானதாக இருந்தது.

''லைன்கள்'' என்ற பெயர் எவ்வாறு ஏற்பட்டது என ஆராயப்புகுந்த மில்லி என்பவர் (P.D. Millie Thirty Years ago or Reminiscences of the Early Days of Coffee Planting in Ceylon - 1978) அதற்கான காரணம் தனக்குத் தெரியவில்லை என ஒத்துக் கொள்கிறார். வரிசையாக (Line-லைன்) அமைக்கப்பட்ட தொடர் குடில்கள் என்பதால் வீடு, என்றோ மிருகங்கள் வாழும் கொட்டில்கள் என்றோ அவற்றை அழைக்க முடியாததால் ''லைன்'' என்ற பெயர் உருவாகியிருக்கலாம். தனித்தனிக்குடிசைகள் அமைப்பதற்கு கூடுதலான நிலம் வேண்டும். சிறிய நிலப்பரப்பில் கூடுதலான தொழிலாளர்களை குடியமர்த்த ''லைன்'' முறை உருவாக்கப்பட்டது. இம்முறை தொழிலாளர்களைக்கண்காணிக்கவும் வசதியாக இருந்தது.

மில்லியின் கூற்றுப்படி இன்று போலவே அன்றும் லைன் அறைகள் ஒவ்வொன்றும் 10X 12 அடி கொண்டவையாக இருந்தன. அதனோடு ஒட்டிய ஒரு சிறு வராந்தா இருந்தது. அதில் அநேகமாக மாடு அல்லது ஆடு அல்லது பன்றி வளர்க்கப்பட்டது. ஒவ்வொரு அறையிலும் 10 பேர் வரை குடியிருந்தனர். சுற்றிவர மிகவும் அழுக்காய் இருந்தது.

நாளடைவில் இவ்வராந்தாக்கள் (Verandak) சுவர்களால் மூடப்பட்டு சமையலறைகளாக மாற்றப்பட்டன. காற்றுக்குப்பதிலாக புகையை சுவாசிக்க நேர்ந்தது.

கோப்பியின் ஆரம்பகாலத்தில் இந்தியாவிலிருந்து வரும் பெண்களின் தொகை குறைவாக இருந்தது. அன்று 38 ஆணுக்கு ஒரு பெண் என்ற வீதம் காணப்பட்டது. (Patrick Peebls: A Hand-book of Historical Statistics) இதனால் சமூக பிரச்சினைகளும் சமூக நோய்களும் பெருகி இருந்தது. படிப்படியாக பெண்களின் வருகை அதிகரித்தது. குடும்ப அலகுகள் உருவானதும் இடநெருக்கடிப் பிரச்சினை உணரப்பட்டது. எனினும் சகித்துக் கொள்ளப்பட்டது. திருமணமான புதிய தம்பதிகளுக்கு லைன் அறை ஒன்று சில நாட்களுக்கு உறவினர்களால் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டது. அவ்வறையில் வசித்தோர் அயலவர், உறவினர் வீடுகளில் தங்கியதன் மூலம் இது சாத்தியமானது. ஆயினும், அது ஒரு தற்காலிக ஏற்பாடு மாத்திரமே, பின்னர் மணமானவர்களும் பெற்றோர்களும் பருவமடைந்தவர்களும் ஒரேயறையில் தொடர்ந்து வாழ்ந்தனர்.

### கோப்பித் தோட்ட உரிமையாளர்களின் மனோபாவம்:

அக்காலத்தில் மனிதாபிமானிகள் தோட்டத் தொழிலாளர்கள்வாழ்ந்த 'லைன்அறைகளின்' அவலநிலையைப்பற்றி குரலெழுப்பியபோது தோட்ட உரிமையாளர்களின் தரப்பிலிருந்து மூன்று விதமான பிரதிபலிப்புகள் வெளிப்பட்டன.

ஒன்று, அதற்கான பழி தொழிலாளர் மீது போடப்பட்டது. உதாரணமாக 1880ல் கொண்டுவரப்பட்ட 19ம் இலக்க சட்டமூலத்தின் கீழ் (Ordinance No 19 of 1850) தோட்டக் குடியிருப்புகளை கண்காணிப்பதற்காக மருத்துவ அதிகாரிகள் (Superiuteuding Medical officers) நியமிக்கப்பட்டனர். ''தோட்டக் குடியிருப்புகளைச் சுற்றிவர மலசலம் கழிக்கப்பட்டு துர்நாற்றம் வீசுவதால் நோய்கள் பரவுகின்றன. எனவே போதியளவு மலசலகூடங்கள் அமைத்துக் கொடுக்கப்படவேண்டும்'' என அவர்கள் சிபாரிசு செய்தனர். அதற்கு தோட்டத்துரைமார் சம்மேளனம் ''தோட்டத் தொழிலாளர்கள் மலசலகூடங்களைப்பயன்படுத்த விரும்புவதில்லை. அல்லது அவற்றைச் சுத்தமாகப் பயன்படுத்த அவர்களுக்குத் தெரியாது'' எனவாதிட்டது.

இரண்டு, தவறான ஒப்பீடுகளைச்சுட்டிக்காட்டி தோட்டக் குடியிருப்புகளின் நிலைமை அவற்றைவிட மேலானதாக இருப்பதாக வாதிட்டனர். உதாரணமாக முன்னர் கூறப்பட்ட மருத்துவ அதிகாரிகள் லைன் அறைகளின் சுகாதாரமற்ற நிலைமையைக் குறைகூறிய போது ''இந்தியாவிலே தெருவோரங்களில் நித்திரை கொள்கின்ற இவர்களது உறவினர்களை விட இந்நாட்டில் வாழும் ஏழைக் கிராமவாசிகளை விட இவர்களது நிலைமை மேலானது'' எனதுரைமார் வாதிட்டனர்.

மூன்று, உண்மையை உரைத்தமைக்காக அதிகாரிகளை வஞ்சம்தீர்த்தனர். உதாரணமாக 1886ல் வெள்ளைக்காரரான டாக்டர் எச்.தோர்ன்ஹில் (Dr.H.Thorn Hill) என்ற கண்காணிப்பு மருத்துவ அதிகாரி ஒரு கோப்பித் தோட்டத்தை பார்வையிட்டு அதன் லைன் அறைகளின் சகிக்கவொண்ணா நிலைமையை காரசாரமாக கண்டித்துக் குறிப்பு எழுதியதுடன் அதற்குப் பொறுப்பான தோட்டத்துரை மீதும் கணக்கப்பிள்ளைமீதும் வழக்குத் தொடரப்படுதல் வேண்டுமென விதந்துரைத்தார். அடுத்தவருடம் (1887) மீண்டும் அவர் அதே தோட்டத்திற்கு விஜயம் செய்த போது நிலைமை சிறிதேனும் மாற்றமடையாமல் இருந்ததுடன் துரை மீதும் கணக்கப்பிள்ளை மீதும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படாமல் இருந்ததையும் கண்டு கொதிப்புற்றார். தோட்டக் குடியிருப்புகளின் அவல நிலை மாறாமலிருப்பதற்கு, பொறுப்பானவர்கள் சட்டப்படி தண்டிக்கப்படாமல் இருப்பதே காரணம் எனக் குறிப்பிட்டு தான்விதந்துரைத்தவாறு அவ்விருவருக்கும் சட்டப்படி தண்டனை வழங்குமாறு மீண்டும் வலியுறுத்தினார் இதனால் ஆத்திரமுற்ற துரைமார் சம்மேளனம் அவர் மீது வசவுகளைப் பொழிந்தது.

அதே காலத்தில் இன்னொரு சம்பவமும் நடைபெற்றது. மற்றொரு வெள்ளைக்கார டாக்டரான கிறிபின் (Griffin) எபொட்ஸ்போர்ட்'' (Abbotsford) தோட்டத்தைச் சேர்ந்த ஒரு பெண் தொழிலாளியின் மரணத்திற்கு அத்தோட்டத்துரையின் அலட்சியமே காரணம் என தனது குறிப்பில் குறிப்பிட்டார். துரதிர்ஷ்டவசமாக அத்தோட்டத்துரை பிரபல ''ஒப்சேவர்'' பத்திரிகை ஆசிரியரான ஏ.எம் பேர்குசனின்மகனானபடியால் பத்திரிகைகள் யாவும் உண்மையைச் சொன்ன மருத்துவ அதிகாரிக்கு எதிராக போர்ப்பிரகடனம் செய்தன, டாக்டர்கள் கிறிபின், தோர்ன்ஹில் ஆகிய இருவரையும் பதவியிலிருந்து நீக்கிவிடவேண்டுமென எழுதின. துரைமார் சம்மேளனம் ''தகுதிவாய்ந்த மருத்துவர்களுக்கு பெரும்தட்டுப்பாடு நிலவும் இக்காலகட்டத்தில் தோட்டங்களைக் கண்காணிப்பதற்கென தனியாக, கொழுத்த சம்பளம் வாங்கும் வெள்ளைக்கார மருத்துவர்களை நியமிப்பது அநாவசியமான பணவிரயமாகும். எனவே இத்திட்டத்தை அடியோடு கைவிட வேண்டும்'' எனதீர்மானம் நிறைவேற்றியது. இவற்றின் விளைவாக 1887ல் மருத்துவர்களால் தோட்டத் தொழிலாளர் குடியிருப்புகள் கண்காணிக்கப்படும் முறை கைவிடப்பட்டது.

மற்றொரு உதாரணம்: 1870ல் கம்பளை மருத்துவமனையில் கடமையாற்றிய சத்திரசிகிச்சை நிபுணரான டொக்டர் டப்ளியூ. ஜீ. வென்டோர்ட் (Dr.W.G.Vandort) என்பவர் தோட்டத் தொழிலாளர்களின் மரணவீதம் தொடர்பாக துரைமார்களின் கணிப்பீட்டுக்கு முரணாக, காலனியல் செயலாளருக்கு அறிக்கை சமர்ப்பித்ததற்காக காலரா நோய் தாண்டவமாடிய மாத்தறைப் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். தோட்டத்துரைமாரின்நலனை பிரதிநிதித்துவப்படுத்திய பத்திரிகைகளும், துரைமார் சம்மேளனமும் அவரை சகித்துக் கொள்ள மறுத்தன.

### தேயிலைக் காலம்:

தேயிலையின் பரீட்சார்த்தக் காலம் முடிவடைந்து அது நிலை பெறத்தொடங்கிய இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியாவிலே தேசியவாத அலை வீசத்தொடங்கியிருந்தது. கிறிஸ்தவ மனிதாபிமான இயக்கங்களும் செல்வாக்குப் பெற்றிருந்தன. இவை இலங்கை வாழ் இந்தியத் தொழிலாளர்களின் அவலநிலை குறித்தும் கரிசனை காட்டின. இலங்கையிலும் சேர். பொன் அருணாசலம் போன்ற மிதவாதத் தலைவர்களும் தோட்டத் தொழிலாளர்களுக்காகக் குரல் எழுப்பினர். இதனால் இந்தியா இவ்விடயத்தில் தலையிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அத்துடன் கோப்பிப்பயிர்ச்செய்கையைப் போலல்லாது தேயிலைத் தோட்டத்திற்கு வருடந்தோறும் வேலைக்குத் தொழிலாளர்கள் தேவைப்பட்டனர். எனவே நிரந்தர தொழிலாளர்களைப் பெறுவதற்கு ஏற்புடைய சூழலை உருவாக்கக் கூடிய சில சட்டங்கள் உருவாக்கப்பட்டன. அவற்றுள் ஒன்று 1920களில் கொண்டு வரப்பட்ட மருத்துவ சேவைகள் சட்டமாகும். இச்சட்டத்தின்சில விதிகளுக்கமைய முதற்தடவையாக தோட்ட லைன்களைச் சுற்றிவர வடிகால்கள் அமைக்கப்பட்டன.

1920களில் கோப்பி வளர்ந்த பிரதேசங்களுக்கு வெளியே அதுவரை மனித குடியிருப்புகள் அமைந்திராத உயர் மலைநாட்டுக்கும் தேயிலை பரவியது. இதனால் புதிய தேயிலைத் தோட்டங்களில் புதிதாக லைன்கள் அமைக்கப்பட்டன. இவை ஒப்பீட்டு ரீதியில் ஓரளவு நீண்டகாலம் தாக்குப்பிடிக்கக் கூடிய விதத்தில் அத்திவாரமிடப்பட்டு, கூரைக்கு தகரமிடப்பட்டு அமைக்கப்பட்டன. கோப்பிக்கால லைன்கள் அநேகமாக மாற்றியமைக்கப்பட்டன. 1922ல் தோட்ட லைன்கள் அமைக்கவும் புதுப்பிக்கவும் ரூபா 22 மில்லியன் செலவிடப்பட்டது. 1927ல் 20 மில்லியன் செலவிடப்பட்டது. ஆனால், அதன் பின்னர் லைன்கள் அமைப்பதற்காக இதுபோன்று பெருமளவு பணம் ஒதுக்கப்படவில்லை.

சில விபரங்கள்:

✱ அரசாங்கப் புள்ளி விபரமொன்றின்படி பெருந்தோட்டங்களில் மொத்தம் 250,447 வீடுகள் உள்ளன. அவற்றில் 89.2வீதமானவை, அதாவது 220,189 அலகுகள் லைன் அறைகளாகும்.

✱ இவற்றில் பெரும்பாலானவை 1921- 45 காலப்பகுதியில் கட்டப்பட்டவை. நகர கிராமப்புற வீடமைப்புத் திட்டங்கள் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது 1945ன் பின்னராகும். அதற்கு முந்தி மிகவும் பழமைவாய்ந்த காலாவதியான சாதாரண மக்களின் குடியிருப்புகளே லைன் அறைகள். வேறுவிதமாகக் கூறுவதெனில் இலங்கையிலுள்ள சாதாரண மக்களின் வீடுகள் அமைக்கப்பட்ட காலத்தைப்பட்டியலிட்டு காலக்கிரமப்படி பழைய வீடுகளை புனர்நிர்மாணம் செய்வதாயின் தோட்டப்புற லைன் அறைகளே முதலிடத்தைப் பெறும்.

✱ பொதுவாக வீடுகள் நிரந்தரமானவை. தற்காலிகமானவை. இடைத்தரமானவை என வகைப்படுத்தப்படுகின்றன. நன்கு அத்திவாரமிடப்பட்டு சீமேந்தினால் கட்டப்பட்டு நிரந்தரக் கூரையிடப்பட்ட வீடுகள் நிரந்தரமானவையென்றும் அவற்றின் ஆயுட்காலம் 30 வருடங்கள் என்றும் கணிக்கப்படுகின்றன. ''லைன் அறைகள்'' அத்திவாரமிடப்பட்டு தகரக்கூரைகள் கொண்டவையாக கருதப்பட்டு தரை மண்ணால் மெழுகப்பட்டிருப்பதால் இடைத்தர வீடுகளாகவும் இவற்றின் நீடித்து வாழும்காலம் 10 -15 வருடங்களாகவும் கணிக்கப்படுகின்றன. ஆனால், 5 முதல் 10 தசாப்தங்களுக்கு மேலாக உருக்குலைந்த நிலையிலும் இன்றும் கூட தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்புக்களாகத்திகழ்கின்றன.

✱ ஒரு ஆய்வின் படி 10 X12 அடி கொண்ட லைன் அறையில் சராசரி 5.5 பேர் வாழ்கின்றனர். 10 முதல் 12 பேர் வாழும் லைன் அறைகளும் உண்டு.

✱ சுமார் 20 லைன் அறைகளைக் கொண்ட ஒரு தொகுதியில் இரவு கண்ணுறங்கும் தொழிலாளர் குடும்பங்களின் நித்திரையையும் அமைதியையும் குலைப்பதற்கு ஒரு குடிகாரனின் சப்தமோ ஒரு குழந்தையின் அழுகுரலோ போதும்.

✱ கணவன், மனைவி, பெற்றோர், பருவப் பெண்கள், பாலகர்கள். வயோதிபர், நோயாளிகள் அனைவரும் ஒரே அறையில் படுத்துறங்கும் துரதிர்ஷ்டத்தை இங்கு சர்வசாதாரணமாகக் காணலாம்.

✱ ஆசியாவில் கல்வித்தரம் கூடிய நாடுகளில் ஒன்று இலங்கையாகும். ஆனால், மலையகம் கல்வியில் பின்தங்கியே உள்ளது. இலங்கையில் எழுத வாசிக்கத் தெரிந்தவரின் வீதம் 87.2/%ஆக இருக்கும் அதே சமயம் மலையகத்தில் 66.9%வீதமாக உள்ளது. இதற்கு லைன் அறைகளில் மின்சாரம் இன்மையும் படிப்பதற்கு அமைதியான இடம் இல்லாமையும் ஒரு பிரதான காரணமாகும்.

தோட்டத்தொழிலாளர் மத்தியில் காணப்படும் நோய்களில் 43.0% வீதமானவை சுவாசம் சம்பந்தமானவை. 14.2% குடலோடு சம்பந்தப்பட்டவை. சுவாச நோய்களின் வீதாசாரம் கூடுதலாக இருப்பதற்கு லைன் அறைகளின் ஒவ்வாத நிலைமையும் காரணமாகும். சொறி, சிரங்கு, சின்னம்மை போன்ற தொற்று நோய்கள் இங்கு திடீரென வேகமாகப் பரவுவதற்கு இடநெருக்கம் பெரிதும் காரணமாகிறது.

✱ மரண வீதாசாரத்தில் மலையகமே முதலிடம் வகிக்கிறது. இங்கு நிலவும் உகந்த காலநிலை மாத்திரம் இல்லாதிருக்குமானால் இறப்பு வீதம் இன்னும் அதிகமாக இருக்கும்.

✱ தோட்டப்புறங்களில் உள்ள லைன்களில் சுமார் 12% சதவீதமானவை மனிதாபிமான நிறுவனங்களினால், புனரமைக்கப்பட்டன. ஆனால், நிர்வாகிகளும், ஒப்பந்தக்காரரும் கூட்டாகப் புரிந்த ஊழல் காரணமாக அவை எதிர்பார்த்த தரத்தைக் கொண்டிருக்கவில்லை. மீண்டும் அவை உடைந்து விழும் நிலைக்கே தள்ளப்பட்டுள்ளன.

✱ எனவே இன்று சுமார் 95% சதவீதமான (209,180) லைன் அறைகள் உடைந்து விழும் நிலையில் உள்ளன. குடும்ப வாரிசாக சகல தொழிலாளர் குடும்பங்களும் நவீன வீடுகள் அமைப்பதாயின், சுமார் 250,000 வீடுகள் அமைக்கப்பட வேண்டும்.

✱ தற்போது பெரும்பாலான லைன் அறைகள் வாழ்வதற்குரியனவாக இல்லை. மழைக்காலங்களில் கூரைகள் ஒழுகுவதாலும், உடைந்து விழுமோ என்ற பீதி காரணமாகவும் தோட்டத் தொழிலாளர்கள் குழந்தை குட்டிகளோடு கோயில்களிலும் பாடசாலைகளிலும் தஞ்சம் புகும் நிலைமை பரவலாகக் காணப்படுகிறது.

பி.ஏ.காதர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சமாதானம்: தேவை மக்களின் பங்களிப்பே!



ச.பாலகிருஷ்ணன்

எந்த விலை கொடுத்தும் சமாதானம் நிலைநாட்டப்படும். இதுதான் ஜனாதிபதியாகப் பதவியேற்ற போது சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கூறிய வார்த்தைகள். ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் பழைமை வாய்ந்த இந்தப் புரையோடிப்போன பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதை மிக எளிதான விடயமாகத் தான் அப்போது அவர் விளங்கிக் கொண்டிருந்தார் போலும். புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தை நடவடிக்கைகளை மிகவும் ஜனரஞ்சகமானதொன்றாக (Sensational) ஆக்கிய அவர், அவருடைய மலினத்துவமான (Populist) அரசியல் நடவடிக்கைகளின் மூலமாக மேற்கொண்ட சமாதான நடவடிக்கைகள் ஒரு சோடாப் போத்தலைத் திறந்தவுடன் வெளியாகும் வாயுவைப்போல மிக விரைவிலேயே முடிந்து விட்டது. விளைவு; மீண்டும் யுத்தம்! அதுவும் மிகவும் மிலேச்சத்தனமாக ஆரம்பிக்கப் பட்டு விட்டது. இந்நிலையில் சமாதானம் பற்றிய மக்களின் எதிர்பார்ப்பு மீண்டும் ஒரு கனவாகி விட்டதா? இல்லையேல் சமாதானத்தை வென்றெடுக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் இன்னும் இருக்கின்றனவா?

### இனவாத முரண்பாடு

பிரித்தானிய அரசு இலங்கைக்கு வழங்கிய பாராளுமன்ற சுயாதிபத்தியத்துடனான ஒற்றை ஆட்சியும், பெரும்பான்மையினரின் ஜனநாயக நடைமுறைகளும் தவறான வழிகளில் பெரும்பான்மையின அரசியற் கட்சிகளினால் பயன்படுத்தப் பட்டு, அவர்களது இனரீதியான ஆதிக்கத்தை அரசியலில் நிலைநாட்டிக் கொள்ள மேற்கொண்ட முயற்சியும் இதன் மூலம் தமிழ் மக்களின் சமத்துவம் இழக்கப்பட்டமையுமே இனவாத முரண்பாட்டிற்கான அடிப்படையாகும். தமது உரிமைகளுக்காக ஜனநாயக ரீதியில் போராடிய தமிழர்களின் போராட்டத்தை இராணுவ துணைகொண்டு அடக்க முயன்றதன் விளைவாக தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராட முன்வந்தனர். 1979ம் ஆண்டு, ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் ஐ.தே.க. அரசு தமிழர்களுக்கெதிரான படுகொலை யுத்தத்தைப் பிரகடனப் படுத்தியதைத் தொடர்ந்து இம்முரண்பாடு முழுமையாக இராணுவ மயப்படுத்தப்பட்டது. தமிழீழக் கோரிக்கையானது தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்திற்கான ஒரு கவர்ச்சி மிகுந்த இலக்காக அமைந்ததோடு அதற்கான ஆதரவும் பெருக ஆரம்பித்ததன் விளைவாக தமிழ் மக்கள் மத்தியில் ஜனநாயகக் கட்டமைப்புகள் சீர்குலைந்து போயின. ஆயுதப் பலத்திற்குக் கட்டுப்பட வேண்டிய நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டனர்.

### போரும் சமாதானமும்

சிங்களப் பிரதேசங்களில், யுத்த நடைமுறையானது சிங்கள மக்களைக் கவரக் கூடிய மிகவும் கவர்ச்சிகரமான ஒரு அரசியல் உபகரணமாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இம்முரண்பாட்டின் உண்மை நிலைமைகள் பற்றிய புரிந்துணர்வை ஏற்படுத்திக்கொள்ள வாய்ப்பற்றிருந்த சிங்கள மக்கள் மத்தியில், தமிழர்கள் பற்றிய பீதியையும் யுத்தத்தைத் தவிர்க்க முடியாத நிலைமைகள் பற்றியும் உண்மைக்குப் புறம்பான பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டு அரசுக்கான ஆதரவு தேடப்பட்டு வந்தது. அரசு தன்வசமுள்ள அடக்குமுறைச் சட்டங்களை ஜனநாயக விரோத ரீதியில் பாவித்து தென்னிலங்கையில் இயங்கிய யுத்த எதிர்ப்பு, இனவாத எதிர்ப்பு சக்திகளைப் பலவீனப்படுத்தியது. இருபுறமும் யுத்த முனைப்புகள் மட்டுமே மிஞ்சியிருந்தன.

ஒரு தசாப்தத்திற்கு மேலாக முன்னெடுத்துச் செல்லப்பட்ட அரசின் இந்தச் செயற்பாடு தமிழ் இளைஞர்களின் ஆயுதப்போராட்டத்தின் காரணமாகவும் சர்வதேசரீதியில் ஏற்பட்ட தாக்கங்களின் காரணமாகவும், யுத்தத்தின் உண்மையான விளைவுகளை மக்கள் உணரத் தொடங்கியதன் விளைவாக மக்கள் மத்தியில் தோன்றிய யுத்த எதிர்ப்பு உணர்வுகள் காரணமாகவும் பலவீனமடையத் தொடங்கின. இந் நிலைமைகள் தான் இலங்கை -இந்திய உடன்படிக்கைக்கு வழிசமைத்தன. எனினும் இலங்கை அரசின் நேர்மையற்ற தன்மையின் காரணமாக இம்முயற்சியும் தோல்வியடைந்து மீண்டும் யுத்தம் ஏற்பட்டது. அப்போதைய ஜனாதிபதி பிரேமதாசவுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளை முறித்துக்கொண்டு விடுதலைப்புலிகள் போரை ஆரம்பித்த விதமானது தென்னிலங்கையில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான உணர்வுகள் அதிகரிக்கக் காரணமாக அமைந்ததோடு புலிகளுக்கெதிராக யுத்தம் புரிய வேண்டிய தேவையையும், அதற்கான ஆதரவையும் அதிகரிக்கச் செய்தது. தமிழ் மக்கள் மத்தியில் வளர்ந்து வந்த சமாதானத்திற்கான எதிர்பார்ப்பு சிதறடிக்கப்பட்டது.

இப்படியாக முன்னெடுக்கப்பட்ட யுத்த நடைமுறைகளின் உண்மையான விளைவுகளை மக்கள் மீண்டும் உணர ஆரம்பித்தார்கள். விடுதலைப்புலிகள் தொடர்பான எதிர்ப்புணர்வு நாளுக்கு நாள் அதிகரித்து வந்தாலும், இப்பிரச்சினை இராணுவ ரீதியாகத் தீர்க்கப்படக் கூடியதல்ல என்ற நிலைப்பாடும் அதிகரிக்க ஆரம்பித்தது. 88-90ம் ஆண்டுகளில் மக்கள் விடுதலை முன்னணிக்கு எதிராக அரசு செயற்பட்ட விதம், அவசரகால, பயங்கரவாதத் தடைச் சட்டங்களைப் பயன்படுத்திய விதம் போன்ற பல்வேறு அனுபவங்கள் அரசு எதிர்ப்பு உண்ர்விற்கு வழி வகுத்தன. இவை இந்நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்ட வேண்டியதன் அவசியத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியது.

மறுபுறத்தில் இனவாத முரண்பாட்டிற்கான அரசியல் தீர்வின் அவசியத்தையும், யுத்தத்தின் விளைவுகளையும் அடிப்படையாகக் கொண்ட இனவாத எதிர்ப்பு, யுத்த எதிர்ப்பு செயற்பாடுகள் பரவலாக செயற்படுத்தப்பட்டன. அரச சார்பற்ற மனித உரிமை அமைப்புகளினாலும், தொழிற்சங்கங்கள், இடதுசாரி அரசியற் கட்சிகள் மற்றும் சமூக அமைப்புகளினாலும் முன்னெடுத்துச் செல்லப்பட்ட இச்செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இனவாத முரண்பாடு பற்றிய கருத்தரங்குகள், சமாதான ஊர்வலங்கள் யுத்த எதிர்ப்புப் பேரணிகள் போன்றவை நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பரவலாக நடைமுறைப்படுத்தப்பட்டன. மாற்றுப்பத்திரிகைகளின் வளர்ச்சியும், போருக்கு எதிராக இவை அமைத்துக் கொடுத்த தளங்களும், சுதந்திர தொடர்பூடக இயக்கம் போன்ற அமைப்புக்கள் மேற்கொண்ட பிரச்சார நடவடிக்கைகளும் நாட்டில் ஜனநாயகத்தையும், சமாதானத்தையும் நிலைநாட்ட வேண்டியதன் தேவைகளை உணர்ந்து கொண்டவர்களின் தொகையை அதிகரித்தது.

### பொதுஜன ஐக்கிய முன்னணி

இந்த வகையில் மக்கள் மத்தியில் உருவாக்கப்பட்ட சமாதானத்திற்கான எழுச்சியைத் தனது தேர்தலுக்கான சாதகமான களமாக பொது ஜன ஐக்கிய முன்னணி பயன்படுத்திக் கொண்டது. 1994ம் ஆண்டு மாகாணச்பைத் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல், 1995ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் போன்ற தேர்தல்களில் ஜனநாயகத்தை மீள்வித்தல், இன சமாதானத்தை நிலைநாட்டல் போன்ற வாக்குறுதிகள் மிக முக்கிய இடங்களைப் பிடித்தன. ஆட்சியில் இருந்த ஐ.தே.கவை விட மாறுபட்ட வாக்குறுதிகளாக இவை மட்டுமே காணப்பட்டன.

பதவிக்கு வந்த பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு இம்மக்கள் மத்தியில் ஏற்பட்ட சமாதானத்திற்கான எதிர்பார்ப்பை அதன் நிகழ்ச்சி நிரலாக மாற்றிக் கொண்டு மிகவும் மலினத்துவமான வகையில் சமாதானத்திற்கான நடைமுறையில் இறங்கியது. எவ்விதமான வல்லமையோ, நிபுணத்துவமோ, அல்லது முறையான ஏற்பாடோ இல்லாத வகையில் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகள் முறிவடைந்து மீண்டும் யுத்தநிலைக்கு மக்கள் தள்ளப்பட்டனர். 1990ம் ஆண்டைப் போலவே இம்முறையும் விடுதலைப்புலிகளே இப்பேச்சுவார்த்தை நடைமுறைகளை முறித்துக் கொண்டனர். தமது இந்தத் தீர்மானத்திற்கான காரணிகளை மக்கள் முன்வைக்கவும் இல்லை. இந்நிலைமையானது தமிழீழக் கோரிக்கையை விடுதலைப் புலிகள் கைவிடத் தயாரில்லை. போர்நிறுத்தம் என்பது அவர்கள் தங்களைத் தயார் செய்து கொள்வதற்காகப் பயன்படுத்தும் கால அவகாசம் மட்டுமே. எனவே விடுதலைப்புலிகளுடன் போர் நிறுத்தம் செய்வதிலோ, பேச்சுவார்த்தை நடத்துவதிலோ பயனில்லை என்ற மனநிலையை தென்னிலங்கையில் மீண்டும் தோற்றுவித்தது. 1990ம் ஆண்டு போர்நிறுத்தத்தை விடுதலைப்புலிகள் மீறிய விதம் தொடர்பாக புலிகள் மீதான சந்தேகத்துடன் இருந்த இராணுவத்தின் கை மேலோங்குவதற்கும், இலங்கையில் சமாதானத்தை அடைவதற்கான போராக இப்போர் இனங்காணப்படுவதற்கும் இது வழி வகுத்தது. சமாதான முயற்சிகள் புலிகளினால் வாபஸ் பெறப்பட்ட சம்பவமானது சமாதானத்தை நோக்கிச் செயற்பட்ட பலரை யுத்தத்தை நியாயப்படுத்தும் நிலைக்குத் தள்ளியது. இத்தகைய போர் முனைப்புகள் மும்முரமாக முடக்கிவிடப்பட்ட சூழ்நிலைகளுக்கு மத்தியில்தான் அரசியல் தீர்விற்கான அரசின் பிரேரணைகள் முன்வைக்கப்பட்டன.

சமாதானத்தை அடைவதற்கான அடிப்படையாக அரசினால் வெளியிடப்பட்ட தீர்விற்கான பிரேரணைகள் தொடர்பான நடவடிக்கைகள் மிகவும் மந்தகதியில் வேண்டா வெறுப்பான சூழ்நிலையில் தான் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. ஆனால் போரை முன்னெடுப்பதற்கான முனைப்புகள் மிகவும் மும்முரமாக, அதிக ஆர்வத்துடன் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. அரசின் பிரேரணைகள் தொடர்பாக தமிழ் மக்களின் அபிலாஷைகளுடன் கருத்தொற்றுமையை ஏற்படுத்தும் எவ்வித முயற்சிகளும் அரசினால் மேற்கொள்ளப்படவில்லை. இப்பிரேரணையில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பாக கொழும்பில் இருக்கும் தமிழ்க் கட்சிகளுடன் கூட பேச்சுவார்த்தை நடத்த அரசு மறுத்து வருகின்றது. மறுபுறத்தில் சிலமாதங்களுக்குள் அரசின் பிரேரணைகள் சட்ட நகல் வரைவாக முன்வந்த போது முன்னைய பிரேரணையின் தரம் குறைக்கப்பட்டுள்ளதோடு பௌத்த மதத்தை முதன்மைப்படுத்தும் நடவடிக்கையும் உறுதி செய்யப்பட்டிருக்கின்றது.

அரசினுடைய பிரேரணைகள் வெளியிடப்பட்டதற்கு பின்பு இவற்றில் காணப்படுகின்ற குறைபாடுகளை இனங்கண்ட அரசுக்கு ஆதரவான பல்கலைக்கழகப் புத்திஜீவிகள் சிலர் ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கிணங்க இந்தப் பிரேரணையில் காணப்பட்ட குறைகளை நிறைவு செய்வது தொடர்பாக ஆய்வு செய்து அவர்களின் சிபாரிசுகளை அரசயாப்பு விவகார அமைச்சரிடம் கையளித்து பல வாரங்களுக்குப் பிறகுதான் அரசின் சட்ட நகல் வரைவு வெளியிடப் பட்டது. ஆனால் இந்தப் புத்தி ஜீவிகளின் எந்தச் சிபாரிசையும் அரசு கணக்கில் எடுத்ததற்கான அறிகுறியெதனையும் சட்டவரைவில் காணமுடியவில்லை.

அரசு முன்வைத்துள்ள அதிகாரப் பங்கீடு பற்றிய பிரேரணைகள் இதுவரை இப்பிரச்சினைகளின் தீர்விற்கு முன்வைக்கப்பட்ட பிரேரணையில் மிகவும் முன்னேற்றகரமானது என்பதோடு இப்பிரச்சினையின் தீர்விற்கு உகந்த அடிப்படை அம்சங்கள் பலவற்றைக் கொண்டிருக்கின்றது என்பதையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். எனினும் இந்நாட்டின் இனவாத முரண்பாட்டைத் தீர்ப்பதற்குப் போதுமானவையாக இவை அமையவில்லை. அத்தோடு இப்பிரச்சினையின் தீர்விற்கு மிக அடிப்படை அம்சங்களான தமிழ் மக்களின் சுயாட்சிக்கான உரிமையை அங்கீகரிக்கக் கூடிய பிராந்திய அதிகார அலகு, மத்தியில் பெரும்பான்மையின ஜனநாயக நடைமுறைகளை தடுத்து நிறுத்தக் கூடிய வகையிலான அதிகாரப் பகிர்வு போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக எவ்விதப் பிரேரணைகளையும் முன்வைப்பது எவ்விதக் காரணங்களுமின்றி தாமதிக்கப்பட்டு வருவதால் இத்தீர்வுப் பிரேரணைகள் தொடர்பான முழுமையான கலந்துரையாடல்களை ஏற்படுத்த முடியாதுள்ளது. இவ்விதமாக அரைகுறையாக செயற்படும் அரசின் செயற்பாடானது, யுத்தத்திற்கான எதிர்ப்புகளைத் தோற்கடித்து, சர்வதேச ரீதியில் தனது யுத்த நடைமுறைகளுக்கு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளும் ஒரு தந்திரோபாய நடவடிக்கையாகத்தான் தீர்விற்கான பிரேரணைகள் வெளியிடப்பட்டன என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் வேரூன்றுவதற்கு வழிவகுத்துள்ளது.

இம்முரண்பாட்டின் தீர்விற்கு தவிர்க்க முடியாத கட்சிகளில் ஒன்றான ஐ.தே. கட்சியின் ஆதரவைப் பெறுவதற்கான எந்தவிதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் இதுவரை மேற்கொள்ளப் படவில்லை. மற்றைய கட்சியான விடுதலைப் புலிகளுக்கு இதுவரை இப் பிரேரணை அரசினால் அனுப்பிவைக்கப் படவும் இல்லை.

இந்த மிலேச்சத்தனமான யுத்தத்திற்கு மனித முகமூடியை அணிவிப்பதையும், யுத்தத்திற்கான ஆதரவை சிங்கள மக்கள் மத்தியில் தேடுவதையும் இலக்காகக் கொண்டு, அரசின் யுத்த நடைமுறையின் ஒரு அங்கமாக வெண்தாமரை (சுது நெலும்) இயக்கத்தை வளர்த்தெடுப்பதன் மூலம் தேசிய ஒருமைப்பாட்டைப் பேரினவாதக் கண்ணோட்டத்தில் அடைய முயலுகின்றது இவ்வரசு. எனினும் இம்முயற்சிகளுக்கு அரசுக்குள்ளேயே எதிர்ப்புகளும் உருவாகியிருக்கின்றன.

போரும் இனவாதமும் இரண்டும் ஒன்றுக்கொன்று பின்னிப் பிணைந்த விடயமாகும். சிங்கள, தமிழ் சமூகங்களில் போரின் முனைப்புகள் அவ்வச் சமூகத்தில் நிலவும் இனவாத உணர்வுகளைத் தூண்டுபவையாகவே வளர்ந்து வந்துள்ளன. இவ்வரசின் போர் முயற்சிகளை எதிர்க்கக் கூடிய சமாதான நடைமுறைகளின் மூலம் இனவாத முரண்பாடு தீர்க்கப்பட வேண்டும் என்று குரல் கொடுக்கக் கூடியவர்களின் தொகை சிங்கள மக்கள் மத்தியில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றமையைக் காணக்கூடியதாக இருக்கின்றது. எனினும் இவர்களை ஒன்று திரட்டி ஒருங்கிணைத்த சக்தியாக சமாதானத்தை வென்றெடுப்பதற்கான சாதகமான பங்களிப்புகளை ஏற்படுத்தக் கூடிய ஒரு சமாதான இயக்கமாக அரசின் யுத்த முனைப்புகளுக்கு சவாலாக உருவாக்குவது இன்று எம்முன் உள்ள முக்கிய பணியாகும்.

மறுபுறத்தில் பேச்சுவார்த்தைகளிலிருந்து விலகிய விடுதலைப்புலிகளை மீண்டும் பேச்சுவார்த்தைக்கு முன்வருமாறு கோரக் கூடிய துணிவும், அரசியல் இடைவெளியும் தமிழ் மக்களிடம் இல்லாமலிருப்பது ஒரு பெரும் குறைபாடாகும். சிங்களவர்களின் சார்பாக செயற்படும் அரசும் சரி, தமிழர்களின் சார்பாக செயற்படும் புலிகள் அமைப்புமம் சரிஎவ்வகையான தீர்க்கமான முடிவுக்கு வரும்போதும் மக்களின் அபிலாஷைகளைப் புறக்கணித்து நடவடிக்கைகளில் இறங்குவது ஒரு சாதாரண விடயமாக மாறி விட்டது. இந்நிலையில் போரும், சமாதானமும் இவ்விரு சக்திகளினதும் இருப்புக்கும், வெறுப்புக்கும் உட்பட்ட ஒரு விடயமாக வரையறுக்கப் பட்டு இதன் விளைவுகளை சுமக்க வேண்டிய நிலைமை மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

### மக்களின் கடமைகள்

இந்நிலையில் வழமையாகத் தமது அரசியல் தலைமைகளின் விருப்பு, வெறுப்புக்கு அடிபணிந்து தமது தீர்க்கமான பங்களிப்பில்லாமல் மேற்கொள்ளப் படுகின்ற தீர்வுகளின் விளைவுகளுக்கு ஆளாவதா? அல்லது தங்களுடைய நிலைப்பாடுகளை கௌரவிக்கும் ஒரு அரசியல் நடைமுறையை ஏற்படுத்திக் கொள்வதில் பிரசைகளான எமக்கு உள்ள பங்களிப்பையும் கடமையையும் ஏற்று அவ்வரசியலில் தீர்க்கமான பங்களிப்பைச் செலுத்தக் கூடிய சக்தியாக உருவாவதா என்ற விடயம் ஆராயப்பட வேண்டிய தொன்றாகும்.

யுத்தமும், சமாதானமும் சுழற்சியில் சுழன்று கொண்டிருக்கும் இவ்வரசியல் சூழ்நிலையை இடைநிறுத்தி யுத்த முனைப்புகளைத் தோற்கடித்து சமாதானத்திற்கான அடித்தளத்தை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பை இந்நாட்டில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம் சமூகங்களைச் சார்ந்த மக்கள் பிரசைகள் என்ற அடிப்படையில் ஏற்றுக்கொள்ள முன்வருவதன் மூலமே இந்நிலைமைகளை மாற்றியமைக்க முடியும்.

சிங்கள மக்கள் மத்தியில் தென்னிலங்கையில், இதற்கான சிறந்த ஜனநாயகத் தளம் உருவாகிக் கொண்டு வருகின்றமையைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இத்தளத்துடன் இணைந்து செயற்படக்கூடிய தமிழ், முஸ்லிம் பிரசைகளைக் கொண்ட சக்திகளைக் கட்டியெழுப்புவதும் இவை சமாதானத்திற்கான சுதந்திரமான மக்கள் இயக்கமாக, கட்சி அரசியல்களுக்கு அப்பால், உருவாக்குவதன் மூலம் தான் இந்நாட்டின் இனவாதம் இல்லாதொழிக்கப் பட முடியும். இவ்வகையாக உருவாகின்ற பலமான சமாதான இயக்கமானது அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் அப்பால் நின்று ஒரு அதிகார அரசியல் நோக்கமற்ற வகையில் பிரசைகளின் சமாதான சக்தியாக மூன்றாம் தரப்பிலிருந்து இவ்விரு சக்திகளுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தி மக்களின் சமாதானத் தேவைகளுக்கு அனுகூலமான சூழ்நிலையைத் தோற்றுவிக்க முயல வேண்டும். இதுவரை காலமும் வெறும் பார்வையாளராக இருந்த மக்கள் இந்நடைமுறையின் பங்காளிகளாக மாறாமல் சமாதானத்தை அடைய முடியாது என்பதை எமது கடந்து போன வரலாற்று அனுபவங்களின் மூலம் தெரிந்து கொள்ளலாம். எனவே, இன்று தோன்றியுள்ள யுத்தநிலைமையைத் தோற்கடித்து சமாதானத்தை நிலைநாட்ட மேற்கொள்ள வேண்டிய நீண்ட பயணத்தின் ஆரம்பமாக அமையவேண்டியதும் இதுவே.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எழுவன்குளம்: ஈழக்காளிக்கு இன்னும் இரத்தப் பசிய

''அதோ அங்கே தூரத்தில் யாரோ தெரிகிறார்கள். அந்தப் புதருக்குள் யாரோ ஒழிந்திருப்பது போல் தெரிகிறது...''

எங்களோடு பேசிக்கொண்டிருந்த அந்தப் பெண்மணி இப்படித்தான் திடீரென்று பயந்து அரற்றத் தொடங்கினார்.

அவர் காட்டிய திசையில் நாங்களும் நோக்கினோம். அப்படி எதனையும் எங்களில் ஒருவராலும் காண முடிய வில்லை.

''சீச்சீ.. அப்படியெவரும் அங்கேயில்லை. பயப்படாதீர்கள்...!'' என அவரை ஆசுவாசப்படுத்தினோம். அத்தோடு அவர் அதனைச் சொல்வதை நிறுத்தினாலும், அவரது முகத்திலிருந்த பயம் கலையவில்லை. இது சகல எல்லைப்புற சிங்கள, தமிழ், முஸ்லிம், கிராமத்தவருக்கும் உள்ளூர ஊறிவிட்ட பயம். இந்தப் பயத்தை ஆறுதல் கூறுவதற்கூடாகவோ ஓரிருவருக்கு துவக்கு கொடுப்பதனூடாகவோ அல்லது இடம்பெயர்ப்பதற் கூடாகவோ தீர்த்துவிட முடியாது.

அண்மையில் எழுவன்குளத்தில் உள்ள எல்லைப்புற கிராமத்தவர்கள் மீது நடத்தப்பட்ட படுகொலைகளைப் பற்றி தெரிந்து கொள்வதற்காகச் சரிநிகர் சென்றிருந்தபோதே அப்பகுதிவாசிகள் கொண்டிருக்கும் உயிர்ப்பிரச்சினையை நேரடியாகவே அறியக்கூடியதாக இருந்தது. இக்கிராமத்தைச் சேர்ந்த தீப்தி எனும் பெண்ணிடம் இச்சம்பவம் பற்றி நாம் விசாரித்த போதே அவர் அவ்வாறு பயந்து அரற்றினார்.

பேரையும் இழந்து விட்டோம். உயிருடன் வரவா போகிறார்கள்? '' என்று கருத்துக் கூற மறுத்தாலும் பின்னர் அவர் சில விபரங்களைத் தெரிவித்தார். வந்தவர்கள் களவெடுக்க வந்திருக்கவில்லையென்றும் கொல்லப்பட்டவர்களின் உடம்பில் சில நகைகள் இருந்தபோதும் அவை அபகரிக்கப்படவில்லை என்றும் தெரிவித்தார். தங்களது டிரக்டரைக் கொண்டு செல்வதற்காகவே அவர்கள் வந்தார்கள் எனச் சிலர் சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால் அதற்குத்தான் வந்துள்ளனரென்றால் ஏன் அந்த டிரக்டரை அந்தளவு சின்னாபின்னாபடுத்தி விட்டுச் சென்றார்கள்? ஏன் இத்தனை பேரையும் கொன்றார்கள்? என்று கேள்வி எழுப்புகிறார் அவர்.

இதனைச் செய்தவர்கள் யார் என்று வினவிய போது ''எவர் இதனைச் செய்தார்கள் என எங்களால் நிச்சயமாகக் கூறமுடியாது'' என்றார்.

இவ்வட்டூழியங்களை வேறு சில அரசியற் கட்சிகள் செய்திருக்கலாம் என்ற அபிப்பிராயமும் நிலவுகிறதே உண்மையா? என வினவிய போது அப்படியும் கூறுகிறார்கள் எங்களால் சரியாகக் கூறமுடியாது.. என அக்கேள்விக்கு முற்றுப்புள்ளி வைத்தார் தீப்தி.

### சம்பவம் 1

யூன் 1ம் திகதி இரவு 12 மணியளவில் அறுவக்காறு கிராமத்துக்குள் நுழைந்த ஆயுதக் கோஷ்டி ஒன்று இரு இடங்களில் வைத்து நான்கு குடும்பத்தவர்களை கொன்று போட்டது. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 8 பேர் சுடப்பட்டு பின்னர் அவனுக்கு கால் இல்லையடா எனக் கூறினான்.

ஏனையோரை நோக்கி எழுந்திருங்கள்! எனக் கூறிய அவர்கள் கைகள், வாய் என்பன கட்டப்பட்ட 8 பேரையும் பின்பக்க வாசலை நோக்கிக் கொண்டு சென்றனர். அவர்களில் ஏழு வயதுச் சிறுவனான தினேஷை முன்னே இழுத்த அந்தப் புலி தினேஷின் உடைந்த கையை பின்னே இழுத்து வைத்து வதை செய்த போது அவன் கத்தினான். அக்கத்தலைத் தொடர்ந்து சிறுவனின் தாய் ரேணுகா 'என்ற பிள்ளை...' எனக் கத்த முயற்சித்த போது அக்குழுவின் தலைவர் என கூறத்தக்க ஒருவன் தமிழில் ஏதோ ஆணையிட்டான். அத்தோடு அந்தஎட்டுப் பேரின் மீதும் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. இயந்திரத்துப்பாக்கி தொடர்ந்து இயங்கியது. குண்டுபட்ட ஒவ்வொருவரும் ஒருவர் பின் ஒருவராக கீழே சாய்ந்தனர். 31 வயதையுடைய



### சம்பவம்-2

இது இப்படியிருக்க இச்சம்பவம் நடந்த இடத்திலிருந்து ஏறத்தாழ 100 மீற்றர் தூரத்திலுள்ள வீட்டைச் சேர்ந்த இரு குடும்பத்திலுள்ள 6 பேரை இழுத்துச் சென்று காட்டில் கொண்டுபோய் சுட்டுக் கொன்றுள்ளனர்.

கமகே சிறிசேன, மேரி ஜொசபின், மல்காந்தி, திலினி பெரேரா, பெனடிக் பெரேரா, மிதோரிஸ் சில்வா ஆகிய அறுவருமே அவ்வாறு கொல்லப் பட்டார்கள். இவர்களின் வீட்டுக்குப் புகுந்த ஆயுதந் தாங்கிய காடையர் கூட்டமொன்று சகலரதும் வாய், கைகளைக் கட்டிப் போட்டு இழுத்துச் சென்றே காட்டுக்குள் கொண்டு போய் சுட்டுக்கொன்றார்கள். கொண்டு செல்லப் பட்ட மொத்தம் ஏழுபேரில் ஒரு இளைஞர் மாத்திரம் படுகாயங்களுடன் உயிர் பிரியாத நிலையில் காப்பாற்றப்பட்டார் அடுத்த நாள் காலையில். இவர் தற்போது கொழும்பு பெரியாஸ்பத்திரி அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார். சிகிச்சை பெற்று வரும் துஷார பெரேரா (வயது 21) என்பவரின் மனைவியை சிலாபத்திலுள்ள பங்க தெனிய எனும் இடத்துக்கு சென்று சரிநிகர் சந்தித்த போது அவர் இப்படித் தெரிவித்தார்;

''அன்று இரவு 11-12 மணியளவில் வெளியில் தட்டினால் எனச் சத்தம் கேட்டது. நாங்கள் முழித்த போது அவர்கள் உள்ளே நுழைந்து விட்டிருந்தார்கள். எனது அப்பாவையும் தாக்கினார்கள். எல்லோரது கைகளையும் பின்னால் சேர்த்துக் கட்டினார்கள். 'உனது பெயர் என்ன?, நீ சிங்களமா?' எனக் கேட்டார்கள். அவர்கள் தமிழிலேயே கதைத்தார்கள். எனது பெயரைக் கேட்டதும் சிங்களமா? எனக் கேட்டதையும் நான் விளங்கிக் கொண்டு பதில் சொன்னேன். ஆரம்பத்தில் இராணுவத்தினர் என்றுதான் நினைத்தேன். பின்னர் தான் அவர்கள் புலிகள் என்ற சந்தேகம் வந்தது. நாங்கள் ஒருவரும் சத்தம் போடாமல் இருப்பதற்காக எங்களது வாயையும் கட்டினார்கள். பின்னர் எல்லோரையும் இழுத்துக் கொண்டு சென்றார்கள். காட்டுக்குள் செல்லும் ஒரு பாதைக்குள் எங்களைக் கூட்டிச் சென்றார்கள். போகும் போது பின்னால் பார்க்காது முன்னால் பார்க்கும்படி அடித்துக் கூட்டிச் சென்றார்கள். எனது கையில் எனது சிறு குழந்தையும் இன்னொரு சிறுமியும் இருந்தார்கள். எங்கள் மூவரையும் ஒரு இடத்தில் நிறுத்தி விட்டு ஏனையோரைக் கூட்டிக் கொண்டு ஒரு குழு சென்றது. இன்னொரு குழு எங்களைத் தனியாக விட்டு விட்டு



### எல்லாவற்றையும் இழந்து...

வண்ணாத்திவில்லு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் எழுவன குளம் பிரதேசத்தில் அமைந்துள்ள அருவக்காறு எனும் கிராமத்திலேயே இப்படுகொலைச் சம்பவம் நடைபெற்றது. சிறு குழந்தைகள், பெண்கள், வயோதிபர்கள் உட்பட மொத்தம் 14 பேரோடு வெட்டியும், சுடப்பட்டும், உயிரோடு கொழுத்தப்பட்டுமுள்ளார்கள்.

புத்தளம் நகரத்திலிருந்து சுமார் 40 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள இவ் அருவக்காறு கிராமம் வில்பத்து காட்டின் எல்லையில் அமைந்துள்ளது. வில்பத்து சரணாலயத்தையும் இக்கிராமத்தையும் பிரிக்கிறது கலாஓய ஆறு. இக்காட்டிலிருந்தே இம்மிலேச்சத்தனமான கொலைகளைப் புரிந்த ஆயுதந் தாங்கிய காடையர் கூட்டம் வந்திருக்கலாம் எனக் கிராமத்தவர்கள் தெரிவித்தனர்.

இச்சம்பவம் பற்றி தகவல் தெரிவித்த தீப்தி எனும் பெண்மணியின் குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார்கள். கொல்லப்பட்டவர்களில் G.S.பெரேரா என்பவரும் ஒருவர். அவர் இவரது தகப்பனார். சம்பவ தினத்தன்று தீப்தி வீட்டில் இருக்கவில்லை.

சரிநிகர் இவரை சந்தித்த போது வேறு இடத்திற்கு இடம் பெயர்வதற்காக வீட்டைக் கழற்றி அப்புறப்படுத்திக் கொண்டிருந்தார்கள். வீட்டைக் காலி பண்ணிவிட்டு சிலாபத்தில் போய் தங்களுடைய உறவினர் வீடொன்றில் தங்கப் போவதாக அவர் தெரிவித்தார். ஏற்கெனவே பலர் இக்கிராமத்தை விட்டு வெளியேறிவிட்டதாகவும் தெரிவித்த அவர் இன்னும் பலர், இப்பிரதேசத்தை விட்டு வெளியேறத் தயாராகிக் கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

ஆரம்பத்தில் இவர் '' கோவிக்காதீர்கள் பத்திரிகைகளுக்கு நான் இதுபற்றி எதுவும் கூற விரும்பவில்லை... இனி இழக்க என்ன இருக்கிறது. இத்தனை

குற்றுயிரான நிலையில் எரிக்கப்பட்டிருக்கிறார்கள். இக் குடும்பத்தினைச் சேர்ந்த ஒருவரான சோமபால (50 வயது) என்பவர் இச்சம்பவத்தில் தப்பித்த ஒரு கால் இல்லாத அங்கவீனர் ஆவார். இவரை எங்களால் சந்திக்க முடியவில்லை. ஆனால் இவர் கூறியதாக லங்காதீப, திவயின பத்திரிகைகளில் வெளியான தகவல்கள் இவ்வாறு தெரிவிக்கின்றன.

'சோமபால தங்கியிருந்த வீட்டுக்குள் இராணுவ உடை தரித்த நபர்கள் புகுந்தனர். ஏறத்தாழ 10 பேரைக் கொண்ட இவர்கள் இயந்திரத்துப்பாக்கி, வாள் போன்ற ஆயுதங்களைத் தாங்கிய வண்ணமிருந்தனர்.

யாரோ வந்திருக்கிறார்கள் யாரென்று பாரென்று தனது மருமகனுக்கு சொன்னார்.

''வீணாக சாகாமல் வாயை மூடு...! '' என ஒருவன் கூறிக்கொண்டே என்னைத் தள்ளிக் கீழே விழுத்தினான் ஒருவன்.

வீட்டில் இருந்த துணிப்பை போன்ற வற்றை எடுத்து, அதிலிருந்த துணிகளை துண்டு துண்டாகக் கிழித்து வீட்டிலுள்ள வர்களின் கைகளை பின்னால் இழுத்துக் கட்டினார்கள். முதலில் ரஞ்சித் கிரிஷாந்தாவின் கையைக் கட்டி வெளியே கொண்டு வந்தார்கள். தினேஷ் சத்துரங்க (7வயது) கத்தத் தொடங்கினான். உடனே தினேஷுக்கு அறையொன்று விழுந்தது. இந்த நேரத்தில் சிறு குழந்தையான மஞ்சுளா ($1^{1/2}$ வயது) அழத் தொடங்கியது. அப்போது குழந்தையின் தாய், குழந்தையைத் தன்னிடம் தரும்படி கேட்டுக் கொண்டிருந்த போதே இன்னும் கொஞ்சப் பேரை இழுத்துக் கொண்டு வந்தனர் புலிகள். இழுத்துக்கொண்டு வரப்பட்டவர்களில் லலித், சமிந்த, டிக்ஸி, ரேணுகா, சூட்டிபுத்தா, பெனடிக மாமா, மாமி ஆகியோரும் இருந்தனர் பயங்கரவாதிகளில் ஒருவன் என்னையும் கொண்டு வரச்சொன்னான். அப்போது அவர்களில் ஒருவன்

ரேணுகா தமயந்தியின் பால் குடிக்கும் ஒன்றரை வயதுக் குழந்தை தாயின் உடலுக்கு அடியில் சிக்கியது. கிழவனை சுட்டுப் பலனில்லை எனக் கூறி என்னைச் சுடவில்லை. வீடு முழுவதும் ரத்தக்களரி. பின்னர் அந்தக் கூட்டம் அந்த இடத்தை விட்டு ஓடிப் போனது. போய் ஒரு சில நிமிடங்களில் பாரிய வெளிச்சம் ஏற்பட்டது. அத்தோடு வீடு முழுவதும் தீப்பற்றி எரிந்தது. நான் உடலால் ஊன்றி ஊன்றிச் சென்று எவரையாவது பிழைக்கச் செய்ய முடியுமா என முயற்சி செய்தேன். வீடுபற்றி எரிந்தது. நான் ஒவ்வொருவராக புரட்டிப் பார்த்தேன். எல்லோரும் இறந்து காணப்பட்டார்கள். ஏழுவயது சிறுவன் தினேஷ் கண்ணைத் திறந்து பார்த்ததை கண்ட நான் அருகே சென்றேன். ''தாத்தா.. என்னைத் தூக்குங்கள்.. '' என என்னிடம் சொன்னான். நான் அவனை என் மடியில் தூக்கி வைத்தேன். அவனின் வயிற்றில் பல குண்டுகள் பாய்ந்து துளைத்துக்கொண்டு பின்னால் சென்றிருந்தன.

''என்ரை பிள்ளை... உனக்கு எப்படி...'' எனக் கேட்டுக் கொண்டிருந்த போதே தலை கீழே விழுந்தது. தினேஷை அப்படியே போட்டுவிட்டு அடுத்த உடலைப் பார்க்க முயற்சித்த போது ஒரு உடல் துடித்துக் கொண்டிருந்தது. அது எனது மருமகன் ரஞ்சித். எனது மகள் ரேணுகாவின் பிரேதத்தின் அருகில் சென்று மகளே.. என அலறினேன். மகளின் உடலுக்கு அடியில் சிக்கியிருந்த குழந்தையை மெதுவாகக் கையில் எடுத்தேன். குழந்தை உயிருடன் இருந்தது. $1^{1/2}$ வயது அசலங்க எனும் என் பேரனை சாரத்தால் சுற்றி எடுத்துக் கொண்டு போகும் வழியில் கீழே விழுந்து விட்டான். மீண்டும் குழந்தையை எடுத்துக்கொண்டு காட்டுக்குள் ஒழிந்திருந்து விடிந்ததன் பின்னரே காட்டிலிருந்து வெளியே வந்தேன்'' என்றார் சோமபால.



என்.எஸ்.குமரன்

தூரத்திற் போ... கொண்டிருந்தது. அ... சிறுமியையும் கூட்டி... குள் ஓடி ஒழிந்து... பாதையினூடாக வீ... தேன். என்னுடன் க... கள் யார் எனக் கேட்... யும் சொல்லவில்... காலையிலேயே... குடும்ப... வர்களி... காட்டிலிருந்து கண்... கணவரை இ... காப்பாற்றினோம்''... இச்சம்பவத்தை யா... என நீங்கள் நம்... வினவியதற்கு... செய்தார்கள் என... சொல்ல முடியாது... பேசிய மொழியில்... புலிகளாக இரு... நினைக்கிறேன்... அப்படியே பேசி... ஆனால் அந்த மோ... இன்னும் சந்தேகமு... மோதிரம் பற்றி க... திருப்பம் ஒன்று தெ... போல எங்களுக்கு... தை என்னவென்று...

'' எனது... கொல்லப்பட்ட இ... எழுத்துப் பொ... மோதிரத்தை... கண்டெடுத்திருந்த... எங்கள் குடும்பத்... கேட்டார்கள். அப்... எங்களது குடும்ப... போட்டிருக்கவில்... கூறியிருந்தேன்... அதனை சட்டை... இப்போது கிராம... உள்ளது எனக்... பின்னர் தா... அம்மோதிரத்துக்கு... முதலாளி எ... அம்மோதிரத்தை த... தரும்படி கேட்டுக்...


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net





கதைத்துக்
ருணத்தில் நான்
காண்டு காட்டுக்
றொரு குறுக்குப்
க்கு வந்து சேர்ந்
ந்த சிறுமி இவர்
ள். நான் எதனை
அடுத்த நாள்
எனது
பிரதே ளைக்
த்தோம். எனது
நேரத்தில்
றார்.
செய்திருக்கலாம்
றீர்கள்? என
ர் இதனைச்
யாக என்னால்
னால் அவர்கள்
ருந்து அவர்கள்
க்கூடும் என
மத்தவர்களும்
காள்கிறார்கள்.
ம் பற்றி எனக்கு
'' என்றார்.
வரவே ஏதோ
த் தொடங்குவது
ட்டது. மோதிரக்
டதற்கு:
டும்பத்தவர்கள்
தில் M.S. என்ற
கப்பட்ட ஒரு
ராணுவத்தினர்
அம்மோதிரம்
களதா? எனக்
யாரு மோதிரம்
ர்கள் எவரும்
என நான்
ர் இராணுவம்
வில்லை. அது
ர் யாரிடமோ
விப்பட்டேன்.
தெரிந்தது
யவர் தப்போ
து. அவர்
ரிடம் திருப்பித்
ண்டிருக்கிறார்.



அவரது மோதிரம் அந்த இடத்துக்கு எப்படி வந்தது என்ற சந்தேகத்தை கிராமத்தவர் பலர் எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.. '' என்றார்.

இக்குடும்பத்தைச் சேர்ந்த ஒஸ்டின் இச்சம்பவம் பற்றிக் குறிப்பிடுகையில்

93ம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு யூன், யூலை மாதங்களில் எழுவன்குளத்தில் புலிகளின் தாக்குதல் இடம்பெற்று வந்திருக்கிறது. அத்தாக்குதல்கள் இராணுவத்தினருக்கு எதிரான தாக்குதல்களாகவே இருந்தன. ஆனால் முதன்முறையாக இப்போது கிராமத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

### புலிகளுடன் சேர்ந்த சிங்களவர்

அது தவிர 8 பேர் எரிக்கப்பட்ட வீட்டைச் சேர்ந்த அஜித் மஞ்சுள எனும் இளைஞர் 1994ம் ஆண்டு யூலை 1ம் திகதி சுடப்பட்டுக் கிடந்தார். அவரைக் கொன்றது புலிகளே என்ற சந்தேகம் இங்கு நிலவுகிறது. அவரது குடும்பத்தவர்களே இம்முறை வீட்டோடு எரிக்கப்பட்டார்கள். அன்று அஜித் மஞ்சுள கொல்லப்பட்ட போது ஆத்திரமடைந்த கிராமவாசிகள் தங்களுடன் வருடக்கணக்காக ஒன்றாக வாழ்ந்து வந்த தமிழர்கள் பலரின் வீடுகளைக் கொளுத்தினார்கள். அச்சம்பவத்தோடு பாதிப்புக்குள்ளான ஒரு தமிழ் குடும்பத்தைச் சேர்ந்த அருளானந்தன் எனும் இளைஞரும், ஜ்ஒட் காமினி எனும் இன்னொரு குடும்பத்தைச் சேர்ந்த இளைஞரும் புலிகளுடன் போய்ச் சேர்ந்தார்கள். ஜ்ஒட் காமினியின் தகப்பனார் சிங்களவர், தாய் தமிழ். இந்த ஜ்ஒட் காமினியின் மனைவி பியதாசலாகே மெனிகா இன்றும் இக்கிராமத்தில் வாழ்ந்து வருகிறார். இப்போது நடந்து முடிந்த இச்சம்பவத்தின் போது வந்த புலிகளில் அவர்களும் இருந்ததைக் கண்டதாகவும் சிலர் பேசிக் கொள்கிறார்கள். அது எவ்வளவு தூரம் உண்மையோ தெரியவில்லை.

மேலும் வந்திருந்த புலிக்கோஷ்டியில் ஒரு பகுதியினர் கிராமத்தைத் தாக்குவதற்காகவும் இன்னொரு பகுதியினர் அருகிலுள்ள இரயில் தண்டவாளத்துக்கு குண்டு வைத்து வரும் ரயிலை புரட்டுவதற்காகவுமே வந்திருக்கின்றனர். ஆனால் அவர்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த இரயில் முன்கூட்டியே சென்றிருந்ததால் அவர்களது நோக்கம் நிறைவேறாமல் வெடி மருந்துகளை விட்டு விட்டுச் சென்றிருக்கலாம் எனத் தனது அபிப்பிராயத்தை வெளியிட்டார்.

சம்பவம் நடந்த அடுத்த நாள் ரயில் பாதைகளுக்கருகில் வண்ணாத்திவில்லுப் பொலிசார் பல வெடி மருந்துப் பொருட்களைக் கண்டெடுத்திருப்பதாக பத்திரிகைகளிலும் படங்கள் வெளியிடப் பட்டிருந்தன.

### தப்பி வந்த இளைஞர்

சம்பவ தினத்தன்று ஆற்றுக்கு மீன் பிடிக்கச் சென்றிருந்த மூவர் ஆயுதக் கோஷ்டியினரிடம் பிடிபட்டு பின் அவர்களிடமிருந்து தப்பி வந்தனர் அவர்களில்ஒருவரான மொஹமட்பரீத் எனும் இளைஞர் இதுபற்றி தெரிவிக்கையில்;

''அன்றைய தினம் இரவு 9 மணியளவில் நாங்கள் மூவர் கலாஓயவுக்குச் சென்று மீன் பிடித்துக் கொண்டிருந்தோம். ''ஹேன்ட்ஸ் அப் '' (கையை உயர்த்துங்கள் ) என ஒரு குரல் கேட்கவே இராணுவத்தினர் என நினைத்து நான் ''நாங்கள் தான் சேர்'' எனக் கூறினேன்.

வந்திருந்தவர்களோ ''சேர் என்று சொல்லாதே அண்ணன் என்று சொல் '' என தமிழில் பேசினர். வந்தவர்கள் ஏறத்தாழ 250 பேரளவில் இருப்பார்கள். அவர்களில் பலர் இராணுவ சீருடையில் இருந்தனர். அவர்கள் புலிகள் தான் என நான் இனங்கண்டு கொண்டேன். கூட இருந்த நண்பர்களிடமும் அதைக் கூறினேன். என்னை நோக்கி ''உனது பெயர் என்ன?'' எனக் கேட்டார்கள். நான் '' மொகமட் பரீத்'' எனக் கூறினேன். மீண்டும் அவர்கள் ''முஸ்லிமா?'' என வினவினார்கள். நான் ஆம் எனப் பதிலளித்தேன். வந்திருந்தவர்களிடம் T 56 இயந்திரத் துப்பாக்கிகள் MG போன்றவை இருந்ததைக் கண்டேன். அவர்கள் தமிழில் கதைத்துக் கொண்டார்கள். எங்களைப் பிடித்தவுடன் கையைக் கட்டி ஐந்து நிமிடங்கள் இருத்தி வைத்திருந்தார்கள். பின்னர் எங்கள் மூவரையும் அழைத்துச் சென்றார்கள். அப்போது ஒரு இடத்தில் இன்னும் ஒரு கோஷ்டியினர் ஏழுபேரை இழுத்துக் கொண்டு வந்தார்கள். அவர்கள் எங்களது கிராமத்தைச் சேர்ந்தவர்கள். அடுத்த நாள் அவர்கள் கொல்லப்பட்டுக் கிடந்தார்கள். பின்னர் எங்களுடன் மூவரை காவலுக்கு இருத்தி விட்டு ஏனையோர் சென்றார்கள். இவர்களுடன் அருளானந்தனும் இருந்ததைக் கண்டேன். அதன் பின்னர் எனது கால் கட்டையும், கைக் கட்டையும் அவிழ்த்து விட்டு என்னைத் தனியாக அழைத்துச் சென்றார்கள். கும்புராவ ஆற்றின் அருகில் சென்று கொண்டிருந்த போது, ஆற்றில் பாய்ந்து அடுத்த கரையை அடைந்தேன். அங்கிருந்து வெலிப்பிட்டிய பக்கத்துக்கு சென்று அங்கிருந்து கலாஓய ஆற்றை அடைந்தேன். அதையும் நீந்திக் கடந்து பொலிஸ் நிலையத்தை அடைந்த போது விடியற்காலை 7.30 மணியிருக்கும். அன்றைய தினம் ஏறத்தாழ 13 பேர் பிடிபட்டு இப்படி தப்பியும் விடுவிக்கப்பட்டும் வந்து சேர்ந்தனர் என சொன்னார் மொகமட் பரீத்.

இச்சம்பவத்தின் பின் எழுவன்குளம் பிரதேசம் மிகவும் பீதியுடனேயே இருக்கிறது. இனி இது அடிக்கடி நிகழக்கூடுமோ? இனி எத்தனை பேர் கொல்லப்படுவார்களோ? எப்போது அடுத்த தாக்குதல் நடக்குமோ? எனப் பயந்த வண்ணமுள்ள இவ்அப்பாவிக் கிராமவாசிகள் பொலிஸார், இராணுவத்தினர் மீது நம்பிக்கையை இழந்துள்ளனர். சம்பவம் பற்றி அதிகாலையே பொலிஸாரிடம் முறையிட்ட போதும் அவர்கள் அசட்டையாகவே இருந்ததாகவும் எந்தவித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் அந்த கட்டத்தில் எடுக்கவில்லையென்றும் பலர் தெரிவித்தார்கள். அதுபோல் ஒவ்வொரு முறையும் இராணுவத்தினரின் மீதான தாக்குதல் நடந்த காலத்திலும் அந்த சூடு தணியும் வரையிலான ஓரிரு வாரங்களோ, மாதமோ மாத்திரமே இராணுவம் அங்கே நிலை கொள்வதாகவும் அதன் பின்னர் அவர்களைக் காணக் கிடைப்பதில்லையென்றும் கிராமவாசிகள் தெரிவித்தனர். தற்போதும் அங்கு இச்சம்பவத்தையொட்டி நிலைகொண்டிருக்கும் இராணுவம் கூட பிரதான பாதையை அண்டியிருக்கிறதேயொழிய கிராமங்களுக்குள் அவர்கள் செல்வதில்லையென்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

### எழுப்பப்படும் வினாக்கள்

எழுவன்குளத்தைச்சேர்ந்த சிலர் புலிகள் தான் செய்தார்கள் என்றும் சரியாக கூற முடியாது என்று சொல்கிற போதும், சில பத்திரிகைகள் கூட அப்படியான சந்தேகத்தை எழுப்புகின்ற போதும் இது பற்றிய விசாரணைக் குழுவையோ, கமிஷனையோ அமைத்து அந்த சந்தேகத்தை தீர்க்கின்ற முயற்சிகள் எதனையும் அரசு செய்ய இன்னும் துணியவில்லை.

ஒரு சிங்கள இடது சாரிக் கருத்தையுடைய மாற்றுப் பத்திரிகையைச் சேர்ந்த பத்திரிகையாளர்களோ 'இச்சம்பவம் பல சந்தேகங்களைக் கிளப்புகின்றன. இதனை வழமையாகவே புலிகள் செய்து வந்த படுகொலைப் பட்டியலில் அவசரப்பட்டு சேர்த்து விடக்கூடாது என்றும் அப்படி அவசரப்பட்டால் உண்மையான குற்றவாளிகள் தப்பித்து விடுவார்கள் என்றும் இதே போன்ற சம்பவங்களைத் தொடர்ந்தும் புரிவார்கள்'' என்றும் தெரிவித்துள்ளனர்.

எங்களுடன் எழுவன்குளத்துக்கு வந்த சிங்களப் பத்திரிகையாளர் ஒருவர் சம்பவ இடத்தில் கண்டெடுக்கப்பட்ட மோதிரம் பற்றிய கேள்விகளை எழுப்புகிறார். அம்மோதிரத்துக்குரிய தப்போ முதலாளி யார் அவரது MS அடையாளமிடப்பட்ட மோதிரம் அவ்விடத்துக்கு எப்படி வந்து சேர்ந்தது? சாவீடாக காட்சி தரும் அக்கிராமத்தினரிடம் தனது மோதிரத்தை திருப்பித் தரும்படி கேட்டு அதனை மீளப் பெற முயற்சி செய்ய அவசரப்படுவது ஏன்? போன்ற கேள்விகளை எழுப்புகிறார்.

கிராமத்தில் அத்தனை வீடுகளிலிருக்க ஏன் குறிப்பிட்ட மூன்று வீடுகளைச் சேர்ந்தவர்கள் மாத்திரம் இந்நிலைமைக்குள்ளாக்கப்பட்டனர்? இவ்வீடுகளுக்கு இடையில் உள்ள வீடுகளை ஏன் விட்டு வைத்தார்கள்? தேர்ந்தெடுக்கப்பட்ட சிலரைத் தான் தேடி வந்தார்களா? 8 பேர் ஒரேயடியாக கொல்லப்பட்ட வீட்டில் இதற்கு முன்னும் மர்மமான முறையில் ஒரு இளைஞர் கொல்லப்பட்டிருக்கிறார். அச்சம்பவத்துக்கும் இப்போதைய சம்பவத்துக்கும் இடையில் ஏதேனும் தொடர்புகள் இருக்கின்றனவா? என்பன போன்ற கேள்விகளும் சென்று வந்த குழுவினரின் உரையாடலின் போது வெளிவந்தன.

இவை எவ்வாறிருப்பினும் நியாயமான விசாரணை நடத்தி முடியும் வரை இவற்றிற்கான பதிலை சடுதியாக காண முடியாது. ஆனாலும் இன்று மேலெழும்பியிருப்பது புலிகளின் மீதான சந்தேகமே. புலிகள் இதுவரை காலம் எல்லைப்புற கிராமங்களின் மீது நடத்தி வந்திருக்கிற படுகொலைகள் எல்லாமே இன்றைய சம்பவம் தொடர்பான பொறுப்புக்கு உள்ளாக்கப்படுவது தவிர்க்க இயலாது. அப்பாவி மக்கள் மீதான தாக்குதலை எத்தரப்பு நடத்துகின்ற போதும் அத்தரப்பு அரசியல் ரீதியில் பலவீனப்படுவதும் அம்பலப்படுவதும் தவிர்க்க முடியாது போகும். எவ்வாறு சிங்கள இராணுவம் தமிழ் குடியிருப்புகள் மீது பேரினவாத நோக்கில் வன்முறையைக் கட்டவிழ்த்து விடும் போது அது மோசகரமானதாகவும், காடைத்தனமானதாகவும், கோழைத்தனமானதாகவும் கூறப்படுகிறதோ அதே போன்றே புலிகளின் இச்செயல்களும் அவர்களை காடையர்கள், கோழைகள் எனக் கூறப்படுவதற்கு உரியவர்களாக்குகின்றன.

இக்காடைத்தனங்களின் மூலம் அவர்களது தமிழ் தேசியப் போராட்டம் இன்னும் ஒரு படி மேலே வளரும் என புலிகள் கருதுவார்களாகவிருந்தால் அது அவர்களது வெறும் மூடத்தனமான எண்ணமேயாகும்.

இன்றைய தமிழ்த் தேசத்தின் கோரிக்கைகள் இலகுவாக நசுக்கப்பட இச்சம்பவங்கள் நிச்சயமாக ஒத்துழைக்கும், அதே நேரம் சிங்கள தேசத்துடனான உறவை மேலும் மோசமாக்குவதுடன் சிங்கள தமிழ் மக்களிடையேயான இடைவெளியையும் மோசமாக்கும் என்பதை யாரும் மறந்து விட முடியாது.

ஜூன்13ம் திகதி திவயின பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம் இவ்வாறு குறிப்பிடுகிறது.

''...புலிகள் இவ்வாறான அநியாயங்கள் செய்வது சட்டரீதியாக அவர்கள் எவருக்கும் பொறுப்புச் சொல்லத் தேவையில்லை என்ற நிலைமைகள் நடைமுறையில் இருப்பதனாலேயே. அவர்களுக்கென்றொரு தனிநாடு கொடுத்து விட்டால் நிலைமை எப்படியிருக்கும். தீர்வுப் பொதிக்கூடாக அவர்களுக்கு மேலும் பலத்தையும் அதிகாரத்தையும் கொடுத்தால் இது எங்கு போய் முடியும்..? என்பது போன்ற கேள்விகளை எழுப்புவதற்கும், அவை பிரச்சாரம் செய்யப்படுவதற்கும், தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் தற்கொலையை நோக்கிச் செல்வதற்குமே இச்சம்பவங்கள் வழிவகுத்துச் செல்லும் என்பதை மீண்டுமொரு வலியுறுத்திச் சொல்லி வைப்பது அவசியம்.

### சம்பவத்தின் போது கொல்லப்பட்டவர்கள்

**சம்பவம் — 1**

| பெயர் | வயது | பால் | கொல்லப்பட்டவிதம் |
|---|---|---|---|
| 1. ரேணுகா தமயந்தி | 31 | பெண் | சுடப்பட்டு எரிப்பு |
| 2. ரணில் கிரிஷாந்த | 10 | ஆண் | சுடப்பட்டு எரிப்பு |
| 3. நிக்கலஸ் அப்புஹாமி | 27 | ஆண் | சுடப்பட்டு எரிப்பு |
| 4. மேரி ரேணுகா | 38 | பெண் | சுடப்பட்டு எரிப்பு |
| 5. லலித் சமிந்த | 26 | ஆண் | சுடப்பட்டு எரிப்பு |
| 6. லலித் மஞ்சுல | 03 | ஆண் | சுடப்பட்டு எரிப்பு |
| 7. டபிள்யு திணேஷ் | | ஆண் | சுடப்பட்டு எரிப்பு |
| 8. ரஞ்சித் சத்துரங்க | | ஆண் | சுடப்பட்டு எரிப்பு |

**சம்பவம் — 2**

| பெயர் | வயது | பால் | கொல்லப்பட்டவிதம் |
|---|---|---|---|
| 1. கமகே சிறிசேன பெரேரா | 59 | ஆண் | சுடப்பட்டு |
| 2. மேரி ஜொசபின் | 45 | பெண் | சுடப்பட்டு |
| 3. சாந்த மல்காந்தி | 16 | பெண் | சுடப்பட்டு |
| 4. திலினி பெரேரா | 13 | பெண் | சுடப்பட்டு |
| 5. ஜயசுந்தர பெனடிக் | | ஆண் | சுடப்பட்டு |
| 6. மிதோரிஸ் சில்வா | 68 | ஆண் | சடப்பட்டு |

**காயப்பட்டவர்**

| | | | |
|---|---|---|---|
| 1. துஷார ரொகான் பெரேரா | 21 | ஆண் | சூட்டுக்காங்கள் |

www.tamilarangam.net



# குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே... 9

குழந்தைகளுடன் தொடர்பு படுத்துகிற சில வழிமுறைகள் பெரும்பாலும் சுய தோல்வியையே தருகின்றன; அவை எமது நீண்ட கால நோக்கங்களைப் பெற்றுக் கொள்வதற்கு தவறுவது மட்டுமல்லாமல், அவை குடும்பங்களில் எப்போதும் பெரும் நாசத்தையே விளைவிக்கின்றன. இத்தகைய சுய தோல்வியைத் தரும் மாதிரிகளாக மிரட்டல், இலஞ்சம், வாக்குறுதி, சுடுசொல் பாவித்தல், பொய் அல்லது களவு தொடர்பாக போதனை செய்தல் அல்லது அமைதியாக இருப்பது பற்றிய மோசமான முறையிலான கற்பித்தல் என்பவற்றைக் கூறலாம்.

### மிரட்டல்:

**துர்நடத்தைக்கு அழைப்பு விடுத்தல்:** குழந்தைகளைப் பொறுத்தவரை மிரட்டல்கள் தடுக்கப்பட்ட ஒரு செயலை மீளச் செய்விப்பதற்கான அழைப்பே ஆகும். 'இன்னொருதடவைநீ இதைச் செய்தால்' என்று மிரட்டுகையில் குழந்தை அதிலுள்ள 'ஆல்' என்ற விகுதியைக் கவனிப்பதில்லை. அதற்கு 'இன்னொரு தடவை செய்' என்றே அது கேட்கிறது. சிலவேளை ''இதை நான் இன்னொரு தடவை செய்யவேண்டுமென்று அம்மா எதிர்பார்க்கிறாள்... செய்யாவிட்டால் அவருக்கு ஏமாற்றமாக இருக்கக்கூடும்'' என்று கூட அது அர்த்தப்படுத்திக் கொள்கிறது.

இத்தகைய எச்சரிக்கைகள் - அவை பெரியவர்களுக்கு நியாயமானவையாகத் தோன்றலாம் - அவை பயனற்றவை என்பதை விட மோசமானவை. அவை தீயசெயல்கள் மீளவும் செய்யப்படுவதை உறுதிப்படுத்துகின்றன. ஒரு எச்சரிக்கை குழந்தையின் சுயத்திற்கு ஒரு சவாலாகவே அமைகிறது. குழந்தைக்குக் கொஞ்சமாவது சுய மதிப்பு இருக்குமாயின், அதைத் திருப்பிச் செய்வதன் மூலமாகவே அது தனக்கும், பிறருக்கும் தான் ஒன்றும் வெறும் சின்னப்பாப்பா அல்ல என்று காட்டவே முனையும்.

ஐந்து வயதான ஒலிவர் ஜன்னல் மீது தொடர்ந்து பந்தை வீசிக்கொண்டு இருந்தான். தாயார் பலதடவை எச்சரித்தும் அவன் அதை நிறுத்தவில்லை. இறுதியாகத் தாய் சொன்னாள். ''பந்து இன்னொரு தடவை ஜன்னலில் பட்டுதோ.. சத்தியமாகச் சொல்கிறேன். உனது கன்னம் இரண்டும் மின்னும்''. ஒரு நிமிடம் தான். தாயாருக்கு அவரது எச்சரிக்கை பலனளித்து விட்டதை உணர்த்துகின்ற, கலீரென ஜன்னல் கண்ணாடி உடைகிற சத்தம் கேட்டது. பந்து கடைசித் தடவையாக ஜன்னலில் பட்டுவிட்டது. இதன் பின்னரான சம்பவங்கள் எப்படித் தொடர்ந்திருக்கும் என்பது ஒன்றும் ஊகிக்க முடியாததல்ல. பதிலாக இத்தகைய ஒரு தவறான நடத்தையை மிரட்டாமலே எப்படிப் பயனுடைய விதத்தில் கையாண்டிருக்கலாம் என்பதைக் கீழ் வரும் உதாரணம் காட்டுகிறது.

ஏழுவயதான பீற்றர் தனது விளையாட்டுத் துப்பாக்கியால் தனது தம்பியை நோக்கிச் சுட்டான். 'பிள்ளை மீது சுடவேண்டாம்... அந்த இலட்சினை மீது சுடு'' என்று சொன்னாள் தாய். பீற்றர் திரும்பவும் தம்பி மீது சுட்டான். தாய் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு சொன்னாள்; 'மனிதர்களை யாரும் சுடுவதில்லை.'

தாயார் எது நடக்கவேண்டும் என்று விரும்பினாளோ அதற்குரியதைச் செய்தாள். குழந்தையைப் (தம்பி) பாதுகாப்பதுடன், ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு நியம அளவு என்ற ஒன்று எதற்கும் உண்டு என்பதையும் இதன் மூலம் காட்டினாள். பீற்றர் அவனது சொந்த 'நானுக்கு' (EGO) பாதிப்பு ஏற்படாத வகையில் தனது செயலின் பின்விளைவுகளை உணர்ந்துகொண்டான். இந்த நடவடிக்கையின் தொனிப்பொருளாக அவன் விளங்கிக்கொண்டது இது: 'இலட்சினையை நோக்கியே சுட வேண்டும் அல்லது துப்பாக்கியை வைத்திருக்கும் வாய்ப்பை இழக்கநேரும்.''

இந்தச் சம்பவத்தில் தாய் வழமையான பொறிக்கிடங்குக்குள் விழுவதில் இருந்து தப்பிக்கொண்டாள். முன் கூட்டியே எதிர்வு கூறக் கூடிய ஒரு தோல்வியை நோக்கிச் செல்வதை அவள் தவிர்த்துக் கொண்டாள்.

''நிறுத்து பீற்றர். உனக்கு சுடுவதற்கு தம்பியைத் தவிர வேறொன்றும் கிடைக்கவில்லையா? ஒரு நல்ல இலட்சினை உனக்கு கிடைக்கவில்லையா? இன்னொரு தடவை, ஒரேயொரு தடவை தம்பியை நோக்கிச் சுட்டாய்.. உந்தத் துவக்கை நீ இனிமேல் காணவேமாட்டாய்''

-இவ்வாறான ஒரு பேச்சுக்கு, அக்குழந்தை ஒரு அப்பாவியான பணிந்து போகிற பிள்ளையாக இருந்தால் ஒழிய அதன் எதிர்வினை திரும்பவும் அதே வேலையைச் செய்வதாகவே இருக்கும். இதற்குப்பின் என்ன நடக்கும் என்று சொல்லத்தேவையில்லை. இது ஒவ்வொரு பெற்றோராலும் திருத்தப்படக்கூடிய ஒரு விடயம்தான்.

### இலஞ்சம்:

'இப்படிச் செய்தால்' என்றவகையான அணுகுமுறைகூட, அதாவது 'இப்படிச் செய்தால்' (அல்லது செய்யாவிட்டால்) ஒரு பரிசு உனக்கு தரப்படும்' என்றவிதத்திலான அணுகுமுறை கூட சுய தோல்விக்கு இட்டுச் செல்லும் ஒரு அணுகுமுறையாகும்.

''தம்பியோட நல்ல பிள்ளையாய் இருந்தால் நான் உங்களைப் படத்துக்குக் கூட்டிப் போவேன்''

''படுக்கையை நனைக்கிற ('சூ' பெய்கிற)தைவிட்டுவிட்டாயென்றால், வாற கிறிஸ்மஸ்க்கு ஒரு சைக்கிள் வாங்கித் தருவேன்''

''இந்தக் கவிதையைப் பாடமாக்கினால், ஒரு படகுப்பயணத்துக்கு நான் கூட்டிப்போவேன்''

ஆங்கிலமூலம்:
டொக்டர் ஹெய்ம் ஜீ ஜினோல்ட்
தமிழில்: அருண்

'மனிதர்களை யாரும் சுடுவதில்லை'



இத்தகைய 'இப்படிச் செய்தால்' அணுகுமுறையானது சிலவேளைகளில் குழந்தையை உடனடித் தேவைக்காக வெற்றி கொள்ள உதவக்கூடும். ஆனால், இவை பெரும்பாலும் தொடர்ச்சியான இம்முயற்சிகளில் ஈடுபடும் ஒன்றாக குழந்தையை பயிற்றுவிப்பதில்லை. எங்களுடைய சொற்களே, குழந்தை நல்ல பிள்ளையாக மாறுமோ என்ற சந்தேகத்தை வெளிப்படுத்துகின்றன. 'இந்தக் கவிதையை நீ பாடமாக்கினால்' என்று சொல்லும்போதே 'நீ பாடமாக்குவாய் என்ற நம்பிக்கை எமக்கு இல்லை' என்பதையும் சேர்த்தே நாம் சொல்கிறோம். 'படுக்கையை நனைக்காவிட்டால்' என்று சொல்லும் போதும் அதே சந்தேகத்தையே நாம் கிளப்புகிறோம். ''நீ அதை நிறுத்துவாய் என்று நாம் நம்பவில்லை...''

'இலஞ்சம்' கொடுப்பதற்கு சில வேளை தார்மீக எதிர்நியாயப்பாடுகளும் இருக்கின்றன. டோர்தி பரோச் இவ்வாறு கூறுகிறார்: ஒரு குழந்தை ''நான் மோசமானவனாகி விடுவேன் என்று நினைக்கவைப்பதன் மூலமாகவே அம்மாவிடமிருந்து நான் விரும்புவதையெல்லாவற்றையும் பெற்றுவிடுகிறேன்.. உண்மையில் அம்மா தான் கொடுப்பது வீண் அல்ல என்று நம்புவதற்காகவே நான் அடிக்கடி கூடாதவனாக நடந்து கொள்ள வேண்டும்'' என்று சொல்கிறது.

இத்தகைய நியாயங்கள் விரைவிலேயே 'பிளக் மெயில்' (BLACK MAIL) பண்ணும் நிலைக்குத் தள்ளுவதுடன் குழந்தை தான் நல்ல பிள்ளையாக நடப்பதற்காக எப்போதும் பரிசுகளையும் சலுகைகளையும் எதிர்பார்க்கத் தொடங்குகின்றது. சில பெற்றோர்கள் தாம் கடைகளில் பொருட்களை வாங்கித் திரும்புகிறபோது (SHOPPING) பிள்ளைகளுக்கு ஏதாவது பரிசு வாங்காமல் வரக்கூடாது என்று கருதுகிறார்கள். இது விரைவிலேயே இப்படி கடைத் தெருவால் வரும்போதெல்லாம் குழந்தைகள் பெற்றோர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்கும் நிலைமையை மாற்றி 'எனக்கு என்ன கொண்டு வந்தீர்கள்?' என்று கேட்கும் நிலையைத் தோற்றுவிக்கிறது.

பரிசுகள் பயனுள்ளவையாகவும், சந்தோஷமானவையாகவும் இருப்பது அவை முன்கூட்டியே அறிவிக்கப்படாது இருக்கும் போதுமட்டுமே. அவை எதிர்பாராதவிதமாகக் கிடைக்கும் போது, அவை குழந்தையின் செயலைப் பாராட்டுவதாயும், விதந்துரைப்பதாயும் அமையும் போது பயன்மிக்கதாக அமைகின்றன.

### வாக்குறுதிகள்:

நடைமுறைச் சாத்தியமற்ற எதிர்பார்ப்புக்களும் நடைமுறைகளும்: குழந்தைகளுக்கு ஒருபோதும் வாக்குறுதிகளை வழங்குவதோ அல்லது அவர்களிடமிருந்து வாக்குறுதிகளை வாங்குவதோ கூடாது. வாக்குறுதிகளுக்கு ஏன் இவ்வளவு கட்டுப்பாடு? ஏனென்றால், குழந்தைகளுக்கும் எங்களுக்கும் இடையிலான உறவு நம்பிக்கையின் அடிப்படையில் கட்டியெழுப்பப்படவேண்டும். ஒரு பெற்றோர் வாக்குறுதி கொடுப்பது, தான் சொல்வதை கட்டாயம் செய்வேன் என்று உறுதிசெய்வதற்காகவேதான். இதன் மூலம் அவர் வாக்குறுதி கொடுக்காத சந்தர்ப்பங்களில் சொல்பவை எவையும் செய்யப்படமாட்டா என்று மறைமுகமாக ஒப்புக்கொள்கிறார். வாக்குறுதிகள் நடைமுறைச் சாத்தியமற்ற எதிர்பார்ப்புக்களைப் பிள்ளைகளிடம் உருவாக்குகிறது. ஒரு குழந்தையை மிருகக் காட்சிச் சாலைக்கு அழைத்துச் செல்வதாக வாக்குறுதி கொடுக்கும் போது, அன்று மழை பெய்யாது, அன்றைக்குக் கார் பழுதாகாது, அன்றைக்கு வேறெந்தப் பிரச்சினையும் வராது என்று அல்லது தனக்குக் காய்ச்சல் வராது என்று முடிவு கட்டுகிறது. ஆனால், வாழ்க்கை நிச்சயப்படுத்தப்படமுடியாத ஒன்றாக இருப்பதால், வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமல் போகக்கூடும். இவ்வாறான வேளைகளில் தாம் ஏமாற்றப்பட்டு விட்டதாகவும், பெற்றவர்கள் நம்பத்தகாதவர்கள் என்றும் குழந்தை முடிவு கட்டுகிறது. குழந்தையின் இது தொடர்பான நம்பிக்கையீனமான குரல் இப்படி ஒலிக்கும். ''ஆனால், நீங்கள் எனக்கு வாக்குறுதி தந்தீர்கள்'' இத்தகைய சோகமான, குழந்தைகளின் குற்றச்சாட்டுக்கு அப்படி ஒன்றைச் செய்யாத, செய்ய விரும்பாத பெற்றோர்கள் கூட உள்ளாவதை அடிக்கடி காணலாம். கடந்த காலத் தவறுகளை நிறுத்துவது, அல்லது எதிர்காலத்தில் நல்லதனமாக நடந்து கொள்வது சம்பந்தமான வாக்குறுதிகளைப் பெறுவது அல்லது கொடுப்பது ஒருபோதும் குழந்தைகளைப் பொறுத்தவரை செய்யப்படக்கூடாதது. ஒரு குழந்தை ஒரு வாக்குறுதியைக் கொடுப்பது, இல்லாத ஒரு வங்கிக் கணக்கிலிருந்து காசு பெறுவதற்கான காசோலை ஒன்றை அது தருவதுபோல, அதன் சொந்த வாக்குறுதியாக இருப்பதில்லை. இத்தகைய தவறான, ஏமாற்றுகின்ற பொய் வேலைகளுக்கு நாம் குழந்தைகளை ஊக்குவிக்கக்கூடாது.

### வசை அல்லது திட்டு:

குழந்தை கற்பதற்கான மிகவும் பலமான தடை இதுவாகும். இத்தகைய வசவுகள் பிள்ளைகளது மனதில் பெரும் ஆரோக்கியக் குறைவை ஏற்படுத்துகின்றன. இவைகளைச் சொல்வதன் மூலம் ஒரு நல்ல முறையிலான தொடர்பாடல் பண்பை பெற்றோர் இழந்து விடுவதுடன் அதற்குத் தடையாகவும் ஆகிவிடுகின்றனர்.

''எத்தனை தடவை நான் ஒரு விடயத்தை திருப்பித்திருப்பிச் சொல்வது. உனக்கென்ன செவிடா? அப்ப ஏன்தான் நான் சொல்வதைக் கவனிக்கிறாயில்லை''

''சரியான மோடு நீ. எங்கையோ காட்டிலையே வளர்ந்தனீ..? உனக்குச் சரியான இடம் அது தான்.''

''என்னதான் உனக்கு நடந்திட்டுது? உனக்கென்ன விசரோ அல்லது நீ ஒரு முட்டாளோ? எனக்குத் தெரியும். நீ எங்கை போய் முடியப்போகிறாய் என்று''

இத்தகைய பெற்றோர்கள் தமது கருத்துக்கள், பதில்தாக்குதல் கருத்துக்களுக்கு அழைப்புவிடுகின்றன என்பதையோ, இத்தகைய கருத்துக்கள் தொடர்பாடலை தடைசெய்வதுடன், பழிவாங்கும் மனோபாவத்தை வளர்க்கின்றன என்பதையோ தெரிந்து கொள்ளாமல் இருக்கிறார்கள்.

கசப்பான வசவுகளும், முகத்திலடித்தாற்போல் சொல்லப்படும் வார்த்தைகளும் குழந்தை வளர்ப்பில் உகந்தவை அல்ல. அவற்றுக்கு அங்கே இடமேயில்லை. 'நீ இப்படி அலட்டுகிற அளவுக்கு சின்னப்பாப்பா அல்ல. நீ நன்றாக வளர்ந்து விட்டாய்' என்பது போன்ற வார்த்தைகளைத் தவிர்க்க வேண்டும். 'உனக்குத் தலை கனத்துப்போய்விட்டது...', 'நீ உன்னை யார் எண்டுதான் நினைச்சுக் கொண்டிருக்கிறாய்..?' போன்றவற்றை திட்டமிட்டோ அல்லது திட்டமிடாமலோ சொல்லுவதன் மூலம் குழந்தையின் தரத்தை அதனிடமும் அதன் நண்பர்களிடமும் தரமிறக்குவதையே ஒரு பெற்றார் செய்கின்றார்.

வரும்...

## ஆண்டவ!



வருத்திச் சாக்கொல்லுந் திகில் ஏவி,
மிரட்டக்கனவனுப்பிக் குலைத்தே
உறக்கத்தையும்,
கனவூடே,
இப்போர்த்தீவில் நித்தஞ்செத்த
மீதிக்குத்தீது செய்ய
அந்நியர்களைச்சாட்டினாய்-இப்
பலஹீனன் மீதே-நீயின்றென் ஆண்டவ !

உறுமித்,
தடுப்பில் ஜீப் நிற்க,
பாய்ந்தே-
தட்டித்
தடதடவெனக் கதவுடைத்து
மிரட்டித் தூஷணங்கூறித் துவம்சஞ்செய்தே
அள்ளிப்போயினர் தண்ணிபோட்ட
அவ்
ஆயுதந்தரித்தவர்கள்:
இரவெலாம் பலமுறை.

கரைந்து நிலவுருகிக் கசிய,
அதிலூறி-மினுங்கத் தென்னோலையும்
இருளில் அசைய ஏதோ,
அறைந்து ,
இறுகச்சாத்தி யன்னல் கொழுக்கியிட்டுப்-பின்
தள்ளிப்பார்த்தொரு தடவை
வந்தே,
குறுக்கி உடற்பரப்புங்குறைய,
ஒடுங்கிப்
பயத்தில்-குந்திச் சாய்கிறேன் சுவரில்.

அருகே,
இங்கற்ற ஆழ்ந்த கண்ணயர்வில்
அவனும் நரிவிரட்டிச் சிரிக்க,
நீண்ட விழிப்பின் சோர்வில்
எக்கணமோ நானும் புலனயரத்
தூங்கிப்போனேன்.

இனிக்
கனவுகள் மெய்ப்பட
நானுன்னிடம் இறைஞ்சப்போவதில்லை.

●

றஷ்மி
19960522

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 'ஓவியம் என்பது ஓர் அனுபவத்தைச் சித்திரிக்கும் படமல்ல அதுவே ஓர் அனுபவம்'

-ஓவியர் ஆதிமூலத்துடனான நேர்காணல்-


"எங்க ஊர்ல கிருஷ்ணன் கோயில் ஒன்றிருக்கு, அதை பஜனை மடம் என்று தான் சொல்லுவாங்க. அங்க மூல விக்கிரகத்துக்குப் பின்னால தஞ்சாவூர் பாணியிலமைந்த பெரிய ஓவியம் ஒன்றிருந்தது. சின்னப் பையனா நான் இருந்த போது கோயிலில் அதையே பார்த்திட்டிருப்பேன். அந்த ஓவியத்தில இராமருக்கு பட்டாபிஷேகம் நடை பெறுகிற மாதிரி வரைஞ்சிருப்பாங்க. பூசையில் விக்கிரகத்துக்கு தீபம் காட்டும் போது ஓவியத்திலுள்ள கண்ணாடிகள், ஜரிகைகள் எல்லாம் ஒளி பட்டு ஜொலிக்கும். அது ஓவியம் என்கிறதை விட நான் நேரடியாகவே பங்கு கொள்கிற வைபவமாகவே எப்போதும் எனக்குப் படும். அந்த வயசில அந்த ஓவியத்துடன் ஏதோ பூர்வ ஜென்ம தொடர்பு இருந்தது போல இன்று தோன்றும். அப்புறம் அந்தக் கோயில்ல இருந்து ஓவியம் களவு போயிடிச்சு...." இப்படித்தான் ஓவியர் கே.எம்.ஆதிமூலத்தின் கோட்டோவியங்களின் கதையும் அனுபவமும் ஆரம்பிக்கிறது.

"எனது அனுபவத்தில் கோடுகள் உயிருள்ள உணர்வுள்ள நரம்புகள் போன்றவை, இவை தான் ஓவியத்தின் அடிப்படை. எனவேதான் எமது கல்வெட்டு ஓலைச்சுவடி எழுத்துக்கள் கூட ஒழுங்கமைப்பில் ஓவியத்தின் அனுபவத்தைத் தருகின்றன" என்கிறார் ஆதிமூலம். அவர் சார்ந்த தொன்மையான கலாசாரத்தில் கோடுகளுக்கான ஆதாரங்கள் இருக்கின்றன. கிராமியக் கலை வடிவங்களான கலங்காரி, மது பண்ணி தொடக்கம் சாதாரண முற்றத்துக் கோலங்கள், சிற்ப சாஸ்திரத்துக்கு இயைந்த பிற்கால ஓவிய மரபுகள் வரை கோடுகள் வியாபித்திருக்கின்றன. இது உலக மற்றும் மேற்கத்தேய ஓவிய மொழியினதும் அடிப்படை ஆயினும், மிகவும் தூக்கலாக இருப்பது கீழைத்தேய ஓவிய மரபுகளிலேயே. சித்தன்ன வாசல் தொடக்கம் தஞ்சைப் பெரிய கோயில் ஓவியங்கள் வரை, பின்னர் சர்போஜி மகாராஜா கால கண்ணாடி ஓவியங்கள் என்று தமிழ் ஓவியப் பாரம்பரியமும் கோடுகளை ஆதாரமாகக் கொண்டது தான். கோடுகளை அடிப்படையான முக்கியமான ஒன்றாயும் அதற்குத் துணையாக நிறங்களைப் பாவித்த போக்கையும் இவற்றில் காண முடியும்.

நாயக்கர் காலத்துச் சிற்பங்களைப்போல, தமிழகத்தானைக் கட்டுக்குடுமியுடனும், கொண்டையுடனும், முறுக்கு மீசையுடனும் துருதுருக்கும் அனாதியான விழிகளுடனும் அவர்களுக்கேயுரிய முரட்டுத் தன்மையான, கடுமையான திருத்தமான முகவெட்டுக்களுடனும் உடல் வாகுடனும் எந்த வித போலித்தனங்களுமற்று மீண்டும் ஓவிய மொழிக்குள் நிதர்சனமாய் சிறைபிடிப்பவை ஆதிமூலத்தின் கோடுகள்.

வலிமையான நேர்த்திமிக்க கன பரிமாணத்தன்மையை ஏற்படுத்தும் கோடுகளால் அடிப்படை உணர்வும் உருவமும் ஆக்கப்பட ஓவியர் வான்கோவின் லயம்மிக்க நிறக்கோடுகளைப் போல ஆதியின் சிறிய லயத்துடன் அசையும் முறிந்த கோடுகள் மிகவும் எழுந்தமானமாக அமைந்து இந்த உருக்களையும் அவற்றின் பின்னணியையும் நிரப்புகின்றன. இவை இசையைப் போல் எழுந்து மூல உருவை வியாபிக்கின்றன. இப்படைப்புகளில் சில வேளைகளிலுள்ள கியூபிசத்தால் விளைந்த கனதித் தன்மையை அதைத் தாண்டிய ஓர் நிலைக்கு இச் சிறிய கோடுகளே எடுத்துச் செல்கின்றன. இவை மட்டுமல்லாமல் இவ்வுருக்களின் நிறங்கள் மணம் போன்ற சொல்லாத செய்திகளையும் உணர்த்திச் செல்கின்றன. இந்தப் பகிரலில் தஞ்சாவூர் கண்ணாடி ஓவியங்களின் வெளிப் பிரிப்பும் (Space division) இடத்தை நிரப்பும் தன்மையையும் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஆதிமூலத்தின் அண்மைக்கால வெளிபற்றிய நிற ஓவியங்கள் கூட ஒருவகையில் இந்த லயமுள்ள கோடுகளின் அருப ,நிற ஓட்டங்களே.

எளிமையான மற்றும் வழமையான கருப்பொருட்களை எடுத்துக்கொண்டு அவற்றைப் புதிய வடிவில் அல்லது இன்னொரு பார்வை ஒழுங்கில் தரும் ஆதிமூலத்தின் ஆற்றலை இவரின் வேறுபட்ட கோட்டோவியங்களில் இருந்தும், அறுபதுகளில் இருந்து தொடர்ந்து வரும் சிறுபத்திரிகை விளக்கப்படங்கள், புத்தக முகப்பு அட்டை முயற்சிகளிலிருந்தும் உணர்ந்து கொள்ள முடிகிறது. படைத்தலுக்கான







தொடக்க உந்துதல் இவருக்குப் பாரம்பரிய கிராமிய மற்றும் சாஸ்திரிய இந்தியக் கலை வடிவங்களில் இருந்து கிட்டியது. எனினும் சுடு மண் சிற்பங்களினதும் மர வாகனங்களினதும் பாதிப்பையே இனங்காணக்கூடிதாக உள்ளது. ஊரின் எல்லையில் தனித்திருக்கும் ஐயனார் உருவங்களும், சுடுமண் குதிரைகளும் உயிரும் பேராற்றலும் உள்ளனவாக அவருக்குத் தோன்றுகின்றன. இவை இது தான் என்று சொல்ல முடியாத பாதிப்பை ஏற்படுத்தியிருக்கின்றன. இதைப்போலத்தான் அவர் வீட்டுத் தெருவில் உள்ள கோயில்களுக்கு வாகனம் செய்யும் பட்டடையும். இது பற்றி இப்படிச் சொல்கிறார்: "கோயில் மர வாகனங்களிலுள்ள மோடிப்படுத்தல் என்னை மிகவும் கவர்ந்த ஒன்று. இவை மிருகங்கள் பற்றி இருந்தாலும் அதைத் தாண்டி அந்த உருட்டி வைத்த கண்களைப் போல எளிமையான அதே நேரம் அழுத்தமான கிராமிய அழகு என்னைக் கவர்ந்தது. இதை விட பல்லவர் குகைச் சிற்பங்கள், சோழர் பஞ்ச உலோக வார்ப்புகள், நாயக்கரினதும் பாண்டியரதும் கோபுரங்களிலுள்ள சுதை வேலை போன்றவற்றின் பொதுவான சிறப்பியல்பு இச்சிற்பங்களின் அழகிலும் கருப்பொருளிலும் இருந்தான அனுபவங்களின் எனது உள்வாங்கலில் இருந்து புதிய அனுபவத்தைத் தர நான் விரும்புகிறேன். உண்மையில் இந்தக் கிராமியச் சிற்ப வடிவங்கள் அவற்றின் வடிவில் ஓர் முரட்டுத்தன்மையும், பாமரத்தன்மையும் கூடிய எளிய அழகையும், மிகவும் எளிமைப்படுத்தப்பட்ட உடல் பரப்பையும் கொண்டன. இவை இயற்பண்பிற்கு அப்பாற்பட்டவை. உள்ளார்ந்த நம்பிக்கைகளினதும் வடிவங்கள். இவற்றில் இழையோடும் உயிர் என்பது பாறைப் படிவங்களிடையே வந்து விழும் சிற்றருவியைப் போன்றது. உச்ச வேற்றுமைகளிடையே பேணப்படும் நுண்ணிய உணர்வுகளைக் கொண்டவை இவை. இந்த அனுபவத்தை தன்னுள் சிறைப்பிடித்து அதே குறுகுறுப்புடனும் படபடப்புடனும் தனது கோட்டு மொழியில் தக்க வைத்துக்கொண்டு இக்காலத்துக்குரிய புதிய முறைகளில் பகிர்ந்து கொள்ளலில் ஆதி மூலம் வெற்றி பெறுகிறார். ஆதி மூலம் குறிப்பிடும் தஞ்சாவூர் பெரிய கோயில் ஓவியங்கள் எவ்வாறு சாஸ்திரிய சிற்பங்களின் இயல்பைக் கொண்டுள்ள அதே வேளை சிற்பத்தை மீறி நின்றும் பேசத்தக்க மோடிப் படுத்தலை உடைய மனித உருக்களின் ஒழுங்கமைப்பைக் கொண்டுள்ளனவோ அதைப் போன்று இவரின் கோட்டோவியங்களும் இந்த சிற்பங்களின் செல்வாக்கிற்கு அப்பால் நின்றும் பேசத்தக்கன.

1969இல் காந்தி நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்ட வேளையில் காந்தியின் முதுமைக்குரிய அழகால் உந்தப்பட்டு நூற்றுக்கு மேற்பட்ட கோட்டோவியங்கள் செய்தார். தத்ரூபமாகவும், மோடிப்படுத்தியும் என்று பல்வேறு வழிகளில் படைக்கப்பட்ட இவ்வடிவங்களில் காந்தியின் ஆத்துமத்தைக் கொணர முயல்கிறார். இதைத் தொடர்ந்து இந்திய மகாராஜாக்கள் பற்றிய ஆங்கிலேயரின் புகைப்படங்களினால் கவரப்பட்டு மகாராஜா தொடர் ஓவியங்களைப் படைத்தார். இதன் போது ஆங்கிலேயரின் கமராக்களின் முன் விலையுயர்ந்த ஆடைகளுடனும் ஆயுதங்களுடனும் பொம்மைகள் போல் நின்ற ராஜாக்களின் பொய்மையைக் கொண்டு வர முயன்றதாகக் குறிப்பிடுகின்றார். "இங்கு ராஜாக்கள் இருக்கவில்லை. அவர்களின் உடைகளும் உள்ளுடன் அற்ற உடம்புகளுமே இருந்தன" என்றார். கருப்பொருட்கள் பற்றிய எந்தக் கட்டுப்பாடுகளும் அற்று ஓர் குழந்தையின் சுதந்திரத்துடனும் மிகுந்த எழுந்தமானமாகவும் தொடர்ந்தன சித்திரப் புத்தக (Sketch Book) தொடர் கோட்டோவியங்கள்.

இந்தக் கோட்டுப்படங்கள் பொதுவாக வெளிபற்றிய அவரது நிற ஓவியங்கள் தொடரப்படுகையில் இடைவெளியும் மாற்றமும் வேண்டிப் படைப்பவை. இவற்றின் உருவாக்கத்திலும் மோடிப் படுத்தலிலும் ஓர் அற்புதமான விபத்து நிகழ்ந்து விடுகிறது. ஆதிமூலத்திற்கு மேற்கத்தேய கியூபிசத்தின் மீது குறிப்பாக பிக்காசோவின் படைப்புகளின் மீதிருந்த ஈர்ப்பும் ஆர்வமும், கிராமிய வடிவங்களில் ஏற்கெனவேயுள்ள கியூபிச தன்மையும் ஒரு தளத்தில் சந்தித்து விடுகின்றன. இவை ஓவியரின் உயிரிலும் உணர்விலும் கலந்து கலாபூர்வமான தனித்துவமான புதிய மொழியாக உருப்பெறுகின்றன. இதற்கு இவரின் கல்லூரி ஆசிரியர்களும், ஓவியர்களுமான தனபாலினதும், சந்தான ராஜினதும் கோடுகளும், செயற்பாடுகளும் பெரிய பங்களிப்புச் செய்துள்ளன.

ஆதிமூலத்தின் கல்லூரிகால கோட்டுப்படங்கள் (பெரும்பாலும் life Drawing) பலவற்றில் மிகத் தெளிவாகக் காணப்படும் பிக்காசோவின் கியூபிசத்தின் செல்வாக்கு கவனிக்கப்பட வேண்டியது . சர்போஜி மகாராஜா காலத்தில் எவ்வாறு தமிழ் நாட்டு மற்றும் மராட்டிய கலாசாரங்கள் இணைந்து புதிய தனிச்சிறப்பான தஞ்சாவூர் கண்ணாடி ஓவியங்கள் பிறந்தனவோ அவ்வாறு, ஆதிமூலத்தின் பின்னாளைய காந்திய, மகாராஜா, சித்திரப்புத்தக ஓவியங்களில் இப்பாதிப்பு முற்றாக அவரின் சுய ஓவிய மொழிக்குள் இரண்டறக்கலந்து அதன் ஓர் பகுதியாக மாற்றப்பட்டு விடுகிறது.

இங்கு தான் ஓர் விடயம் துலக்கமாகிறது. எந்த ஓர் வெற்றி பெற்ற தொடர்பாடல் முயற்சியும் அதன் சமகால வாழ்வின் சொந்த உள்வாங்கல்களையும் வெளிப்பாடுகளையும் கொண்டிருக்கும் அதே வேளை ஏற்கெனவேயுள்ள தொடர்பாடல் முறைகளின் தொடர்ச்சியாக அல்லது அது சார்ந்த ஒன்றாகவும் இருக்கும். ஏற்கெனவே உள்ள முயற்சிகள் எனும் போது அவை சென்ற கால அனுபவங்கள் சார்ந்தவை. இந்த அனுபவங்களும் அவற்றின் செயற்பாடும் எந்தளவிற்கு இன்றைய அனுபவங்களுடனும், செயற்பாடுகளுடனும் ஒத்திருக்கின்றன அல்லது தொடர்புற்றுள்ளன என்பதைப் பொறுத்து இன்றைய தொடர்பாடலின் தொடர்ச்சி அமையும். இன்னொரு விதத்தில் சொன்னால் இன்றைய வாழ்வும் அதன் அனுபவமும் இவற்றைப் புரிந்து கொள்ளலும் நேற்றுடன் தொடர்புடையன. இப்பேற்பட்ட தொடர்பு கொள்ளலே மனித குலத்தின் வெளிபட்டுத் தொடர்ச்சியையும் அதன் பரிணாம வளர்ச்சியையும் உயிருடன் பேணும். இதுவே காலத்தைத் தாண்டி பகிரலில் ஈடுபடும்.

கட்புல மொழி ஒன்றின் தொடர்பாடலுக்கு வடிவங்களும் இதர நிறங்கள் கோடுகள் போன்றவையும் முக்கியமானவை. எனினும் இவற்றால் மட்டும் வெளிப்பாட்டின் அல்லது தொடர்பாடலின் தொடர்ச்சியைப் பேணி விட முடியாது. ஏற்கெனவேயுள்ள அல்லது காலாவதியாகிப்போன இனக்குறியீடுகளையும் நிறங்களையும் கருப்பொருட்களையும் நம்பி மொழி அடையாளத்தையும் மொழியில் இன அடையாளத்தையும் பேணமுடியாது என்பதற்கு நவீன சென்னை ஓவிய இயக்கமுட்பட இந்திய சுதந்திர கால ஓவிய இயக்கம் சார்ந்த பல முயற்சிகள் நல்ல உதாரணங்களாகும். இவ்வாறு வலிந்து செய்யப்பட்ட பெரும்பாலான முயற்சிகள் வடிவம் அல்லது புலனாகு பகுதி சம்பந்தப்பட்டவையாகவே இருந்தன. இதைத்தாண்டிச் சென்று உள்ளார்ந்த அழகு சார்ந்ததும் திருப்தி சார்ந்ததுமான தொடர்பாடலில் வெற்றி பெற்றவை மிகக்குறைவே. இப்பேற்பட்ட அபத்தங்கள் இன்னும் தொடரப்படுகின்றன.

ஆனால், மரபின் தொடர்ச்சியையும் பகிரலின் தொடர்ச்சியையும் கலைத்துவமாய்ப் பேணியவர்களில் ஆதி மூலமும் ஒருவர். இவரின் வெற்றியும் வெளிப்பாட்டின் வெற்றியும் உண்மையில் வடிவங்களுக்கப்பாலான தேடல்களினின்றும் வெளிப்பாடுகளினின்றும், சத்தியமான ஈடுபாட்டினின்றும் பிறக்கின்றன. வாழ்வின் சாரத்தினின்று முகிழ்க்கின்றன. எப்படிக் கிராமிய கலைவடிவங்களும், சோழர் வார்ப்புச்சிலைகளும், கண்ணாடி ஓவியங்களும், தேவாரமும், தெருக்கூத்தும் தமிழகத்து வாழ்வின் அடிப்படை லயத்தை, இசைய, அதன் அழகை ஆத்மார்த்தமாக தமக்குரிய அழகியலுடன் பகிர்ந்தனவோ அதைப்போலவே ஆதிமூலத்தின் அழகியலும் இவ்வடிவங்களின் சாரங்களிலிருந்தும் அவற்றின் ஆத்துமத்திலிருந்தும் தொடங்குகிறது. இத்துடன் பாரம்பரியத்துடன் ஒன்றிய கோட்டு மொழி, மேலைத்தேய கியூபிச முறையிலமைந்த பார்வை மற்றும் எளிமையாக்கல் ஆகியவற்றுக்கிடையில் ஓர் நுணுக்கமான ஒன்றிணைவும் உச்ச சமநிலையும் எட்டப்படுவதன் மூலம் ஓர் புதிய கோட்டு மொழியும் சுய மற்றும் இன அடையாளங்களுடன் கூடிய உணர்வுள்ள ஓர் பகிரலும் அதன் அனுபவமும் சாத்தியமாகிறது.

இது வழமையான கிராமிய மற்றும் பாரம்பரிய கலைவடிவங்களின் ஆரோக்கியமான நீட்சியா அல்லது சமகால நவீன முயற்சிகளின் தொடக்கமா அல்லது புதிய செல்வாக்குகளினதும் சிந்தனைகளினதும் வெளிப்பட என்று சொல்ல முடியாத ஓர் கூட்டு அனுபவமாய் வாழ்தல் ஒழுங்கின் பரிணாம ஓட்டத்துடன் ஒன்றி நின்று உள்ளழகின் மீதிருந்து எழுகின்ற பகிரலாய் பரிணமிக்கின்றன இக்கோட்டோவியங்கள்.

"ஓவியம் என்பது ஓர் அனுபவத்தைச் சித்திரிக்கும் படமல்ல, அதுவே ஓர் அனுபவம்"

-தா.சனாதனன்-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






ஏதையாவது படிக்க நேரும் போதெல்லாம்

அல்லது தனிமையில் படுத்துறங்கும் நேரங்களிலெல்லாம் அவனுடைய ஊரும் அந்தப் பள்ளிக்கூடமும், பாக்கு நீரிணைக்கு அப்பால்நீண்டு நிமிர்ந்து உயர்ந்திருக்கும் அந்த சவுக்கம் தோப்புகளும், கால்நடைகளும், அவர்களும், தண்ணீர் மென்று தாகம் தீர்த்த கம்மாக் கரைகளும் மறைந்தும், மறந்தும் போன அந்த நண்பர்களும்தான் முதலில் ஞாபகத்துக்கு வருகின்றார்கள்.

அவனுடைய பள்ளிக்கூடத்து 'கிறவுண்'டைச் சுற்றி நிற்கும் அந்த மஞ்ஞவண்ணாமரங்கள் என்னமாய் இனிக்கின்றன! அதையெல்லாம் விட அந்த சவுக்கம் தோப்புகள் குறுக்கே வந்து நின்று காற்றில் இதமாய் அசைகின்றன. நெஞ்சைக்கீறுகின்ற கனமான நினைவுகள் காலம் முழுவதுமாய் ரத்தங்களாய்க் கசிகின்றன.

மெயின்றோட்டோட சேர்த்தபடி தான் கிறவுண்ஸ். மெயின்றோட்டையும் கிற வுண்சையும் பிரித்துக் கோடிழுக்கும் எல் லைக்காவலர்களாய் அந்த மஞ்ஞவண் ணாமரங்கள் மஞ்சளாய் பட்டைபிடித்து ஒரு ஆள் தொட்டு விடக்கூடியதும், அதை விடவும் உயரத்தில் கிளைகள் பிரிந்து செறிந்து நிழலாய்க் குடைபிடிக்கும். அந்த மஞ்ஞவண்ணா மரங்களின் அடியில் குந்தியிருந்தபடி ஐஸ் குடிப்பதென்பது ஒரு தனிப்பிரியம், அலாதி சுகம்.

எத்தனையெத்தனை நண்பர்கள் அந்த விபரம் புரியாத காலங்களில் குந்தியிருந்தார்கள், ஐஸ்குடித்தார்கள், கூடிக்கூடிக்கதைத்தார்கள், பிந்திய மாலைப் பொழுதுகளின் மெல்லிய கருக்கல் வேளைகளில் அந்த மஞ்ஞவண்ணாக்களுக்குக் கூட கேட்காதவாறு குசுகுசுத்தபடி பிரிந்தார்கள். வெவ்வேறு கூடுகளில் தனித்தனியாகவும் கூட்டாகவும் உள்ளிழுக்கப்பட்டு கூடுகளும் கொப்புகளும் பிய்த்தெறியப்பட்டு ஒரு இனிய கனவின் பொய்மைகளில் எவ்வாறு சிதறுண்டு போனார்கள். அழிந்தார்கள், வீழ்ந்தவர்கள் மேலெல்லாம் அழியாத்துயர் வாழ்வின் சுமைக ளாகின.

''வாழிய வாழியவே ஞானமறங்கள் ஓங்க சிவா னந்தவித்தியாலயம் வாழியவே'' வெள்ளையும் நீலமுமாய் நெற்றியில் விபூதிக் கீறும் சந்தனப் பொட்டுமாய் அந்த காலைப் பொழுதுகளின் 'டாங்' 'டாங்' எனும் பெல் சத்தத்துக்கு எழும்பியபடி கதிரையையும் மேசையையும் முன்னுக்கும் பின்னுக்கும் இழுத்துத் தள்ளியவாறு கைகூப்பி மாசில் வீணையும் வீசுதென்றலும் பாடி, அரகரமகாதேவா சொல்லி தலையில் மூன்று தடவையோ, சிலவேளை அது அன்றைய மற்ஸ் பாடம் நினைவில் வர மறந்துபோய் நாலைந்து தடவையோ குட்டியபடி வாழிய வாழியவே சிவானந்த வித்தியாலயம் வாழியவே.

பாடுதலும் படித்தலும் அடிமனசின் ஓரங்களில் வீசுதென்றலாய் இளவேனிலாய் இன்னமும் அவனில் இனிக்கின்றன என்றால் கூட நம்பவா முடிகிறது அவனால், இழப்புகளும், தனிமையும், ஆற்றொணத்துயரும் வந்து, வந்து வாட்டுகின்றபோது.

விளையாட்டுப் போட்டி நடக்கும் காலங்களில் தான் அந்த மஞ்ஞவண்ணாக்களுக்கு இன்னும் கிராக்கி. ஐஸ்குச்சிகளுடன் நிழல்தேடி உட்கார்வதில் எத்தனை போட்டி. அதற்குப்பிறகு அந்த மஞ்ஞவண்ணாக்களைப் பற்றி யாருமே அதிகமாய்ப் பேசிக்கொள்வ தில்லை. அவனையும் மாலைவேளைகளில் வந்து போகும் ஒரு சிலரையும் தவிர.

காலைவேளைகளில் இலைகளிலிருந்து பனித்து ளிகள் சொட்டுச் சொட்டாய்க் கொட்ட, கீழே யுள்ள அறுகம்புற்களில், தும்பைச் செடிகளில் வெட்டுக்கிளிகள் ஊர்ந்தும் தெறித்தும் திரியும். ஒரு மரத்திலிருந்து இன்னொரு மரத்துக்கு தாவும் அணில்குஞ்சுகளும், கீழே அடிமரத்தில் சாய்ந்தபடி குந்தியிருந்து ஒன்றுமுடிய இன்னொன்றாய் ஐஸ்குச்சிகளை வாயில் வைத்து கடித்து சுவைக்கும் அவர்களின் வெள்ளைச்சேட்டின் மேல் பீச்சியடிக்கும் காகங்களும் அந்த மஞ்ஞவண்ணாமரங்களை சொந்தம் கொண்டாடிய காலங்கள் இனி எங்கே?

பள்ளிக்கூடத்தின் உள்ளேயும் வெளியேயும் சடைமுடிதரித்து ஞானம் கலையாத முனிவர்க ளைப்போல் காற்றில் இலை சொரிந்து சுகந்தம் வீசுகின்ற வேப்பைகளில் இன்னும் எத்தனை நிற்கிறதோ இல்லையோ? எத்தனையெத்தனை வகைப்பட்சிகள் அந்த வேப்பைகளின் உச்சிக் கிளைகளில் உட்கார்ந்து ஓய்வெடுத்து உறங்கிக் கழித்தன. எல்லாமே இப்படித்தான் கனவுகளாய்க் கலைகின்றன.

முந்திரிக்காலங்களில் பாட்டம்பாட்டமாய் வந்து விழும் கிளிக்கூட்டங்கள் பள்ளிக்கூடத்தின் அமைதியைக் கிழிக்கும் கிளிக்கூட்டங்களின் கீ..கீ.. சத்தம், தனித்து வந்து ஓய்வெடுக்கும் காகங்கள், எப்பவாவது வந்திருந்து முக்கி விட்டுச் செல்லும் செண்பகம், இழுபட்டு இழுபட்டு எதிரொலிக்கும் குயிலின் க்கூ... பள்ளிக்கூடத்தை முழுவதுமாய் மறைத்து நிழல் சுரக்கும் வேப்பை மரங்களுக்குக் கீழேயுள்ள கட்டிடங்களில் வெள்ளையும் நீலமுமாய் உடுத்து பாடம் கேட்ட ஆயிரமாயிரம் முகங்களில் இன்று எத்தனையை முழுவதுமாய் இழந்தார்கள். துயரில் நனைந்த எத்தனையெத்தினையோ நிகழ்வுகளின் உள்வாங்கல்கள் பட்டமரங்களின் காய்ந்த சருகுகளாய் காற்றில் பறந்தும் கால்களில் மிதிபட்டும் நெரிபட்டும் காணாமல்போயின.

மீண்டும் அந்தப் பள்ளிக்கூடம் தான் ஞாபகத்துக்கு வருகின்றது. பள்ளிக் கூடத்துக்கும் அவனுக்குமான உறவுகள் முற்றாக விரிவடையத்தொடங்கிய நாட்களின் பின்னரான தினவரவுக்குறிப்பேட்டில் பெயர் கூப்பிடும்போது அவனுடைய வகுப்பாசிரியர் சண்முகநாதன் மாஸ்ரரும் சக நண்பர்களும் சில கண மௌனங்களுக்குப் பின்னர்தான் வரவுக்குறிப்பின் பெட்டிகளின் அடைப் புகளுக்குள் பூஜ்ஜியம் விழும்.

சில நாட்களின் பின்னர் அந்தப் பள்ளிக் கூடத்தில் எல்லோருக்குமே தெரியத் தொடங்கின இவர்கள் எங்கே போய்க் கொண்டிருக்கிறார்கள் என்பது. ஒவ்வொ ருநாளும் பள்ளிக்கூட தினவரவுக்குறிப்பில் யாருடைய பெயராவது விடுபடத்தொடங்கும். அப்போதெல்லாம் இவர்களின் பெயர்களுக்கு முன்னால் பெட்டிகளுக்கு நடுவே இடப்படும் சிவப்பு பூச்சியங்கள் பின்னைய நாட்களில் வாழ் வினை இழத்தலுக்கான அபாய அறிவிப்புக ளாக இப்போது சில வேளை அவனை எண்ணத் தோன்றச்செய்கின்றன.

காலக்கெடுதியில் எல்லாமே அபாய வெள்ளங்களாய் வந்து வந்து அள்ளிக்கொண்டு போகின்றன. விட்டுச் சென்ற தடங்களும் இன்னும் இருக்கின்றது என்று சொல்லக்கூடிய ஒரு சில துளி நம்பிக்கைகளும் அவனைப் பொறுத்தவரை எல்லாமே கேலிக்குரிய ஒன்றுதான்.

இத்தனை விரைவாக இப்படியெல்லாம் நடந்து முடிந்திருக்குமென்று யாருக்குத்தான் தெரியும். அந்தப் பள்ளிக்கூடத்தை விட்டு ஒதுங்கிய நாட்களிலிருந்து ஒவ்வொன்றாய் நினைக்கும் போது அவனில் அக்கினி ஜுவாலைகள் கொழுந்து விட்டெரிவதான ஓர் உணர்வு, இந்தப் பிரபஞ்சத்தின் ஜீவனையே நெரித்துக் கொல்லவேண்டுமென்றளவுக்கு ஆத்திரம், இத்தனை நிகழ்வுகளுக்குப் பிறகும் கொல்லவும் கொல்லப்படுவதற்காகவுமே வளர்க்கப்பட்ட நாட்களையெல்லாம் எப்படி அவனிலிருந்து ஒதுக்கிவிட முடியும்.

முன்னைய நாட்களிலிருந்த சந்தோஷம் மெல்ல மெல்ல நழுவத்தொடங்கிய போதிலிருந்தே அவனிலிருந்த கடைசி நம்பிக்கைகளும் காணாமல் போயின. திரும்புகின்ற போதெல்லாம் மனித வாழ்க்கை வெற்றிடமாகவே தென்படுகின்ற போதெல்லாம், இந்த உலகம் துண்டுதுண்டாய் எரிந்து சாம்பலாகட்டும். இனியும் மனிதர்களை வதைக்கின்ற எல்லாக்கொடூரர்களும் ஒன்றாகவே அழிந்து போகட்டும். ஒன்றுமே முடியாத போதெல்லாம் அவனுடைய ஆத்திரமும் ஆன்மாவும் இப்படியெல்லாம் வேண்டிக்கொள்ளும்.

மீண்டும் மீண்டும் பள்ளிக்கூடம் வந்து அவன் மனசுக்குள் புகுந்து கொண்டது. அவர்களுடைய தெறிப்புகளையெல்லாம் எத்தனை செல்லத்தனமாய் ஏற்றுக்கொண்டது அந்தப் பள்ளிக்கூடம். இருந்தும் மகேஸ்வர்

மாஸ்ரரின் கையிலிருக்கும் பிரம்பின் கனமும், மற்ஸ் படிப்பிக்கும் கோவிந்தசாமி மாஸ்ரரின் முகமும் கையும் இன்றைய ஆமிக்காரர்களின் அல்லது இயக்கக்காரர்களின் அச்சத்தை அடியொற்றியதாக இருக்கவேணும்.

ஒரு நாள் இப்படித்தான் கடைசிப்பாடம். பள்ளிக்கூடம் விட இன்னும் கொஞ்ச நேரமே இருந்தது. அவனுடைய வகுப்போட சேர்த்தபடி கிறவல் றோட் சுவர்கிரிலுக்குள்ளால (பக்கிலிக் காக்காவக் கூப்பிட்டு) ஐஸ்வாங்கினது யார்? என்ற கேள்விக்கு எல்லாருமே கப்சிப். யாருமே வாய்திறப்பதாக இல்லை. ஒருத்தரையொருத்தர் காட்டிக்கொடுத்து பேர்வாங்கத் திராணியற்ற மனோநிலையில் எல்லாருமே கையைத்தூக்கியபடி கதிரையில் ஏறிநின் றார்கள்.

அன்றைக்கென்று பிரின்சிபல் வரவில்லை. ஒரு கண்டம் கழிந்த திருப்தி. இருந்தும்கொஞ்ச நேரத்தில் கோவிந்தசாமி மாஸ்ரர் வந்தார். இன்றைய இயக்கக்காரரின் தோரணையில் அவர்கள் முன் தோன்றினார். அப்பொழுதும் யாருமே வாய்திறப்பதாக இல்லை. சிற்றிசனாகத் தானிருக்கவேணும். வோர்ச்சை கழட்டி மேசையில் வைத்தார்.

ஒவ்வொருத்தராய் மேசைக்குக்கீழே தலையைக் குனிந்தபடி நிற்க அரைக்காற்சட்டை பிருஷ்டத்துக்கு கீழே பின்பக்கம் தொடை தடித்து வீங்கியெழும் வரைக்கும் பூசைமுடித்த பெருமையுடன் வோர்ச்சைத் தூக்கி கையில் கட்டிக்கொண்டு வெளியே போனார். ''காவா லிகள் பள்ளிக்கூடமென்றால் பள்ளிக்கூடத்தில இருக்கிறமாதிரி இருங்கடா. இல்லாட்டி இங்க வராதிங்க அரசங் கட்டப் பாட்டியோட மண் ஏத்தப் போங்க. நாலுகாசும் கிடைக்கும் .நல்ல கஞ்சாவும் கிடைக்கும். அடிச்சுப்போட்டு கோயிலடி வெட்டியில படுத்துத் தூங்கலாம் சுகமாக...''

வகுப்பில் எல்லோரும் தொடையைத்தடவித் தடவிப்பார்த்தபடி கோவிந்தசாமி மாஸ்ரர் மீது எரிந்து வீழ்ந்தார்கள். ''பின்நேரத்தில் கல்லடிப்பாலத்தடிக்கு மீன்வாங்க வருவார். கல்லால அடிச்சி மண்டைய உடைக்காட்டி நான் ஆரென்று பார்'' மூலையோரமாக நின்றபடி சதிஸ் அழுதான். ''காலையில் பள்ளிக்கூடம் வரக்குள்ள சந்திலவச்சி சாணிகரச்சி எறியாட்டி ப்பார்'' உதயன் இன்னும் சத்தமிட்டான்.

ஒவ்வொருவராய் கோவிந்தசாமி மாஸ்ரரின் மனைவி, பிள்ளைகள் குடும்பமென்று ஆவேசம் கொண்டு பாண்டவர்களாய் உருமாறி அஸ்திரங்களை ஏவிக்கொண்டேயிருந்தார்கள். அதை இப்போது நினைத்தாலும் சிரிப்பு சிரிப்பாய்த்தான் வருது அவனுக்கு, அவர்கள் ஒவ்வொருத்தரின் வருகையின் முற்றுப்புள்ளிக்குப் பின்னரும் மிகவும் கவலைப்பட்டிருப்பார். பின்னைய நாட்களில் ஆற்றங்கரை சகதியாய் வாழ்க்கை மிதிபட்டதுதான் மிச்சம்.

பள்ளிக்கூடம் விட்டதும் ஓடோடி வந்து முன்னா லுள்ள அந்த அரசமரத்துக்குக் கீழேயுள்ள படிக்கட்டுக்களில் குந்தியிருந்தபடி பக்கிலிக் காக்காவிடம் ஐஸ்வாங்கி, குடித்து, வள்ளிப்பெத் தாவிடம் வடையும் கச்சானும் வாங்கி வாயில் போட்டு மென்று பஸ்வரும் வரை காத்திருந்து, என்ன சுகமான நாட்கள்.

இப்போது பக்கிலிக்காக்காவும், வள்ளிப் பெத்தாவும் இருக்கிறார்களோ இல்லையோ தெரியாது.. ஆனாலும் இன்றைக்கு முந்திய நாட்களில் சவுக்கம் தோப்புகளுக்குள் வாழ்ந்தபோது இரண்டொருதடவை கனவில் வந்து ஐஸும் வடையும் கச்சானும் வாங்கிய பாக்கியை கேட்க வந்ததாக இவன் திடுக்கிட்டு விழித்து எழுந்தான். திரும்பவும் ஒரு தடவை கனவில்தோன்றி ''காசுகீசு ஒன்றும் கேட்க வரல்லடா பொடியா! உங்களையெல்லாம் பார்க்க பாவமாகக்கிடக்குது; அது தான் பாத்திட்டு போவமென்று...' நெற்றிப் பொட்டில் ஓங்கிக்குத்தியமாதிரி ஒவ்வொன்றாய் எழுகின்றன.

அந்தப்பள்ளிக்கூடத்திலிருந்து ஒதுங்கியதிற்குப் பின்னரான ஒவ்வொரு நாட்களும் ஒவ்வொரு கணங்களும் நைல்நதியை விட மிக மிக நீளமானவை. சதிஸ் சைக்கிளை விட்டுப் பாய்ந்தோடி அந்தமஞ்ஞவண்ணாக்களுக்கு கீழேதானாம் அதை வாயில் வைத்து கடித்து வாயால் நுரைவடியவடிய அங்கேயே அந்த இடத்திலேயே கண்களை மூடிக்கொண்டான்.

அந்த ரவுண்டப்பில் பிடிபட்ட இன்னும் ஏழெட்டுப்பேரையும் அந்த மஞ்ஞவண் ணாக்களுக்கு கீழே தான் உயிருடன் ரயர் போட்டு எரித்த மகாசந்தோஷத்தில் அவர்களின் இருப்பிடம் நோக்கிய அந்தக் கடற்கரை யோரத்து இராணுவ முகாமுக்கு அவர்கள் திரும்பிப்போனார்கள். அந்த வீதிகளிலெல்லாம் இன்னும் எத்தனை மனிதர்கள் உயிருடன் துடிக்கத் துடிக்கக் கருகியபடிபோயிருப்பார்கள்.

தேசத்துரோகிகளென்றும், சமூகவிரோதிக ளென்றும் நாமகரணம் சூட்டியபடி இன்னும் யார் யாரையோ அந்தமஞ்ஞவண்ணாக்களுக்குக் கீழே கொண்டு வந்து போட்டு துப்பாக்கிகளினால் தங்கள் வெறியைத் தீர்த்தவர்கள். போனபின், அந்தமஞ்ஞவண்ணாக்கள் இலைகளால் காற்று வீசி இரவு முழுவதும் தூங்காமல் பனித்துளிகளால் கண்ணீர் சிந்தியபடி நிற்கும். அறுகம்புற்தரைகளில் நிமிர்ந்தும் சரிந்தும் மனிதர் கிடப்பர். வெற்றுத்தோட்டாக்கள் வாய்பேசாது அருகில்கிடக்கும் அந்த உடல்களின் மீது கட்டெறும்புகளும் இலையான்களும் ஊர்ந்தபடியே திரியும். குமுறியழும் நெஞ்சங்களுடன் அநாதைக் குழந்தைகளும் விதவைப் பெண்களும் வீதிக்கு வருவர். மீண்டும் வரும் இரவுகளையெண்ணி அச்சத்துடன் தலைகவிழும் அந்தமஞ்ஞவண்ணா மரங்கள்.

இவனோட ஒன்றாகவே பள்ளிக்கூடத்தை விட்டு ஓடிப்போய், எல்லாவற்றிலுமே சலிப்புற்று, அத்தனை நாட்களும் விரக்தியை மட்டுமே உள்வாங்கி நொந்து போய் பின்னர் எதிலுமே தன்னை இணைத்துக்கொள்ளாமல் தனித்து வாழ்ந்திருந்த நடேசுதாசனைக்கூட ஒரு நடுராத்திரியில் வந்து கூட்டிச் சென்றவர்கள் அந்தமஞ்ஞவண்ணாக்களுக்குக் கீழே தான் சுட்டுப்போட்டிருந்தார்கள். கொடூரம் மகா கொடூரம்..... யாரைத்தான் நோவது?

குறுகி நீண்ட இந்தக் கால இடைவெளியில் இந்த

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஊர் எத்தனை மனிதர்களைத்தான் இழந்திருக்கிறது. ஊரை விட்டுப் போன பலர் ஊருக்குள் வராமலேயே போனார்கள். பயிற்சி முகாம்களிலும் கடலிலும், காடுகளுக்குள்ளும், டம்மிங்குகளிலும், இயக்க மோதல்களினாலும் எதிரியுடனான யுத்தங்களிலும், இன்று எப்படி எப்படியோ அவர்கள் பற்றிய கதைகள் இல்லாமலே போயின.

மார்கழியில் அடம்பிடித்து அடம்பிடித்து ஊற்றுகின்ற அடைமழைமாதிரி யுத்தம் ஓய்வதற்கான எந்த அறிகுறியும் அவனுடைய ஊரில் தென்படுவதாக இல்லை. இன்னும் இன்னும் யாராவது புதியவர்கள் வீடுகளை விட்டு வெளியேறி ஆற்றங்கரைகளுக்கு அப்பால் தொலைதூரங்களுக்குப் போனார்கள். இராத்திரியில் வருபவர்கள் யாராவது இழுத்து மண்டையில் போடுவதும் காலையில் விழிக்க முதலே தொடரும் சுற்றிவளைப்பு தேடுதல்களின் பின்னர் இராணுவ முகாம்களை நோக்கி நகரும் றக்குகளின் உள்ளே பிடித்து வைக்கப்பட்டிருக்கும்' தங்கள் பிள்ளைகளையெண்ணி கதிகலங்கிய துயரினால் குமுறிக் குமுறியழும் குழந்தைகளும் தாய்மார்களுமாய் நாட்கள் மெல்ல மெல்ல இழுபடும்.

விழித்தெழுகிற ஒவ்வொரு இராத்திரியின் முடிவிலும் ஊர் தன்னுடைய ஆத்மாவின் ஒவ்வொரு இழையங்களையும் இழந்து கொண்டுதானிருக்கும். இப்போதைய இரவுகளில்நாய்கள்கூட வெருண்டு வெருண்டு ஊளையிடுவதேயில்லை. இருட்டத்தொடங்கியதும் எங்காவது சுருண்டு கொண்டு தூங்கிவிடுகின்றன. முற்றத்து மாமரத்தில் வந்து விழும் பக்கிள் கண்களை உருட்டியுருட்டிக் கத்திப் பயங்காட்டுவதேயில்லை. பின்வீட்டு வேப்பைகளில் இராத்திரியில் வந்து விழுந்து இலைகளையுதிர்த்தி ஒன்றோடு ஒன்று கட்டிப்பிரளும் வௌவால்கள் கூட இரகசியமாகவே வந்து போகின்றன. ஒவ்வொரு இராத்திரியிலும் இராணுவ முகாம்களிலிருந்து கூவியெழுகின்ற ஷெல்கள் ஆற்றுக்கப்பால் போய்விழுந்து அயர்ந்து தூங்கும் குழந்தைகளினது சதையைப்பிளந்து இரத்தம் குடிப்பதான செய்திகளே விடிந்ததும் வருகின்றன.

இந்த மாலைவேளையில் தொடங்கி மனித நடமாட்டம் அடங்கி, ஊரெல்லாம் உறங்கத் தொடங்கும். பள்ளிக்கூடத்துக்குப் பின்னாலுள்ள வெளிகள், கோயில், இறுகப்பூட்டிய கதவுகளின் உள்ளே மனிதர்களை உள்வாங்கிய வீடுகள் எல்லாமே இருளில் நனைந்து தனித்துப் போய்க்கிடக்கும். துவக்குகள் எங்காவது ஓர் திசையில் வேட்டுக்களைத்தீர்த்தபடி அதிர்ந்து ஒலிக்கும்.

கல்லடி முகாமுக்குள் மனித வெறியர்கள் சிரித்தும், கதைத்தும், கும்மாளமடித்தும்கொண்டிருப்பார்கள். நீண்ட நாட்களாக மனிதச்சுவடுகளையே காணாத கடல் பேரிரைச்சலாய் கரைகளோடு முட்டிமோதி அடிபட்டுக்கொண்டிருக்கும்.

அவனும், அவனைப்போல் தனித்து விடப்பட்ட ஒவ்வொரு மனிதர்களும் இந்தப் பிரபஞ்சத்தின் ஒவ்வொரு திக்குகளிலும் ஆழியின் உள்ளே தூக்கிவீசப்பட்டதான வேதனையுடன், மழைக்குக் கிளம்பிய புற்றீசல்களைப்போல் அவனும் அவனுடைய நண்பர்களும் ஊரைவிட்டுக் கிளம்பிய அந்த நாட்களை என்ன சொல்வது...?

கல்லடிப்பாலத்துக்குக் கீழே நிலவு தெறித்து வீழ்ந்து கிடக்கும். இடையிடையே எழும் காற்றின் அசைவுகளில் வாவியில் நிலவு உடைந்து உடைந்து எழும். பாலத்தின் இருமருங்கும் அசையாப்பிணமாய் சென்றியின் உள்ளே மனிதர்களை விழுங்கும் மிருகங்கள் காத்துக்கிடக்கும். அந்த மஞ்ஞவண்ணாக்களுக்குக் கீழே ரோந்து செல்லும் ஆமிக்காரர்கள் அல்லது இயக்கக்காரர்கள் யாராவது மனிதர்களைப் பிடித்திழுத்து வந்து... ஓராயிரம் குண்டுகள் ஒன்றாய் வெடித்து சிதறிய குரூரவெறியில் ரத்தம் தெறிக்கும்.

அந்தமஞ்ஞவண்ணாக்களுக்குக் கீழே தான் குந்தியிருந்தார்கள், கூடிக்கூடிக்கதைத்தார்கள், ஒற்றுமையாயிருந்தார்கள், ஒவ்வொருவராய்ப் பிரிந்தார்கள். பாவம் அந்தமஞ்ஞவண்ணா மரங்கள் கூட. இந்நேரம் வெடித்துப்பிளந்த அதன் மஞ்சள் பட்டைகளின் உள்ளே கட்டெறும்புகள் ஊர்ந்து திரியும்.

●

# மா. சத்தியமூர்த்தி இலங்கை வானொலியில் பாடிய மெல்லிசைப்பாடல்கள்

**– வெளியீட்டு நிகழ்வு:**
**– சில குறிப்புகள்**
**– சில கேள்விகள்**






கடந்த சனி (22.06.96) மாலை 7.00 மணிக்கு ஆர்பாட்டங்கள், பந்தாக்கள் இல்லாது ஒரு விழா நடந்தேறியது. ஓ.. வண்டிக்காரா புகழ் மா.சத்தியமூர்த்தியின் எட்டுப்பாடல்கள் அடங்கிய ஒலிப்பேழை வெளியீட்டு விழாவும் அவரின் மெல்லிசை நிகழ்ச்சியும் மனமகிழ்ச்சியைத் தந்தன என்றே கூறலாம்.

அருணா செல்லத்துரையின் தயாரிப்பில் உருவாகி சில்லையூர் செல்வராஜனுக்கு காணிக்கை செய்யப்பட்ட இவ் ஒலிப்பேழையில் மா.சத்தியமூர்த்தி பலரது இசையமைப்பில் பலர் இயற்றிப் பாடிய பாடல்களுடன் மீள் இசையாக்கம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டது. இதை AVA நிறுவனம் வெளியிட்டுள்ளது. (இதற்கு முன்னும் அருணா செல்லத்துரையின் தயாரிப்பில் ஓர் ஒலியிழை வெளியிடப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.)

ஈழத்தில் ஒலிப்பேழை வெளியீடுகள் அதுவும் எமது பாரம்பரிய, கலை, கலாசாரங்களை தன்னகப்படுத்திய முயற்சிகள் மிக அரிதாகவே நிகழ்கிறது. இந்நிலை புலம் பெயர் ஈழத்தவர்கள் மத்தியில் ஒரு 'பரவாயில்லாத' நிலையில் உள்ளது என்றும் சொல்லலாம். புலம் பெயர்ந்த பலர் அவ்வப்போது ஒலி, ஒளிப் பேழைகளை வெளியிட்டு வருகிறார்கள் என்பதை அறியமுடிகிறது. அது அவர்களின் காத்திரமான எழுத்திலக்கியப்பணிபோல் காத்திரமாகவே உள்ளதும் (எல்லாம் அல்ல) குறிப்பிடத்தக்கது. இந்த வகையில் 12 பாடல்கள் அடங்கிய 'சங்கதிகள்' என்ற ஒலிப்பேழை ஜேர்மனியில் வெளியிடப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. இவை முற்றிலும் புதியவர்களைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட முயற்சியாகும். இவற்றுக்கு இசையமைத்திருப்பவர் ஜோன் நிரந்த டி சில்வா என்பவர். வயலின் இசை டிங்கிரிபண்டா ரட்னாயக்கா, தமிழரல்லாத இவர்களின் இசையில் உருப்பெற்றிருக்கும் இப்பேழையை ஒரு விஷேசமாகவும் கொள்ளலாம். அல்லது சிறந்த இசையமைப்பாளர்கள் நம்மிடையே இல்லையோ என்று ஆதங்கப்பட்டும் கொள்ளலாம்.

எம் நாட்டுப் பாடகர் முத்தழகுவின் பாடல்கள் CD இசைத்தட்டு வடிவம் பெற்றதும் ஒலிப்பேழை முயற்சிகளில் குறிப்பிடத்தக்கதாகும். இவை தவிர விடுதலைப்புலிகளினரால் பல ஒலி, ஒளி இழைகள் வெளியிடப்பட்டிருப்பதும் குறிப்பிற்குரியது. கவிதைகள் ஒலிப்பேழை வடிவம் (மதுரகவியின் 'கவிதாப் பிரவாகங்கள்') பெற்றதும் ஒரு புதுமுயற்சியே. எனினும் கவிதைக்கும் ஒலியிழைக்குமான உறவு எந்தளவுக்கு சாத்தியமானது என்பது கேள்விக்குறியே.

அடுத்தது, மெல்லிசை பற்றிச் சிறிது. இசையைப்பலர் மெல்லிசை, துள்ளிசை, பொப்பிசை (இன்னும்) என்று வகைப்படுத்துகின்றனர். இவற்றுக்கு தங்களுக்குப்பட்ட விளக்கங்களையும் கொடுக்கின்றனர். ஆட்டம் போட வைக்கிற பாடல்களை பொப்பிசை, துள்ளிசை என்கின்றனர். சினிமாப்பாடல்கள் அல்லாத பாடல்களை மெல்லிசை என்கின்றனர் சிலர். ஈழத்துப் பாடல்கள், நம்நாட்டுப் பாடல்கள் என்று இலங்கை வானொலியில் பாடப்படும் பாடல்கள் மெல்லிசைப்பாடல்கள் எனப்படுகின்றன. மெல்லிசைப் பாடல்கள் என்றும் தனியே நிகழ்ச்சி ஒலிபரப்பாவதும் குறிப்பிடத்தக்கது. இவ்விழாவில் பேசிய இசையமைப்பாளர் எம்.எஸ்.செல்வராஜாவும் மெல்லிசையை சினிமாப்பாட்டிசை அல்லாதது என்றே பாகுபடுத்தினார். நமது கலை, கலாசார, விழுமியங்களைக் கொண்டிருப்பதாகவே மெல்லிசை இனங்காணப்பட்டது.

உண்மையில் இந்தப் பாகுபாடு சரியானதா? சினிமாப் பாடலல்லாதவை மெல்லிசைப் பாடலென்றால் சினிமா இசையமைப்பாளர் எம்.எஸ்.விஸ்வநாதனை ஏன் மெல்லிசை மன்னன் என்கிறார்கள்? இந்தியாவில் மேடை நிகழ்ச்சிகளில் பாடிவரும் ஒருவர் மெல்லிசைப்பாடல் என்பதை 'சினிமாப் பாடல்களை பல்வேறு மேடைகளில் சினிமாப்பாடகர்கள் அல்லாதவர் பாடுவது' என்று அடையாளப்படுத்தியிருந்தார்.

கீழைத்தேய இசைக்கருவிகளைக் கொண்டு உருவாகும் இசை மெல்லிசை எனப்படும் என்கின்றனர் இன்னும் சிலர். அப்படியெனில் இன்று பாடப்படும் எம் நாட்டுப் பாடல்களை நாம் அதற்குள் அடக்கலாமா?

இந்த வகையில் மா.சத்தியமூர்த்தியின் பாடல்கள் எந்த வரையறைக்குள் அடங்கும்? ஏன் நாம் அவற்றை ஈழத்துப்பாடல்கள் என்று அடையாளம் காணக்கூடாது? நாம் சினிமாப் பாட்டிலிருந்து தள்ளி நிற்கிறோம் என்பதை அடையாளப்படுத்த எம்மூர்ப் பாடல்களை மெல்லிசைப் பாடல்கள் என்று தனித்துப் பார்க்கிறோமா?

வீரகேசரியில் (21.06.96) வெளிவந்த எஸ்.கே.பரராசசிங்கத்தின் 'மெல்லிசையின் பரிணாம வளர்ச்சி' பற்றிய கட்டுரையிலும் மெல்லிசை பற்றிய குழப்புதல்கள் தான் காணப்படுகின்றன. 'பண்டிதரும் பாமர மக்களும் அதிக சிரமம் இல்லாமல் கேட்ட மாத்திரத்தில் தம்மை மறந்து ரசிக்கக் கூடிய இசை மெல்லிசை என்பது ஒரு மேலோட்டமான கருத்து' என்கிறார். அப்படியெனில் இன்றைய சினிமாப் பாடல்கள்தான் மெல்லிசை என நாம் கொள்ள வேண்டியிருக்கிறது. ஏனெனில் அவற்றைத்தான் கேட்ட மாத்திரத்தில் மக்கள் மெய்மறந்து ரசிக்கிறார்கள். என்றாலும் 'மெல்லிசைக்கான இசை சினிமாப்பாடல் இசை போல் அமைந்திருக்கக் கூடாது. சினிமா சங்கீதத்தையும் மெல்லிசையையும் எந்த வகையிலும் ஒரே மாதிரியாக அமைக்கக் கூடாது..' என்றும் சொல்கிறார். அப்படியெனில் சத்தியமூர்த்தியின் பாடல்களை மெல்லிசைப் பாடலில் அடக்க முடியாதிருக்கிறது. காரணம் எல்லா வகையிலும் சினிமாப்பாடல்களின் அமைப்பையையே கொண்டுள்ளது.

இசையை வேண்டுமானால் பண்பாட்டு, கலாசார சூழல்களைக் கொண்டும் வாத்தியக் கருவிகளின் வேறுபாட்டைக் கொண்டும் கர்நாடக/ சாஸ்திரிய சங்கீதம் மேற்கத்திய சங்கீதம் என்று பிரிக்கலாம். இதுபற்றிய தெளிவுகளை விளக்கங்களை இது தொடர்பானவர்கள் தருவது சிறப்பானதாக இருக்கும்.

எனவே நாம் மா.சத்தியமூர்த்தியின் பாடல்களை வரையறைகள் போடுவதை விடுத்து பாடல்கள் என்ற ரீதியில் கேட்போம். அதுபற்றி விவாதிப்போம். நல்ல முயற்சிகளை வரவேற்போம். 'நாமும் நமக்கோர்நலியாக் கலையுடையோம்.'

இவ்வெளியீட்டு விழாவில் இலங்கை வானொலியின் வர்த்தக சேவையினால் ஏற்பட்ட பாதிப்புக்களையும் மக்கள் கேட்காமல் மக்கள் மீது திணிக்கப்பட்ட இந்திய இறக்குமதிகளின் ஆக்கிரமிப்பைச் சாடியும் பேசினார் இசையமைப்பாளர் எம்.எஸ்.செல்வராஜா. உண்மைதான் வர்த்தக சேவை பற்றி பக்கம் பக்கமாக எழுதலாம். அதிலும் 'மல்டிலக் மகிழ்ச்சிப் பூங்கா' அப்பப்பா சகிக்கவே முடியாது. திணித்துத் திணித்துப் பழக்கப்படுத்தி விட்டார்கள். இதனை ரசிக்க பிரபல விமர்சகர்களும் பழக்கப்பட்டு விட்டார்கள் என்பதும் புரிந்தது. ஆசியவெடியில் ஆடிப் போய்விட்டார்களோ இவர்கள்!

எல்லாவற்றுக்கும் அப்பால் அதிகமானோர்- பிரபல வானொலிக் கலைஞர்கள் உட்பட -கலந்து கொண்ட இந்நிகழ்வு நெருக்குவார உலகில் நெஞ்சைத் தடவிச் சென்றது.

அருணா செல்லத்துரைக்கும், தேவராஜ்ஜூக்கும் இதனோடானவர்களுக்கும் பாராட்டுக்கள். அதை எதிர்பார்க்காவிட்டாலும்!

-எம்.கே.எம்.ஷ…

## அடையாளம் தொலைந்தது

இன்றெம் மடையாளம் தொலைந்தது.

நீ நான்,அவனென மூவரும்
காக்கிச்சட்டைக்கச்சம் கொண்டு
எம் மொழி மறந்து சுயமிழந்து
மௌனம் கொண்டோம்.

அதுவுமிதுவுமென ஆயிரமடையாளங்களோடு
இந்நாட்டின் சுதந்திரக் குடியானவனாய்
நீயிருக்கலாம்;
எல்லாம் கிடப்பில் போடு.

அவனின் கேள்விகளுக்கு
சாதகமாய் பதில் சொல்லு,
சிங்களத்தில் பேசு அல்லது
மௌனங்கொண்டு சிறையிரு.

தமிழ் பேசுகிற ஒவ்வொருவனிலும்
சந்தேகங்கொள்ளவும்,முறைக்கவும்
மிரட்டவும் இறக்கியழைத்துச் செல்லவும் தான்
வீதிகளில் தடையரண்களௌன வுனக்கு
நினைக்கத் தோன்றும்;
தப்பில்லையென்று நீயின்றுணர்வாய்!

சந்தேகங் கொண்டலையுமவர்கள் கண்டு
குறுகிப்போவதேயெம் மிருப்பாய்ப்
போனதின்றித்தக் கொழும்பில்!

'பேப்பர்'கட்டோடு'ஜீப்'பேறிப்போனதுவும்
எம்மொழி தெரியா அவன்களிடம்
கைகட்டித்தலை குனிந்து நின்றதுவும்
உனக்குமட்டுமல்ல
அவனுக்குமெனக்கும் கூடப்புதிசு.
"பத்திரிகைகள் வெடிப்பதில்லை"கூடவே
"நாங்களுந்தா"னென மனங் கூறத்
துணிவெழுப்பும்;எனினும்
உதடமுக்கிச்சிரித்து மௌனங்கொண்டு
ஆண்களற்ற சிறையில் படுத்திருக்கும்
"அது'விற்கும் அழகான அவள்"பார்ப்பேன் ஜாடையில்.
நீயும் அவனுந்தான்.

வெறிபிடித்த அவர்கள்
இன்றெம்மை விடுவார்களென்ற நம்பிக்கை
அவள்'தந்தாள்!

*15051996 இரவு ஒரு மணி*

எம்.கே.எம்.ஷகீப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சென்ற வாரக் குவிமையம்

# பிரதேச சபைகளால் தீருமோ பிணக்கு?

பொ.ஐ.மு. அரசாங்கத்தினால் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைக்கப்பட்ட தீர்வு யோசனைகள் தொடர்பாக, ஐ.தே.க. உத்தியோகபூர்வமாக முதன் முறையாக அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது. அவ் அறிவித்தல் கடந்த (ஜூன்) 1ம் திகதிய திவயின பத்திரிகையில் வெளியாகியது. நாட்டின் பிரதான எதிர்க் கட்சி என்ற ரீதியில் ஐ.தே.க. அரசின் தீர்வு யோசனைகள் தொடர்பாக இதற்கு முன்னர் எந்தவித கருத்தையும் தெரிவித்திருக்கவில்லை என்பது யாவரும் அறிந்ததே.

ஆனால், திவயின பத்திரிகையில் வெளியான இச்செய்தி முதன்முதலாக அரசின் தீர்வு யோசனைகள் தொடர்பாக எதிர்க்கட்சி கொண்டிருக்கும் கருத்துக்கள் என்ன என்பதைக் காட்டியுள்ளது.

இச்செய்தியின் தலையங்கம் 'அரசின் தீர்வுத்திட்டம் தொடர்பாக ஐ.தே.க சந்தேகம்' என அமைந்திருந்தது.

மேலும் அச்செய்தியில் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

... வடக்கு மற்றும் கிழக்கு நெருக்கடியைத் தீர்க்கும் முகமாக அரசினால் முன்வைக்கப்பட்டுள்ள அரசியல் யோசனைகள் தொடர்பாக, ஐ.தே.கவுக்கு பாரிய சந்தேகம் ஏற்பட்டுள்ளதென எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் நேற்றுப் (ஜூன் 17) பகல் பாராளுமன்றத்தில் நடைபெற்ற ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர்களிடையே நடந்த கூட்டத்தில் இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில் பிரதான காரணங்கள் பலவற்றை முதன்மைப் படுத்தி இச்சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டியுள்ளார். இத்தீர்வு யோசனைகள் மூலம் வடக்கு - கிழக்கு பிரச்சினை தீர்க்கப்படும் என்பது தொடர்பாகவும், இவ் யோசனைகள் தெரிவிக்கும் பிராந்திய சபைகள் நடைமுறைக்கு வருவதன் சாத்தியப்பாடு தொடர்பாகவும் ஐ.தே.கவிற்கு நம்பிக்கையில்லா நிலை ஏற்பட்டுள்ளதாகவும், யோசனைகளை முன்வைத்த பொ.ஐ.மு. தலைமைத்துவம் தொடர்பாக பாரிய சந்தேகம் வலுவடைந்து வருவதாகவும், விக்கிரமசிங்க அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்.

... இத்தீர்வு யோசனைகள் இறுதியாக செயற்படுத்தப்பட்ட பின், வடக்கு - கிழக்கு பிரச்சினை தீர்ந்து விடுமா? என்று கேள்வி எழுப்பிய விக்கிரமசிங்க அவர்கள், அது இன்னொரு நெருக்கடிக்கு வழிகோலுமா என்ற சந்தேகத்தையும் எழுப்பியுள்ளார். இதைத் தவிர பிராந்திய சபைகள் உருவாக்கப்பட்டாலும் அவை எவ்வளவு தூரத்திற்கு தொடர்ச்சியான நடைமுறை இருக்கும் என்பது கேள்விக்குறியே.

... இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வாய்ப்பான ஒரு சூழலை இந்த அரசாங்கம் ஏற்படுத்தவில்லை எனவும், அரசு ஒரு புறம் யோசனைகளை பிரதாபப்படுத்தி, ஐ.தே.கவுடன் பேச்சுவார்த்தை நடாத்த முனையும் அதேவேளை ஜனாதிபதி ஐ.தே.கவை தாக்கும் கொள்கையை கடைப்பிடித்தார் என்றும், அது ஏன் என்றும் கேள்வியெழுப்பினார்.

... யோசனைகள் முன் வைக்கப்பட்ட போது அதனோடான எமது முரண்பாடுகள் அல்லது எதிர்ப்புகளை வெளிப்படுத்தாது, இத்தேசியப் பிரச்சினையை தீர்க்கும் முக்கியத்துவத்தின் பொறுப்பை உணர்ந்து செயற்பட ஐ.தே.க முனைந்த பொழுதும், ஜனாதிபதி அதற்கு எதிராக வெளிப்படையாக ஐ.தே.கவை தாக்கும் கொள்கையையே கடைப்பிடித்ததாக, விக்கிரமசிங்க அவர்கள், இங்கு சுட்டிக் காட்டியுள்ளார் .

.... தனக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தை சமாதான முறையில் அமைந்தது என தான் கூறும் பொழுது, ஜனாதிபதி ரணிலின் வாயில் பிட்டு எனக்கூறி அதற்கு வேறொரு பின் புலத்தை ஏற்படுத்த முனைந்தார் எனக் குறிப்பிட்ட விக்கிரமசிங்க அவர்கள் ஜனாதிபதி தற்போது ஐ.தே.கவுக்கும் புலிகளுக்கும் இடையில் தொடர்பு உண்டென வேண்டுமென்றே கூற முற்படுகின்றார் என்றும் சுட்டிக் கட்டினார்.

... இந்நிலைமை காரணமாக ஐ.தே.கவின் அரசியல் தீர்வுக்கான ஆதரவினை ஏற்படுத்திக் கொள்ளும் முயற்சியில் ஜனாதிபதி நேர்மையாக செயற்படுகிறாரா என்பது தொடர்பாக சந்தேகம் எழுந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

எதிர்கட்சித் தலைவராக ஒருவர் பதவி வகிக்கும் பொழுது அவருடைய பிரதான பொறுப்பாக உள்ளது அரச முறையின் கீழ் உள்ள ஒரு அரசாங்கத்தை ஜனநாயக வழியில் ஒழுங்குபடுத்துதலே. அதே போல் நாட்டின் எதிர்க்கட்சி என்ற ரீதியில், அரச அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ள முயற்சி எடுத்தலும் அவரது வேலையாக அமையும். ஆனால் விக்கிரமசிங்க அவர்களோ நேரடியாக அரசின் தீர்வு யோசனைகள் தொடர்பாக தமது ஆதரவினைத் தெரிவிக்காது இரண்டாம் பட்ச கேள்விகளை எழுப்ப முனைந்துள்ளார்.

இனப்பிரச்சினையை தேசிய அரசியல் மட்டத்தில் தீர்த்துக்கொள்ள பொ.ஐ.மு அதிகார சக்திகள் முயற்சி எடுக்கின்ற இவ்வேளையில் ஜனாதிபதி பிரதான எதிர்கட்சியுடன் நடந்துகொள்ளும் முறை தொடர்பாக நாம் சந்தோஷம் கொள்ள முடியாது. எவ்வாறாயினும், ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்ற குழுவின் முன் இவ்வாறான அறிக்கை ஒன்றை முன் வைத்தது மூலம் தெரிவது யாதெனில், அரசாங்கத்தின் தீர்வு யோசனைகள் தொடர்பாக, அவருக்கு பாதகமான கருத்தே இருக்கின்றது என்பதாகும். அவ்வாறே தீர்வுத்திட்டத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கும் நோக்கமும் உள்ளது என்று தோன்றுகிறது.

இவ் அறிக்கை திவயின பத்திரிகையில் வெளியாவதற்கு முதல், அதாவது ஜூன் 17இல் 'அரசியல் ரீதியான நட்புறவுக்கு பொ.ஐ.மு. மற்றும் ஐ.தே.க. முயற்சி' எனும் அறிக்கை வெளியானது. இவ் அறிக்கையின்படி அரசியல் ரீதியாக நட்புறவுக்கு முயல்வது தொடர்பாக ஐ.தே.க. மற்றும் பொ.ஐ.முவுக்கிடையில் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கிறது. இவ்வாறான நட்புறவை ஏற்படுத்த பிரதான காரணம் மேற்கத்தேய நாடுகளின் வேண்டுகோளாகும்.

... அரசாங்கத்தின் அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான யோசனைகள் தொடர்பாக மேற்கத்தேய நாடுகள் விருப்பம் கொண்டிருந்தன. ஆனால் இவ் யோசனைகள் தொடர்பாக ஐ.தே.கவுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் இழுபறி ஏற்பட்டதனால் மேற்கத்தேய நாடுகள் ஆதரவு அளிப்பது தொடர்பாக வற்புறுத்தத் தொடங்கியுள்ளன. இதற்குப் பிரதான காரணம், இவ் யோசனைகளை அரசாங்கம் ஐ.தே.க ஆதரவின்றி செயற்படுத்த முடியாது என்பதாகும். இவ்வாறு, அவ் அறிக்கை கூறுகின்றது. இது ஜூன் 1ம் திகதி லங்காதீப பத்திரிகையில், வெளிவந்த அறிக்கை மூலம் தெரியவந்தது. இலங்கையின் இன நெருக்கடியைத் தீர்ப்பதற்காக இப்பொழுது நல்லதொரு சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதென இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அவ்வறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

இதேபோல் ஜூன் 2ம் திகதி தினமின பத்திரிகை செய்தி வெளியிட்டதன் பிரகாரம் இந்தியாவின் புதிய அரசாங்கத்தின் வெளிநாட்டமைச்சர் குஜ்ரால் இலங்கை அரசாங்கத்தின் மீதான தமது நம்பிக்கையை வெளிப்படுத்தியிருந்தார். இந்திய வெளிநாட்டமைச்சர் தமது அறிவிப்பில் இவ்வாறு தெரிவித்திருந்தார்;

... எங்கள் கூட்டரசாங்கங்கம் புலிகளின் பால் இரக்கம் காட்டாது'

... புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் புலிகள் அமைப்பிடமிருந்து எந்தவித தொடர்பு முயற்சிகளும் எம்மை வந்து சேரவில்லை. அப்படி வந்தாலும் அவற்றை நாம் பெரிதுப்படுத்தப் போவதில்லை.'

இதில் தெரிவது என்னவெனில் புலிகள் தொடர்பாக இந்திய புதிய அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என்பதாகும்.

ஜனாதிபதி அவர்களுக்கும் இந்தியாவின் புதிய அரசாங்கத்தின் வலது சாரித் தலைவர்களுக்கும் இடையில் தனிப்பட்ட ரீதியில் அல்லது அரசியல் ரீதியில் தொடர்புகள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் பொ.ஐ.முயின் பங்காளர்களாக இருக்கும் கம்யூனிஸ்ட் கட்சியும் லங்கா சமசமாஜக் கட்சியும் இந்தியப் புதிய அரசாங்கத்துடன் நெருங்கிய நட்புறவு கொண்டவர்கள். இந் நிலைமையின் கீழ் சந்திரிகா அரசாங்கத்துக்கு இந்திய அரசாங்கத்துடன் நட்புறவை மேலும் வலுப்படுத்த ஓர் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டது போல யுத்தத்தினால் பிளவுபடுத்தலும் தோல்வியினால் பிடிவாதமும், சமாதானத்தின் நல்லெண்ணமும் உருவாகின்றது என்பதை ஞாபகப்படுத்திக் கொள்வது நல்லது.

-அசோகா


# சுதந்திர இலக்கிய விழா 1996

விபவி ஐந்தாவது சுதந்திர இலக்கிய விழாவையொட்டி ஆக்க இலக்கியப் படைப்பாளிகளுக்கான விருது வழங்கல்.

விருது வழங்கல் இரு பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளது.

1) 01.01.1995 இல் இருந்து 31.12.1995 வரையான காலப்பகுதியில் கவிதை,சிறுகதை,நாவல்,மொழிபெயர்ப்பு இலக்கியம் ஆகியதுறைகளில் வெளியாகிய சிறந்தநூல்களுக்கான விருது வழங்கல்.

- படைப்பாளிகள் இலங்கையராக இருத்தல் வேண்டும்.
- வெளிநாட்டில் வதியும் படைப்பாளிகளின் நூல்களும், வெளிநாடுகளில் வெளியிடப்பட்ட நூல்களும் போட்டியில் சேர்த்துக்கொள்ளப்படும்.
- அமைப்புக்குழுவே நூல்களை சேகரித்து மதிப்பீடு செய்யும். இருப்பினும் தவறுகளை தவிர்க்கும் முகமாக எழுத்தாளர்கள் தமது நூல்களைப்பற்றிய விபரங்களைத் தந்துதவுமாறு வேண்டுகிறோம்.

2) புதிய எழுத்தாளர்களுக்கான விருது வழங்கல்

சிறுகதை, கவிதைத்துறைகளில் புதிய எழுத்தாளர்களுக்கான போட்டி ஒன்றை நடாத்தி சிறந்த படைப்புகளுக்கு விருது வழங்கல்.

**போட்டி முடிவுத் திகதி 31.08.1996**

இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கும், விண்ணப்பப்படிவங்களுக்கும் சுயமுகவரி இடப்பட்ட, முத்திரை ஒட்டப்பட்ட,கடித உறையொன்றை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

அமைப்புக்குழு,
புதிய எழுத்தாளர் போட்டி,
சுதந்திர இலக்கிய விழா - 1996
51/7 இராஜாஹேவாவித்தாரண மாவத்தை
இராஜகிரியா வீதி,
இராஜகிரிய.
தொலைபேசி - 866815

(நான்காம்,ஐந்தாம் சுதந்திர இலக்கிய விழாக்களை இவ்வாண்டு ஒக்டோபரில் நடாத்தவுள்ளோம்)


## விசாரிக்கப்பட முடியாத...

**நீண்டகாலமாக தோட்டத் தொழிலாளர்களுடைய ஆதரவாளர்களாக ல.ச.ச.க இருந்து வந்துள்ளது. இப்போது அது அக்கறையற்று இருப்பதாக சொல்ல முடியாதா?**

நாம் இப்போது அவர்களது சம உரிமைக்கானதும் அந்தஸ்துக்கானதுமான போராட்டத்திற்கு ஆதரவு வழங்குகிறோம்.

**இப்போது தோட்டங்களை நிர்வகிக்கும் முகாமைத்துவக் கம்பனி பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

அவைகளில் சில கொள்ளைக் கூட்டத்தினைப் போல நடந்து கொள்கின்றன. பொதுச் சொத்துக்கள் சூறையாடப்படுகின்றன. அவர்கள் எப்போதோ ஒதுக்கப்பட்டிருக்க வேண்டியவர்கள். உண்மையில் இந்த தோட்ட நிலங்கள் அங்குள்ள தொழிலாளகளதும் அவர்களது சந்ததியினரதும் ஆகும். ஆனால் அவை பலாத்காரமாக அவர்களிடமிருந்து பிடுங்கப்பட்டு பெரிய தனியார் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மக்களது உரிமைகள் நசுக்கப்பட்டுள்ளன.

**அண்மையில் PERC இனால் தனியார் மயமாக்கப்படவுள்ள பொது ஸ்தாபனங்களின் பட்டியல் ஒன்று பத்திரிகைகளில் வெளியாகியிருந்தது. இது தொடர்பாக ல.ச.ச.கவின் நிலைப்பாடு என்ன?**

நாம் தனியார் மயமாக்கலை எதிர்க்கிறோம். அதுவே எமது நிலைப்பாடு. அவ்வாறுதான் பொ.ஐ.முவின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் குறிப்பிடப்பட்டிருந்தது.

**ஆக, இந்த அரசாங்கத்தில் இருந்தபடியே இது தொடர்பாக என்ன தான் செய்யலாமென்று கூறுகிறீர்கள்?**

எதையும். எல்லாவற்றையும். நாம் தனியார் மயமாக்கல்களுக்கு எதிரான மக்கள் அபிப்பிராயத்தை வளர்த்தெடுப்போம். பொ.ஐ.மு அரசாங்கத்துள் சிந்தனைத் தெளிவு மிக்க எதிர்ப்புக்களை வளர்ப்போம். இதன் மூலம் அரசாங்கத்தின் தலைமைத்துவத்தின் மீது அமுக்கங்களை கொண்டு வருவோம் தனியார் மயமாக்கலுக்கு எதிரானவர்களையும் அரசியல் தலைவர்களையும் இணைத்து மக்களது மாற்றுக் கருத்துக்களை வெளிப்படுத்தவும் ஆர்ப்பாட்டம் செய்யவும் செய்வோம் வேலை நிறுத்தத்தில் குதிப்பதன் மூலம் தனியார் மயமாக்கலை எதிர்ப்போம் பெருமளவில் மக்களை அணிதிரட்டி எதிர்ப்பு நடவடிக்கைகளை நடாத்துவோம்

**அரசாங்கத்தின் ஒரு அங்கத்துவக் கட்சி என்ற முறையில் உங்கள் போக்கு குறித்து ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளீர்களா?**

ஆம். ஜனாதிபதிக்கு நாம் எழுதியுள்ளோம். அவருடன் பேசியுமுள்ளோம். உண்மையில்: தனியார்மயமாக்கப்பட்ட நிறுவனங்கள் தேசிய நலன்களை அடிப்படையாகக் கொண்டு இயங்காத பட்சத்தில் அவற்றைத் திருப்பி எடுப்பதற்கான சட்டங்களை கொண்டுவர அவர் ஒப்புக்கொண்டுள்ளார். அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அவர்கள் தமது PERC சம்பந்தமான பாராளுமன்ற விவாதத்தை முடித்துவைத்துப் பேசுகையில் இது பற்றி தெளிவாகக் கூறியுள்ளார். நாம் இந்தச் சொற்களை நடைமுறையில் காட்டுமாறு இப்போது ஜனாதிபதியைக் கேட்கிறோம்.

**தொழிலாளர் சார்பான உங்கள் உறுதியான நிலைப்பாட்டுக்கான பெயர் பெற்ற ஒருவர் நீங்கள். இப்போது சமரசம் செய்துகொள்ளும் ஒருவராக மாறியுள்ளீர்களா?**

இல்லை. நானோ எமது கட்சியோ இந்த அரசாங்கத்தின் கைதிகளல்ல. நாம் பொ.ஐ.முவின் உறுப்பினர்கள் மட்டுமே. தேர்தல் காலத்தில் ஐதேகவுக்கு எதிராக வேலை செய்வதில் கூட்டாக செயற்பட்டவர்கள். யார் ஆட்சியிலிருந்தாலும் ஐ.தே.கவுக்கு எதிரான எமது நடவடிக்கைகள் தொடரும்.

**அதாவது வேறு வார்த்தைகளில் சொல்வதானால் நீங்கள் ஐ.தேக பதவிக்கு வருவதற்கு எதிராக இருப்பீர்கள்?**

நாம் ஐதேக பதவிக்கு வருவதை ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம்.

## வாளேந்திய...

அடக்கி ஒடுக்குவது, அதன்பின் தாம் நினைத்தவற்றை நடைமுறைப்படுத்துவது... இதுதான் ஜனாதிபதியின் நடைமுறைச் செயல் திட்டம்.

புலிகள் விடயத்தில் இந்த அணுகுமுறை வெற்றியளித்தது. மின்சார சபை ஊழியர்கள் விடயத்தில் ஓரளவுக்கு இத்தந்திரம் வெற்றியைத் தந்தது. ஐ.தே.க விடயத்திலும் இது வெற்றியைத் தரும் என்பதே அவரது திட்டம்.

அப்படித்தான் அது வெற்றியைத் தராமல் போனாலும் அரசாங்கம் தமது குறிக்கோள்களை நிறைவேற்ற முடியாமல் போனதற்குக் காரணம் அரசாங்கம் அல்ல, ஐ.தே.கவே என்று ஆகிவிடும். எப்படியாயினும் வெற்றி எமக்கே என்பது தான் இதன் இறுதி முடிவு.

இது சந்திரிகா அம்மையாரின் இராஜ தந்திரம். ஆனால், இப்போது எழுகிற கேள்வி என்னவென்றால், இந்த இராஜ தந்திரம் மூலமாக அவர் செய்ய விரும்புவது எதை என்பது தான்.

புலிகள் மீதான தாக்குதல் தமிழ்க் கட்சிகள் எதுவும் ஒப்புக் கொள்ளாத ஒரு வெற்றுத் தீர்வை தமிழ் மக்கள் மீது திணிக்க உதவியுள்ளது.

மின்சார சபை ஊழியர்கள் மீதான தாக்குதல் தனியாருக்கு பொதுச் சொத்துக்களை விற்பதற்கு வாய்ப்புக் கொடுத்துள்ளது.

ஐ.தே.க மீதான தாக்குதல்?

இந்த நாட்டில் ஐ.தே.க மக்களுக்கு எதை எல்லாம் செய்ததோ அதை ஏன் அதையும் விட அதிகமாகச் செய்வதற்கு இது வாய்ப்புக் கொடுக்கும்.

இது எவ்வளவு ஆபத்தான ஒன்று என்பதை விளங்கிக் கொள்ள அதிக புத்திசாலித்தனம் தேவையில்லை. கண்களையும் காதுகளையும் திறந்து வைத்திருந்தாலே போதும்.

சந்திரிகா பண்டாரநாயக்காவின் ஜனாதிபதி பதவி குரங்கின் கை வாள் என்பது இப்போது தெளிவாகி விட்டது.

ஆணை கொடுத்த மக்களாகிய மன்னருக்கு என்ன நடக்கப் போகிறது என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

மக்கள் இனியும் தூங்கிக் கொண்டிருந்தால் அது நிச்சயம் நடக்கத்தான் போகிறது!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அது அரசியற் பழிவாங்கலே அல்ல!

தங்கள் இதழ் 97 வெளியீட்டில் 16ம் பக்கத்தில் மேற்படி தலையங்கத்தில் ஒரு செய்தி வெளியிட்டு இருப்பதனைக் கண்ணுற்றேன். இப்பிரதேசத்தின் மக்களின் சேவகன் என்ற அடிப்படையிலும், இப்பிரதேச கல்வி வளர்ச்சியில் அக்கறையுள்ளவன் என்ற கோதாவிலும், தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலும் குறித்த செய்தி உண்மைக்குப் புறம்பானது என்பதனையும், குறித்த இவ்வாசிரியரின் இடமாற்றம் தொடர்பான விபரத்தினையும் தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

கல்வித் திணைக்களத்தில் இடமாற்ற விடயத்தில் யாரும் தன்னிச்சையாக முடிவு எடுக்க முடியாது. அதற்கென ஒரு இடமாற்ற சபையுண்டு. மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆசிரியருக்கு பலத்த பற்றாக்குறை நிலவுகின்றது என்பதனை யாவரும் அறிவர். அந்த அடிப்படையில் குறித்த புஷ்பவதி என்ற பட்டதாரி ஆசிரியை மட்டு/ஒந்தாச்சிமடம் சித்தி விநாயகர் ஆலயத்தில் கடமையாற்றினார். இப் பாடசாலையில் இவர் ஆசிரிய ஆளணியின்படி மேலதிக ஆசிரியராகக் காணப்பட்டதால் இடமாற்றசபை இவரை ஒந்தாச்சிமடத்தில் இருந்து இரண்டு கிலோமீற்றர் தொலைவில் இருக்கும் மகிழூர் சரஸ்வதி வித்தியாலயத்திற்கே இடமாற்றம் செய்திருந்தது. இதற்குத் தன்னால் போகமுடியாது என்றும், தனக்கு சுகயீனம் என்றும், தன்னைப் பிரதான வீதியில் ஓர் பாடசாலைக்கு இடமாற்றம் செய்யும்படியும் என்னை எனது காரியாலயத்தில் வந்து சந்தித்து தனது கோரிக்கையை முன்வைத்தார். இவரின் கோரிக்கையின் பிரகாரம் இவரின் இருப்பிடமான பெரிய கல்லாற்றிலிருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்தில் இருக்கும் கோட்டைக்கல்லாற்றிற்கு இடமாற்றம் கொடுக்கும்படி கடிதம் ஒன்றினை பிரதிக் கல்விப் பணிப்பாளருக்கு கொடுத்துதவினேன். இக்கடிதத்தை சம்பந்தப்பட்ட ஆசிரியை உரிய பிரதிக் கல்விப்பணிப்பாளரிடம் சமர்ப்பிக்காமல் நேரடியாகவே வட- கிழக்கு மாகாண கல்விமைச்சின் செயலாளர் தியாகராஜாவிடம் சென்று தன்னை அரசியல் பழிவாங்கிவிட்டார்கள் என்று கூறி இந்த இடமாற்றத்தினை இரத்துச் செய்யும்படி கோரியுள்ளார். அவரும் இதனை இரத்துச் செய்துவிட்டார். பின்பு செயலாளர் தொலைபேசிமூலம் என்னோடு தொடர்பு கொண்டபோது நான் மேற்குறித்த உண்மை நிலையினை விளக்கினேன். சொந்தக்கிராமத்தில் இருந்து ஒரு கிலோ மீற்றருக்குள் கடமையாற்றக் கேட்பது அரசியல்பழிவாங்கலா?

ஒரு ஆசிரியர் கல்வியதிகாரிகள், சட்டத் திட்டங்கள், மக்கள் பிரதிநிதிகள் செயலாளர், ஆளுநர் ஆகியோரது நடவடிக்கைகள் அனைத்தையும் மீறி சுயலாபத்திற்காக தான் விரும்பும் பாடசாலையில் கல்வி கற்பிக்க வேண்டுமென்றால் எப்படிக்கல்வி அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்வது என்பதனை யாவரும் யதார்த்த பூர்வமாகச் சிந்திக்கவேண்டும். பட்டதாரி என்றால் ஆரம்பப் பிரிவுகளில் கல்விகற்பிக்க இயலாது என்று எந்தச் சட்டத்திலும் இல்லை. எந்தவொரு ஆசிரியருக்கும் அநீதியிழைக்கப்பட்டால் அவர் நீதிமன்றம் சென்று தன்னுடைய உரிமையை நிலைநாட்டிக் கொள்ளலாம் என்று இந்த நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்திலுள்ளது. அதனைவிடுத்துபொய்களைக் கூறி உண்மைகளை திரிபுபடுத்தி தொடர்புசாதனங்கள் மூலம் அதிகாரிகளுக்கு அவதூறு ஏற்படுத்துவது எதிர்காலச்சந்ததியினரின் கல்வியைச்சீரழித்து விடும் என்பதனைப் பொறுப்புள்ள ஒவ்வொருவரும் கவனத்தில் கொள்ள வேண்டும். இதேவழியில் எல்லா ஆசிரியர்களும் செல்ல முற்பட்டால் தாங்கள் குறிப்பிட்ட மட்டக்களப்பு கல்வித் திணைக்களத்தின் இலட்சணம் மாத்திரம் அல்ல இலங்கையின் கல்வித் தரத்தின் இலட்சணமும் கீழ் நிலைக்குத் தள்ளப்படும் என்பதில் ஐயமில்லை.

அடுத்ததாக இவ்விடமாற்றத்தினால், இவர் தோற்றவிருந்த பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பரீட்சை தவறவிடப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டு இருந்தது. ஆனால் இதுவரை பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பரீட்சை நடைபெறவில்லை. ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கற்பிப்பதற்கு அரசாங்கம் சம்பளம் வழங்குகின்றதா? இல்லை, ஆசிரியர்கள் பட்டப்பின் டிப்ளோமா படிப்பதற்கு சம்பளம் வழங்குகின்றதா? இதற்கென படிப்பு விடுமுறை கொடுக்கப்படுகின்றது. அப்போது படித்து பரீட்சை எழுதிக் கொள்ளலாம்தானே.

இவரது இறுதி இரத்துக் கட்டளை மாகாணக் கல்விப் பணிப்பாளராலேயே செய்யப்பட்டுள்ளது. இதனை பிரதிக்கல்விப் பணிப்பாளர் மீறியுள்ளார் என்பதனை எப்படி உறுதிப்படுத்தமுடியும்? ஒரு பாராளுமன்ற உறுப்பினர் பிரதிக் கல்விப் பணிப்பாளருக்குக் கொடுத்த கடிதத்தையே அவருக்குக் கொடுக்காமல் கல்விச் செயலாளரிடம் சென்று முறையிட்டு அவரது கட்டளையிலும் திருப்திப்படாமல் மேதகு ஆளுநரிடம் முறையிட்டுள்ளார். இந்த ஆசிரியரின் நடவடிக்கைகளை ஆராய்ந்து கண்ணுற்ற ஆளுநர் இவரை இந்த மாவட்டத்திலேயே இருக்கக்கூடாது என்று கல்முனைக்கல்வி மாவட்டத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். குறித்த பாராளுமன்ற உறுப்பினர் கல்வித் திணைக்களத்தாருடன் கலந்துரையாடல் நநடத்துவது வித்தியாசமான நடைமுறையெனக் குறிப்பிடப்பட்டிருந்தது. மட்டக்களப்பு மாவட்டத்தில் எனது பட்டிருப்பு தொகுதி ஒரு பின்தங்கிய பகுதியாகும். தற்போதைய சூழ்நிலையில் படுவான்கரை மக்கள் கல்வியதிகாரிகளை சந்திப்பது முடியாததொரு காரியமாகவே இருக்கின்றது. அதிபர்கள் ஆசிரியர்கள் தங்கள் குறைபாடுகளை மாதத்தில் ஒரு தடவை ஒரு நடமாடும் சேவை மூலம் களுவாஞ்சிக்குடி அலுவலகத்தில் கல்விப்பணிப்பாளர், கல்வியதிகாரிகளைச் சந்தித்து காரியங்களைச் சாதிக்க இலகுபடுத்த முனைந்தது எந்த வகையில் வித்தியாசமான நடைமுறையாகும்?

*பொ. செல்வராஜா, பா.உ.*
*மட்டக்களப்பு*

# பதில்களுக்கு ஒரு பதில்!

A History of the Upcountry Tamil People என்ற நூலைப் பற்றி சரிநிகர் 95இல் வெளிவந்த அறிமுகக் குறிப்பு பற்றி வ.ஐ.ச. ஜெயபாலனும் லெனின்மதிவாணமும் சரிநிகர் 96இல் எழுதியிருந்த பதில்களை ஜோதிக்குமார் வாசித்திருப்பாராயின் அவருக்கு மீண்டும் சரிநிகர் 95இல் வெளிவந்த அறிமுகக்குறிப்பை வாசிக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியிருக்கும். அவர் மீண்டும் வாசித்திருப்பார். 'அந்த அறிமுகக் குறிப்பில் என்னை எங்கே தாக்கி எழுதியிருக்கிறார்கள்?' என்னை எங்கே அவதூறு செய்திருக்கிறார்கள்? பிறகு ஏன் ஜெயபாலனும் லெனின் மதிவாணமும் சரிநிகர் 96இல் இப்படி எழுதியிருக்கிறார்கள்?'' என்று தனக்குள்ளே கேள்விகளை எழுப்பியிருப்பார்.

''இந்நூலை எழுதிய நடேசனும் சரி, இந்நூலை வெளியிட்ட ஜோதிக்குமாரும் சரி மலையகம் குறித்து அக்கறைகொண்டவர்கள் அல்ல என்று கூறிவிட முடியாது'' என்றும் .....

''ஜோதிக்குமார் அவர்கள் சற்று இந்த விடயத்தில் சிந்திப்பது அவரது சமூக அக்கறையை இன்னும் ஆழப்படுத்தி இன்னும் காத்திரமான பணிகளில் ஈடுபட வழிவகுக்கும் என்பது நம்பிக்கை'' என்றும் சரிநிகர் 95இல் ஜோதிக்குமார் பற்றிய எழுதிப்பட்டுள்ளது. இவ்வாறு எழுதப்பட்டமை ஜோதிக்குமாரை தாக்குவதாகவோ அல்லது அவதூறு செய்வதாக அமையுமா என்பது தமிழ் மொழியில் மிகச் சாதாரணமான அறிவுடையவர்களுக்கே புரியும். சரிநிகர் 95இல் ஜோதிக்குமாரை அவதூறு செய்யும் வகையில் விமர்சனம் செய்யப்பட்டதாக வ.ஐ.ச. ஜெயபாலன் எழுதிய தன்மூலம் குறிப்புக்கும் விமர்சனத்திற்கும் வித்தியாசம் தெரியாத அவதூறு என்பதற்கு அர்த்தம் தெரியாத ஆய்வாளர் அவர் என்பதை நிரூபித்திருக்கிறார்.

கால்மார்க்ஸின் மூலதனம் என்ற ஆய்வு நூல் மார்க்ஸின் தாய் மொழியான ஜெர்மன்மொழியிலேயே எழுதப்பட்டது என்பதனையும், பின்னர் அதன் முக்கியத்துவம் காரணமாகப் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டது என்பதையும் லெனின் மதிவாணம் அறியமாட்டாரா? எது எவ்வாறெனினும் ஒருவர் அவருக்கு விருப்பமான இயலுமான மொழியில் பேசலாம். எழுதலாம். அது அவருக்குரிய பறிக்கப்படமுடியாத உரிமை. அதே போன்று ஒரு சமூகத்தின் வரலாற்றை அச்சமூகம் தனக்கு இயலக்கூடிய மொழியில் படித்தறியும் வகையில் படைத்தளிப்பது ஒரு எழுத்தாளனினதும், வெளியீட்டாளனினதும் கடமை ஆகும். நடேசன் அவர்கள் அவருக்கு பரீட்சயமான மொழியில் எழுதியதோ அதனை ஜோதிக்குமார் வெளியிட்டதோ குற்றமல்ல. அது தமிழ் மொழியில், மலையகம் அறியக்கூடிய மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்படாவிடின் அந்நூலின் சமூகப்பணி நிறைவேற்றப்பட்டதாகக் கொள்ளப்படலாகாது என்பது தான் அபிப்பிராயம்.

லெனின்மதிவாணம் எழுதியது போன்று ''ஏனைய மொழி சார்ந்த புத்திஜீவிகள் மலையக மக்களைப் பற்றி சிந்திக்கவும், மேலாக மலையக மக்களின் பிரச்சினைகள் சர்வதேச பார்வைக்கு உட்பட்டதுடன் இன்று மலையகத்தில் இம்மக்களின் நலனில் சார்ந்து நிற்கின்ற புத்திஜீவிகள் (புத்திஜீவி என்பது ஆங்கிலத்தில் வாசிக்கத் தெரிந்தவர்களை மட்டும் குறிக்கும் என்பது லெனின் மதிவாணத்தின் வரைவிலக்கணம் போலும்) இந்நூலை கற்கக் கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது'' என்பது மட்டும்தான் நடேசனின் நூலின் தோற்றத்துக்குரிய எதிர்பார்ப்பு என்று கொள்ளப்படுமானால் தமிழில் மொழிபெயர்க்கப்படவேண்டிய அவசியமில்லை. அப்படியென்றால் மலையகப் புத்திஜீவிகள் மலையக மக்களைத் தொடர்ந்தும் இருட்டிலேயே வைத்துக்கொண்டு அவர்களது புத்திஜீவி விற்பனையில் லாபமடைய எண்ணம் கொண்டுள்ளனரா?

வ.ஐ.ச.ஜெயபாலன் மலையக மக்களை 'மேய்ப்பதற்கு 'புல்வெளி' தேட அல்லது அமைக்க எண்ணம் கொண்டிருந்தால் மலையகத்தில் முயற்சி செய்து பார்க்கலாம். அதற்காக சரிநிகர் 95இல் ஜோதிக்குமார் பற்றி அவதூறு செய்யும் வகையில் எழுதப்பட்டதாகக் கூறிக்கொண்டு தேவையற்ற வகையில் சேரனைவம்புக்கு இழுப்பதேன்? அர்த்தமற்ற வகையில் மலையகப் படித்தவர்களுக்கும் யாழ்ப்பாண மத்தியதரவர்க்கத்தினருக்கும் ஏன் சிண்டு முடியப்பார்க்கிறார்? அவர் சார்ந்த யாழ்ப்பாண மத்தியதர வர்க்கம் பற்றி கேவலமாகப் பேசுவதன் மூலம்தான் மலையகப் படித்தவர்களிடம் (சீப்பான) அங்கீகாரம் பெறமுயற்சிக்கின்றாரா?

சரிநிகர் 95இல் இந்நூல் பற்றி ஒரு ஆய்வோ விமர்சனமோ நடத்தப்படவில்லை. அது வெறும் அறிமுகக் குறிப்பே. எனவே லெனின் மதிவாணம் குறிப்பிடுவது போன்று நூலை ஆய்வு செய்வது அங்கு நோக்கமாகக் கொள்ளப்படவில்லை என்றே எண்ணத்தோன்றுகிறது. அங்கு வெளிப்படையாக இடித்துரைக்கப்படவில்லையாயினும் முழுக்குறிப்பையும் ஒழுங்காக வாசித்தால் இந்நூல் தமிழில் மொழிபெயர்க்கப்படவேண்டும் என்பதனையே அக்குறிப்பு வேண்டிநிற்கிறது.

*வெ. சுப்பிரமணியம்.*
*பூண்டுலோயா.*

# கணைக்காலிடம் சில கேள்விகள்!

சரிநிகர் இதழ் 99ல் சு.வியின் 'காலத் துயர்' கவிதை தொடர்பாக சேரமான் கணைக்கால் இரும்பொறை அவர்கள் எழுதிய விமர்சனக் குறிப்பு சமகாலத்தில் ஓர் ஆரோக்கியமான பார்வையை வெளிப்படுத்துகிறது. இருப்பினும் ''90களில் ஈழத்துத் தமிழ்க் கவிதைகள் பல பழைய சட்டகங்களில் இருந்து விடுபட்டு புதிய பல பரிமாணங்களைக் காண்பித்துச் சென்றுகொண்டிருக்கிறது'' என்கிறார்.

இப்படி அவர்கூறும்போது, அவரது கூற்று புதிய பரிமாணங்களைக் காட்டிச் செல்லும் கவிதைகள் சம்பந்தமான மறுவாசிப்பையும் வேண்டிநிற்பதை நாங்கள் அனுமானிக்கலாம். அப்படியெனில், அவர் குறிப்பிடும் 90களில் ஏற்பட்ட நவீன போக்குகள் சம்பந்தமாகவும், அவற்றுக்குக்காரணமாய் இருந்த கவிஞர்கள் பற்றியும் ஓர் மேலெழுந்தவாரியான வெளிக்கோடுகளையாவது தந்திருந்தால், அது நம்போன்றவர்களுக்கு உதவியாய் இருந்திருக்கும்.

மேலும் இதுகாலவரை ஈழத்து நவீன தமிழ்க்கவிதை தொடர்பாக ஒரு காத்திரமான ஆய்வுமுன்வைக்கப்படவில்லை. 80க்குப்பின்னர் ஏற்பட்ட புதிய பரிமாணங்கள் வளர்ச்சிகள் குறித்தும் கூட வெறும் அபிப்பிராய மட்டங்களில் கருத்து நிலவுகிறதே ஒழிய முழுமையான ஆய்வுநிலைப்பட்ட பார்வைகள் மதிப்பீடுகள் முன்வைக்கப்படாமலேயே உள்ளது. ஆகவே 90களில் என்று வரும்போதும் 'இதே நிலையே தொடர முடிகிறது. இதன் நிமித்தமாகவே நண்பர் கணைக்காலிடம் இக்கேள்விகளை நாம் எழுப்ப வேண்டியுள்ளது. அவர் இனங்கண்ட 90களின் புதுப்போக்குகளை தமது பார்வை நிலைநின்று காட்டினால், இன்னும் இது குறித்து ஆழ்ந்து சிந்திப்பதற்கும் கருத்துக்கள் உருவாகுவதற்கும் இது வழிசமைப்பதாய் அமையும். இது குறித்த ஏனைய கவிஞர்களும் தமது கருத்துக்களை வெளிக்கொணர்ந்தால், இது பல ஆரோக்கியமான பார்வைகளுக்கும் மதிப்பீடுகளுக்கும் வழிவகுக்கும்.

*மு. பொ.*
*கொழும்பு - 06*



# கஷ்ட நிவாரணக் கொடுப்பனவு எங்கே?

ஜனாதிபதி அவர்களினால், அறிவிக்கப்பட்ட கஷ்ட நிவாரணக் கொடுப்பனவுகள் கிழக்கு போக்குவரத்து ஊழியர்களுக்கு வழங்கப்படவில்லை. கிழக்கு மாகாணத்தில் ஒன்றரை மந்திரியும் பத்துக்கு மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்தும் இது சம்பந்தமாக விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கிழக்கு மாகாண சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கு தங்கள் உயிரைக்கூட தியாகம் பண்ணியிருக்கிறார்கள். அப்படியிருந்தும் அவர்களைப் புறக்கணிப்பது துரோகமான செயல். போக்குவரத்து சீர்குலைந்தால் சிவில் நிர்வாகம் சீர்குலைந்து போகும். ஆகவே அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி வைக்கும்படி பாராளுமன்ற உறுப்பினர்களையும் இது சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் கேட்டுக்கொள்கிறோம்.

*'போக்குவரத்து ஊழியர்கள்*
*கிழக்கு மாகாணம்*

# ஒரு நன்றிக் குறிப்பு!

1996 மே 02-15இல் வெளிவந்த சரிநிகர் பத்திரிகையில் கல்முனைத் தொகுதியைச் சேர்ந்த நற்பிட்டிமுனை சேனைக்குடியிருப்பு, மணல்சேனை மக்களுக்காக ஏற்படுத்தப்பட்ட கல்முனைக்குழாய்நீர்த் திட்டத்திலிருந்து சில சக்திகள் மறைமுகமாக கல்முனைக்குடி, சாய்ந்தமருது போன்ற கிராமங்களுக்கு 25.கி.மீ. அளவில் வெட்டிக்கொண்டு செல்லப்பட்டதனால் நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு தமிழ், முஸ்லிம் மக்களுக்கு ஏற்பட்டுள்ள குடிநீர்க் கஷ்டங்களைப்பற்றி சரிநிகர் பத்திரிகைக்கு எழுதிய கட்டுரையை சிறப்பான முறையில் புகைப்படத்துடன் பிரசுரித்தமைக்கு இப்பிரதேச மக்கள் சார்பில் தங்களுக்கும், காரியாலயத்தில் பணிபுரியும் மற்றைய உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கும் மனம் நிறைந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உண்மையை வெளிக்கொண்டு வருவதிலும் அநியாயங்களைத் தடுத்து நிறுத்துவதிலும் இலங்கையில் வெளிவரும் பத்திரிகைகளில் முதன்மையான பத்திரிகையான சரிநிகர் மக்கள் மனதில் நிலைத்து நின்று தொடர்ந்து பலராலும் பாராட்டுப்பெற வாழ்த்துகின்றேன்.

*ஏ.ஏ. கபூர்,*
*கல்முனை.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சரிநிகர்
SARINIHAR

# ஒற்றை ஆட்சியா? ஐக்கிய இலங்கையா?

அரசயாப்பு சீர்திருத்தம் தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் ஐ.தே.கட்சியின் பிரதிநிதியான முன்னை நாள் யாப்பியல் விவகார அமைச்சர் கே.என்.சொக்ஸி முன்வைத்த ஆலோசனைகள் அரசின் கவனத்தையும் ஈர்த்துள்ளதாக தென்படுகிறது. அரச யாப்பின் 2ம் சரத்தான 'இலங்கை ஒற்றையாட்சி அரசாக இருக்கும்' எனும் பதம் நீக்கப்பட்டு இலங்கை 'ஒரு பிராந்தியங்களின் ஒன்றியமாகும்' என்றும் அதிகாரங்கள் முறையாக பகிரப்படுவதற்கு தடையாக அமைந்த 'பாராளுமன்றத்தின் சுயாதிக்கத்தை முழுமையாக உத்தரவாதப் படுத்துகின்ற 76ம் இலக்க சரத்தை நீக்கி விடுவதெனவும் அரசாங்கம் முன்வைத்துள்ள பிரேரணைகளில் மிகவும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. பாராளுமன்ற சுயாதிபத்தியத்தைக் கொண்ட ஒற்றையாட்சி அமைப்பினுள் பிராந்திய சுயாட்சியை முறையாக ஏற்படுத்த முடியாது என்பதே அத்திருத்தங்களுக்கான அடிப்படைக் காரணியாகும். அரசு முன்வைத்துள்ள பிரேரணைகளில் மிகவும் முன்னேற்றகரமான பிரேரணைகளாகவும் இவை அமைந்துள்ளன. ஆனால் சொக்ஸி அவர்கள் 2ம் சரத்தில் மாற்றத்தைச் செய்யாது, ஒற்றையாட்சி முறையை உத்தரவாதப்படுத்தும் அதே நேரத்தில் 76ம் சரத்தை அதிகாரப்பங்கீட்டுக்கு அனுகூலமான வகையில் மாற்றி அமைக்கும் படியும் ஆலோசனை கூறியுள்ளார். இவரது ஆலோசனைகள் ஐ.தே.கட்சியின் பேரினவாதக் குறிக்கோள்களை மிகத் தெளிவாகப் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளன.

ஒற்றையாட்சி முறையை சொக்ஸி பாதுகாக்க விளைவதன் நோக்கம் என்ன? ஒற்றையாட்சி முறையானது, சிங்கள சமூகத்தில் நிலவும் யாப்பின் அடிப்படை பற்றிய கருத்தியலோடு தொடர்புடைய ஒரு விடயமாகும். அரசு பலமான ஒருமுகப்படுத்தப்பட்ட அதிகாரங்களைக் கொண்டுள்ளதாக இருப்பதோடு அதன் தலையாய கடமையாக சிங்கள இனத்தையும் பௌத்த சமயத்தையும் பாதுகாக்கக் கூடிய வகையிலான சிங்கள பௌத்த ஆதிக்கத்தை அரசியலில் பாதுகாத்துக்கொள்ளக்கூடியதாக அரசு அமைதல் வேண்டும் என்பது அரசு பற்றிய அவர்களின் கோட்பாடு. இக்கோட்பாட்டை ஆதரிப்பவர்கள் அரசாங்கத்தின் பிரேரணைகளை எதிர்ப்பார்கள் என்பது வெள்ளிடைமலை. இந்த ஒற்றையாட்சியும் அதன் சட்டரீதியான வெளிப்பாடாக உருவாகும் பெரும்பான்மையினர் ஆளும் ஜனநாயகமும்தான் இந்நாட்டின் இனவாத முரண்பாட்டிற்கும், தமிழர் பிரிந்து செல்ல வேண்டிய நிலைமையை அரசியல் ரீதியாக தோற்றுவித்தற்குமான பிரதான காரணிகளாகும் என்பதை உணரமுடியாதவரல்ல சொக்ஸி.

யாப்பியல் வல்லுனராகக் கருதப்படும் இவர், ஐ.தே.கட்சியின் இனவாத வேட்கையைப் பாதுகாத்துக்கொண்டு, அதே நேரத்தில் இன ஐக்கியத்தையும் பாதுகாத்துக் கொள்ளலாம் என எண்ணுகின்றாரோ என்னவோ. மாகாண சபைகள் முயற்சி தோல்வியுறுவதற்கான பிரதான காரணமே இந்த முரண்பாடு தான் என்பது இவர் அறியாதது அல்ல.

ஜனநாயக ஆட்சி என்பதை மக்களுக்காக மக்களால் ஏற்படுத்தப்படுகிற மக்களின் ஆட்சியென அமெரிக்காவின் முன்னைய ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் விளக்கினார். இதுவே மக்களாட்சி என அழைக்கப்படுகிறது. பிரசைகள் அனைவரும் சமமென்னும் ஜனநாயகக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டே மக்களாட்சி உருவாக்கப்படுகிறது. ஒரு பிரசைக்கு ஒரு வாக்கு என்ற சமத்துவத்தின் அடிப்படையில் தான் ஆட்சி அதிகாரத்திற்கான மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுகிறார்கள். இவ்வகையில் தெரிவு செய்யப்படுகிற பிரதிநிதிகள் பெரும்பான்மை பலத்தின் மூலம் தீர்வுகளை மேற்கொள்கிறார்கள். இப்பெரும்பான்மை பலமானது (எண்ணிக்கையில்) பெரும்பான்மை இனத்தினரின் பலமாகப் பயன்படுத்துவதற்கு அந்த ஒற்றையாட்சி முறை வழிவகுக்கின்றது. 1947ம் ஆண்டில் இலங்கை அரச யாப்பில் 29ம் சரத்தின் கீழ் சிறுபான்மை இனத்தினருக்கு எதிராக பாகுபாடுகளைத் தடுப்பதற்காக வழங்கப்பட்ட யாப்பியல் உத்தரவாதத்தை பாராளுமன்றம் மீறியமை, 1948ம் ஆண்டின் பிரசாவுரிமைச் சட்டத்தின் மூலம் மலையகத் தமிழர்களின் பிரசாவுரிமையை பலாத்காரமாக பறித்தெடுத்தமை, 1949ம் ஆண்டில் அவர்களின் வாக்குரிமையை பறிப்பதற்காக தேர்தல் சட்டத்தை திருத்தியமை, 1956ம் ஆண்டு தமிழர்களின் எதிர்ப்புகளை புறக்கணித்து 'சிங்களம் மட்டும் அரசகரும மொழி சட்டம்' நிறைவேற்றப்பட்டமை, 1978ம் ஆண்டு தமிழர்களுக்கெதிரான படுகொலை யுத்தத்தை அரசு பிரகடனப்படுத்தியதை சட்ட ரீதியாக நியாயப்படுத்தும் பயங்கரவாதத் தடைச்சட்டம் போன்ற இனவாத நடைமுறைகளுக்கு அங்கீகாரம் வழங்கியது இந்த ஒற்றையாட்சி முறைதான். சுருக்கமாக சொல்லப்போனால் டீ.எஸ்.சேனநாயக்காவிலிருந்து – சந்திரிகா குமாரணதுங்க வரை, இலங்கையின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற எல்லா அரசுத் தலைவர்களும் கடைப்பிடித்த சிங்கள இனச் சார்புத் தன்மைக்கு வழி சமைத்ததும் இவ் ஒற்றையாட்சித் தன்மையே. இது ஒற்றையாட்சி நிலவும் பல்லினப் பாங்கான நாடுகளில் காணப்படும் தனித்துவமான தன்மையாகும். சுதந்திர இந்தியாவில் இந்தி மொழியில் ஆதிக்கத்தை நிலை நாட்ட மேற்கொண்ட முயற்சிகள் இந்தி மொழி பேசாதவர்களினால் விடுக்கப்பட்ட சவால்களின் மூலம் தவிர்க்கப்பட்டது. இந்தி மொழியையும் இந்து மதத்தையும் விட இந்தியாவினதும் இந்தியர்களினது எதிர்காலத்தையும் பற்றிய கடமைப்பாடுடைய தலைமைகள் இந்தியாவில் தோன்றி இருந்ததன் காரணமாக அங்கு மொழிவாரியான மாநிலங்கள் உருவாக்கப்பட்டு பல்லினக் கலாசாரத்தை உறுதி செய்வதற்காக, மாநிலங்களில் சுயாட்சியையும், மத்தியில் கூட்டாட்சியையும் கொண்டதாக இந்தியாவின் ஒற்றையாட்சி முறை மாற்றியமைக்கபட்டது. ஆனால் இலங்கையின் இன உறவுகளை வலுப்படுத்தக்கூடிய வகையில் அரச கட்டமைப்பை சீர்திருத்துவதற்குப் பதிலாக ஒற்றையாட்சிக்கு எதிராக எழுந்த ஜனநாயகப் போராட்டங்களை இராணுவ ரீதியில் முறியடிக்க மேற்கொண்ட முயற்சிகளின் விளைவுகளை முழு நாடும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றது.

யுத்தத்தின் மூலம் பாரிய சீரழிவுகளுக்கு ஆளாகிய தமிழ் மக்கள் இந்த ஒற்றையாட்சியில் மீண்டும் நம்பிக்கை வைப்பார்கள் என்பது மிகவும் மடத்தனமானது ஆகும். உலகில் தத்தமது கலாச்சார தனித்துவங்களை பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டு மூவாயிரத்துக்கும் அதிகமான இன, மத, மொழி, கலாசார குழுக்கள் அமைப்பு ரீதியாக இயங்கி வருகின்றன. ஒற்றையாட்சி நிலவும் உலக நாடுகளில் பொருளாதார முரண்பாடுகளை விட இனத் தனித்துவம் சார்ந்த முரண்பாடுகள் பிரதான அரசியல் நிகழ்வுகளாக வளர்ந்து வருகின்றன. ஆனால் இக்குழுக்கள் வாழ்வதற்கு 200க்கும் குறைவான தேசிய எல்லைகளைக் கொண்ட நாடுகளே உள்ளன என்பதையும் மறந்து விட முடியாது.

இந்த ஒற்றையாட்சி முறைக்கு மாற்றீடாக கருத்தொற்றுமையை அடிப்படையாகக் கொண்ட ஜனநாயகத்தை உத்தரவாதப்படுத்தும் (Consensus Democracy) சமஷ்டி ஆட்சியின் மூலம் தான் தீர்வைக் காணமுடியும் என்பது, ஜனநாயக அரச யாப்பு தொடர்பான ஆய்வாளர்கள் கண்டுபிடித்த உண்மையாகும்.

இன்று உலகின் 75 சதவீதமான மக்கள் ஒன்றில் சமஷ்டி ஆட்சியமைப்பின் கீழ் அல்லது சமஷ்டி ஏற்பாடுகளைக் கொண்ட அமைப்பின் கீழ்தான் வாழ்ந்து வருகின்றார்கள். எனவே சொக்ஸி அவர்களுக்கு நாங்கள் கூறுவது என்னவென்றால், பேரினவாத நோக்கம் கொண்ட ஒற்றையாட்சி முறையை பாதுகாக்கும் உங்களது நோக்கத்தைக் கைவிட்டு கருத்தொருமித்த ஜனநாயகத்தை உத்தரவாதப்படுத்தக் கூடிய சமஷ்டி ஆட்சியை ஏற்படுத்த முன்வாருங்கள் என்பதாகும். இதன் மூலம் மட்டுமே இன, மொழி, மத, தனித்துவங்களை சமத்துவத்தின் அடிப்படையில் பாதுகாத்துக்கொள்ளும் அதேவேளையில், ஐக்கியத்தையும் வலுப்படுத்தகூடிய அரசியல் ஒருங்கிணைப்பையும் (Political Intergration) உறுதி செய்யமுடியும். யுத்தத்தின் மேலதிக விபரீதங்களையும் நாடு-பிரிவதையும் தவிர்த்து சமாதான சகவாழ்வை ஏற்படுத்த வழிசமைக்க முடியும்.

# மட்டுநகர்: உயிர் பிடுங்கும் மின்சார முட்கம்பிகள்!

முன்னைய காலங்களில் நடந்ததைப் போன்று இப்போதும் மட்டக்களப்பு நகரம் பகல் நேரங்களிலும் பொலிஸாராலும்: இராணுவத்தினராலும் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

படையினரின் இவ்வாறான நடவடிக்கைகளால் நகருக்கு தேவையின் நிமித்தம் வந்தோர் அரச அலுவலகங்களில் பணிபுரிவோர் உட்பட எல்லோரும் சொல்லொணாத் துயரங்களை அனுபவிக்க நேரிடுகிறது.

22ம் திகதி சனிக்கிழமையும் அதற்கு முன்னரும் சென்ற வாரத்தில் இரு தடவைகள் மட்டக்களப்பு நகரம் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இடையிடையே கேட்ட துப்பாக்கி வேட்டுக்களும் குண்டுச்சத்தங்களும் பொதுமக்களை இன்னும் அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது.

மட்டக்களப்பு நகருக்குள் வசிப்போரைத்தவிர ஏனையோரை வீடுகளில் எடுக்க வேண்டாமென பொலிஸாரால் பொதுமக்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர். மீறி யாராவது வீடுகளில் தங்க அனுமதிக்கப்பட்டால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் கூறப்பட்டுள்ளது

நகருக்குள்ளிருக்கும் அரசபடைகளின் காவலரண்களைச் சுற்றியுள்ள முட்கம்பிவேலிகளில் பகல் நேரங்களிலும் மின்சாரம் பாய்ச்சப்படுவதால் அவ்வீதிகளினூடே செல்லும் பாதைகளில் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இம்முட்கம்பி வேலிகளில் ஆடு: மாடு: நாய் போன்றவைகள் ஏற்கனவே முட்டுப்பட்டு மரணமான சம்பவங்கள் பல நிகழ்ந்துள்ளன. ஆனால் அண்மையில் வீதி திருத்த வேலைகளில் ஈடுபட்டிருந்த கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த ஒரு இளைஞர் அம்முட்கம்பி வேலியில் முட்டுப்பட்டு ஸ்தலத்திலேயே பலியானார். இன்னுமொரு இளைஞர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். மக்கள் செறிந்துவாழும் நகரின் மையப்பகுதியில் பகல் வேளைகளிலாவது இவ்வாறான நடவடிக்கைகள் தவிர்க்கப்படாவிட்டால் இன்னும் பல அப்பாவிகள் படையினரின் மின்சார முட்கம்பி வேலிகளில் தங்கள் உயிர்களை இழக்க வேண்டியேற்படும்.

மிக அண்மைக்காலமாக மட்டக்களப்பில் பாதுகாப்பு படையினரின் கெடுபிடிகள் அதிகரித்துள்ளதை காண முடிகிறது. குறிப்பாக வாழைச்சேனை மட்டக்களப்பு பிரதான வீதியிலுள்ள சோதனை நிலையங்களில் பொதுமக்கள் வயது வித்தியாசமின்றி தாக்கப்படுவது தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. இவ்வீதிகளிலுள்ள சோதனைச் சாவடிகளினூடாக பயணம் செய்வதற்கு பொதுமக்கள் அச்சம் கொண்டுள்ளனர்.

இதைவிட மட்டக்ளப்பு மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்துச்சபை மிகவும் மோசமான நிலையிலேயே காணப்படுகிறது. கிழக்கின் முதலாம் தர போக்குவரத்து சபையான இது பழைய ஒரு கராஜ் பொலவே தென்படுகிறது.

25 பஸ் வண்டிகளை வைத்துக்கொண்டு உள்ளூர்: வெளியூர் சேவைகளை நடத்துவதென்பது எவ்வாறு எனக் கேட்டார் இங்குள்ள ஒரு உயரதிகாரி. திடீர் திடீரென வரும் படையினர் இங்குள்ள பஸ்வண்டிகளை எடுத்துச் செல்கின்றனர். இராணுவ முகாமில் ஒரு பஸ் வண்டி தொடர்ந்தும் படையினரின் பாவனைக்காக உபயோகிக்கப்படுகிறது.

கொழும்பு போன்ற தூர இடங்களுக்கான பஸ் சேவையும் குறைக்கப்பட்டுள்ளது. இதைவிட பாலையடிவெட்டை; திக்கோடை; மணற்பட்டி; அம்பிளாந்துறை; கொக்கட்டிச்சேலை; வாகரை; கரவெட்டி போன்ற இடங்களுக்கான உள்ளூர் பஸ்சேவைகள் கூட நீண்ட நாட்களாக இடை நிறுத்தி வைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது இப்பிரதேச மக்கள் தங்கள் தேவைகளுக்காக பல மைல் தூரம் கால்நடையாக வந்தே செல்கின்றனர்.

ஆனால் அண்மையில் கல்முனை போக்குவரத்துச் சபைக்குள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த எட்டு பஸ் வண்டிகள் எரிக்கப்பட்ட போதும் சில நாட்களின் பின்னர் அமைச்சர் அஷ்ரப் பத்து புதிய பஸ் வண்டிககளை பெற்றுக் கொடுத்துள்ளார்.

போர் நடவடிக்கைகளினால் மட்டக்களப்பு போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான 31 பங்கள் இதுவரை எரிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

–குருஷேத்திரன்

# கிண்ணியா ப.நோ.கூ.ச இயக்குனர் சபையின் 'இயக்கம்'!

கிண்ணியா பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் தனது ஊழியரில் எட்டுப்பேரை மட்டும் ( குலுக்கல் முறையில் ?) தேர்ந்தெடுத்து வாரத்தில் நான்கு நாள் வீதம் மாதம் பதினாறு நாட்கள் வேலை செய்து அதற்குரிய சம்பளத்தை மட்டும் பெற்றுக் கொள்ளுமாறு சங்கத்தின் நலன் கருதிக் கேட்டுக் கொண்டுள்ளது.

இத்தனைக்கும் இவர்கள் நிரந்தர ஊழியர்கள். இவர்களில் மூவர் 1978ல் நியமனம் பெற்றவர்கள். நால்வர் 1983இலும், ஒருவர் 1991இலும் நியமனமானவர்கள். இந்த நிலைக்காளானவர்களில் ஒருவரான எம்.வை.எம்.மஹ்ரூப் என்பவர் கொள்வனவு உத்தியோகத்தர், பதில் பொது முகாமையாளர் பதவிகளையும் வகித்தவர். எம். பி. எம் பாஹிர் என்பவர் கிராமிய வங்கி முகாமையாளராகப் பணி புரிந்தவர். ஏனையோரான ஏ.சி.எம். நஸீர்(எழுதுவினைஞர்), ஏ.டபிள்யூ.பி.மொஹமட், ஏ.கே.எம்.ஜவ்பர், ஏ.ஜமால்தீன், ஜே.சக்காரியா, ஏ.எச்.மன்சூர்அலி(இவர்கள் அனைவரும் சேல்ஸ்மன்கள்) ஆவர். இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடிதத்தில் காட்டப்பட்ட காரணம், சங்கத்தின் விற்பனைப்பகுதி வருமானம் குறைந்துள்ளதால் ஏற்பட்ட நிதி நெருக்கடி என்பதாகும். நிதி நெருக்கடி தேர்ந்தெடுக்கப்பட்ட எட்டுப் பேரை மட்டும் பாதித்ததெப்படி என்று கொதித்தப் போயிருக்கிறார்கள் இவர்கள். நிரந்தர ஊழியர் மேல் இயக்குநர்சபை இவ்வாறான முடிவொன்றை மேற்கொள்ள முடியுமா என்பது ஒருபுறமிருக்க இவர்கள் எட்டுப்பேர் மட்டும் எவ்வாறு பொறுக்கி எடுக்கப்பட்டார்கள் என்பது புதிராக இருக்கிறது. கடந்த வருடம் நிதிநிலைமையைக் காரணம் காட்டி ஜே.ஏ.சுக்கூர், ஐ.ஏகூப், கே.அஸார்தீன், ஆர்.நசுர்தீன், எம்.ஸி.எம்.ஹஸன், யு.ஏ.சமட் ஆகிய ஆறு பேர் வேலை நீக்கம் செய்யப்பட்டனர்; ஆட்சேர்ப்பு நடைபெறும் போது முன்னுரிமை தரப்படும் என்ற உத்தரவாதத்தோடு. ஆனால் சிலவாரங்கள் ஆகு முன்னே ஊழியர்கள் பெருந்தொகையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அதில் நிறுத்தப்பட்ட எவருமே இடம் பெறவில்லை. ஊழியர்களின் வேலை நாட்குறைப்பு பதவி நீக்கத்தின் ஆரம்ப நிலையோ என ஐயுற வேண்டியுள்ளது. 1996 ஜூன் முதலாம் முதல் அமுலுக்கு வரும் இந்நடைமுறை நிதிநிலைமை சீரடைந்ததும் நீக்கப்படும் என்று வழங்கப்பட்ட கடிதத்தில் கூறப்பட்டிருந்தாலும் அதன்படி நிர்வாகம் நடக்கும் என்பதற்கு என்ன உத்தரவாதம் என்பதும் தெரியவில்லை. நிதிநிலைமைகளைப் பெருக்குவதற்கான வழிவகைகளை நிர்வாகம் தான் கண்டறிய வேண்டும். இருப்பதை இழுத்துக் கொண்டு போவதற்கு இயக்குனர் சபை தேவையில்லை. பணியாளர்களே போதும். தங்களது கையாலாகாத்தனத்தை ஊழியர்கள் மேல் காட்ட முனைவது கொடூரம். அதுவும் குறிப்பிட்ட ஊழியர்களைத் தேர்ந்தெடுத்துக் காட்டுவது கயமைத்தனம்.

-விவேகி

நூல்
வெளியீடும்,
வீமர்சனமும்
மு.பொ.வின்
'கடலும்
கரையும்'
(சிறுகதைத் தொகுதி)
தலைமை:
பேராசிரியர் கா.சிவத்தம்பி
விமர்சனம்:
க.சண்முகலிங்கம்
சோ.தேவராசா
சு.வில்வரத்தினம்
கே.எஸ்.சிவகுமாரன்
நன்றியுரை:
மு.பொன்னம்பலம்
இடம்:
இராமகிருஷ்ண மிஷன்
வெள்ளவத்தை
காலம்:
29.06.96
நேரம்:
5.00 மணி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இல. 04, ஐயரத்ன வீதி, திம்பிரிகஸ்யாய, கொழும்பு 05, தொலைபேசி : 593615.